# தமிழரசு

செப்டம்பர் 1-30, 2001







POLICE
TN 01 G 1219
TN·01·G·1239

## இந்த இதழில்...


- தமிழகமெங்கும் 'ஊட்டி தேயிலை' விற்பனை ........ 2
- ஊனமுற்றோர்க்கு உதவி ........ 4
- ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் ........ 5
- கட்டடங்கள் – மனைகள் ஒழுங்குபடுத்துதல் ........ 6
- கருகிடும் நெற்பயிரைக் காக்க கடிதம் ........ 7
- பட்டப்படிப்பு பயில உதவி ........ 8
- பொதுத் தொண்டின் மூலம் புதிய வரலாறு – பேரறிஞர் அண்ணா ........ 9
- அண்ணா கண்ட அன்புத் தத்துவம் – டாக்டர் எம்.ஜி.ஆர் ........ 15
- திருக்கோயில்களில் திருப்பணிகள் ........ 17
- பால் வளத்துறை ........ 20
- அண்ணா பிள்ளைத் தமிழ் ........ 23
- உலகத் தரத்திற்கு கல்வி ........ 25
- எம்.ஆர்.ஐ. ஸ்கேன் ........ 28
- அப்பாவின் சிநேகிதர் – சிறுகதை ........ 30
- மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தம் ........ 34
- காவிரி நதிநீர் பிரச்சினை ........ 37
- உலகத் தகவல் தொழில்நுட்ப வரைப்படத்தில் தமிழகத்திற்குச் சிறப்பான இடம் ........ 41
- மக்கள் நல்வாழ்வு ........ 49
- மொழிஞாயிறு ........ 53
- தகவல் தொழில்நுட்பம் ........ 55
- சுற்றுலா வளர்ச்சி ........ 57
- கால்நடை பாதுகாப்பு ........ 64
- வனவளம் ........ 65
- மீன்வளம் ........ 71
- ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன் ........ 73
- கிராமக் குடிநீர் ........ 75
- ஊரக வளர்ச்சி ........ 77


மண்ணில் மலர்ச்சி காண மகளிர்க்கே அதிகாரம்

மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டு
**Women's Empowerment Year 2001**


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032
ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 1–30, 2001
மலர் : 33 இதழ் : 5 & 6
விலை ரூ.10


*முதல் பக்க அட்டையில் :* **ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் விழா மற்றும் தகவல் தொழில்நுட்ப கண்காட்சி தொடக்க விழா**

*இரண்டாம் பக்க அட்டையில் :* **பெண் காவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் விழா**

*கடைசிப் பக்க அட்டையில் :* **பெரியார் - பேரறிஞர் அண்ணா**

# விபத்தில் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோர்க்கு உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.9.2001 அன்று தலைமைச் செயலகத்தில், கன்னியாகுமரி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், சென்னை உட்பட 12 மாவட்டங்களைச் சேர்ந்த, விபத்துக்குள்ளாகி மரணமடைந்த மற்றும் உடல்ஊனமுற்ற 62 மீனவர்களின் வாரிசுகளான 13 மீனவர் மற்றும் 49 மீனவ மகளிர் ஆகியோருக்கு மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டங்களின் கீழ் ரூ.31 இலட்சத்து 2500க்கான காசோலைகளை நேரடியாக வழங்கினார்.

தமிழக அரசு, மீனவர் மற்றும் மீனவ மகளிர் நன்மைக்காக, மீனவர் விபத்துக்குழு காப்புறுதி திட்டத்தின் கீழ் இரு வகையான



திட்டங்களையும், மீனவர் தனி நபர் காப்புறுதி திட்டத்தின் கீழ் இரு வகையான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. ஒரு மீனவர் அல்லது மீனவ மகளிர் இந்த நான்கு வகைத் திட்டங்களிலும் உறுப்பினராக சேர முடியும். இவ்வகையில் இந்த அனைத்து திட்டங்களின் கீழ் மீனவர்கள் இறந்தாலோ, முழுமையாக ஊனமடைந்தாலோ, ஆண்டு சந்தா தொகை அளவைப் பொறுத்து அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் வரை காப்புறுதித் தொகையும், குறைந்த பட்சமாக ரூ.50 ஆயிரம் வரை உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன், மீனவர் நலன் கருதி நிலுவையிலிருந்த அனைத்து இனங்களிலும் காப்புறுதித் தொகை உடனடியாக வழங்க வேண்டுமென்றும், இத்திட்டங்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பங்கள் மீதும் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு காப்புறுதித் தொகை உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டார். இதன்படி, கடந்த 20.6.2001 அன்று 32 மீனவர்/ மீனவ மகளிருக்கு 19.75 இலட்ச ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களது ஆணையை ஏற்று, கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், தருமபுரி, சென்னை ஆகிய 12 மாவட்டங்களைச் சேர்ந்த 62 பயனாளிகளுக்கு ரூ.31 இலட்சத்து 2500-க்கான காசோலைகளை 3.9.2001 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

கன்னியாகுமரி மாவட்டம், நீரோடி மீனவர் கூட்டுறவு சங்கத்தைச் சார்ந்த பிரான்சிஸ் விபத்தில் மரணமடைந்ததை யொட்டி அவருடைய துணைவியார் அந்தோணி அம்மாளுக்கு ரூ.4 இலட்சமும், தூத்தூர் மீனவர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த, விபத்தில் மரணமடைந்த



லிகோரி என்பவரது துணைவியார் திருமதி மேரி ஆஸ்டிக்கு ரூ.3 இலட்சத்து 65 ஆயிரமும் அதிகபட்ச காப்புறுதி தொகையாக வழங்கப்பட்டது. •

# அண்ணா பிறந்த நாளில் ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் திட்டம்

**— முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.9.2001 அன்று பேரறிஞர்அண்ணா அவர்களின் 93வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், சென்னை அண்ணா சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழகத்திலுள்ள அனைத்து மேல்நிலைப்பள்ளிகளில் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாய மாணவிகளுக்கு, தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் இலவச சைக்கிள் வழங்கும் திட்டம், சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. முதற்கட்டமாக, முதலமைச்சர் அவர்கள், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சார்ந்த 25 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்களை வழங்கினார்கள். இந்த தொடக்க விழாவில், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. வீ. சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சியின்போது அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலர் திரு. பி. சங்கர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் செயலர் திருமதி. ப. சிவகாமி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆணையர் திரு. சண்முகம் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.




இந்த திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து மேல்நிலைப்பள்ளிகளிலும் பயிலுகின்ற சுமார் 80,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் பயன்பெறுவார்கள். பெண் கல்வியை ஊக்குவிக்கும் தமிழக அரசின் இத்திட்டத்தினால் மாணவியர்கள் ஊக்கம் பெறுவதுடன் சமுதாயத்தில் சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடனும், துணிவோடும் செயல்பட ஒரு அடித்தளத்தை இந்த திட்டம் ஏற்படுத்தும் என்பது திண்ணம். இந்த திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ★



# கட்டடங்கள் - மனைகள்
## முறைப்படுத்தும் திட்டம்

சென்னை பெருநகர்ப் பகுதியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அனுமதியின்றி விதிமுறைகளை மீறி 31.7.2001 வரை கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற மனைகளை முறைப்படுத்தும் திட்டத்தை திருத்தங்களுடன் அரசு செயல்படுத்துகிறது. பொதுமக்கள் இதற்கான விண்ணப்பங்களை 30.11.2001 வரை வழங்கலாம் என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.ஏ.கே. செல்வராஜ் அவர்கள் 31.8.2001 அன்று அறிவித்தார்.

கடந்த ஆட்சியில் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் 30.8.2000 வரை விதிகளை மீறி/ அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற மனைகளை முறைப்படுத்த, விண்ணப்பங்கள் 31.12.2000 வரை பெறப்பட்டது. ஆனால், முறைப்படுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மிக அதிகமாக உள்ளது என்று தெரிவித்த பொதுமக்கள், இதனைக் குறைக்க வேண்டும் என்று கோரியதுடன், அதற்கேற்ப விண்ணப்பங்கள் பெறுவதற்குரிய கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். ஆனால், கடந்த கால ஆட்சியினர் இதற்கு செவிசாய்க்காமல், இத்திட்டத்தை 31.12.2000த்துடன் முடித்துக் கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, வீட்டுவசதித்துறை பற்றி நடத்திய ஆய்வுக் கூட்டத்தின் போது, பொதுமக்களின் இந்த கோரிக்கை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

பொதுமக்களின் கோரிக்கையை கவனமுடன் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள், இக்கோரிக்கை யிலுள்ள நியாயத்தை உணர்ந்து, திருத்தங்களுடன் இத்திட்டத்தை செயல்படுத்தவும், கட்டுமானம் தொடர்பாக, கட்டட விதி மீறல்களுக்கு மட்டும், 2000 ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களில்




10 விழுக்காடு குறைத்து தற்போது நிர்ணயிக்கவும் உத்தரவிட்டார்கள்.

இதற்கென தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டப்பிரிவு 113ஏ-ஐத் திருத்தி மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அரசால் 9.8.2001 அன்று வெளியிடப்பட்டது. 31.7.2001 வரை விதி மீறி அல்லது அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற மனைகள் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் முறைப்படுத்த தகுதியுள்ளவை. இதற்கான விண்ணப்பங்கள் 30.11.2001 வரை ஏற்கப்படும். இதற்காக முறைப்படுத்தும் திட்ட விதிகளுக்கு உரிய திருத்தங்கள் அரசால் தனியே வெளியிடப்படும். கட்டுமானம் தொடர்பாக 2000 ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களில் 10 விழுக்காடு கட்டட விதி மீறல்களுக்கு மட்டும், குறைக்கப்படும். ★

# கருகிடும் நெற்பயிரைக் காக்க கடிதம்

மாண்புமிகு **பாரத பிரதமர்** அவர்களுக்கு
மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
**14-9-2001** அன்று எழுதிய கடிதம்

**த**மிழ்நாட்டின் மேட்டூர் அணையில் உள்ள தண்ணீரின் அளவு குறைந்து கொண்டே வந்து, தற்போது மிகவும் குறைந்தபட்ச அளவான – Dead Storage என்ற அளவுக்கு வர உள்ளதையடுத்து, காவிரி நதி நீர் ஆணையம் என்ற அமைப்பின் தலைவர் என்கின்ற முறையில் தாங்கள் காவிரி நதி நீர் ஆணையத்தின் அவசர கூட்டம் **(Emergency Meeting)** ஒன்றினை கூட்ட வேண்டும் என்பதற்காக தங்களுடைய தனி கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.



எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, கடந்த **6.9.2001** அன்று கண்காணிப்புக் குழுவின் **9**வது அவசரக் கூட்டம் நடத்தப்பட்ட போது, காவிரி டெல்டா பகுதியில் தற்போது நிலவி வருகின்ற கவலைக்குரிய நிலைமையை பற்றி தமிழக அரசு விளக்கிக் கூறியது. இருப்பினும், அந்தக் கூட்டத்தில் வேறு எந்தவொரு முடிவும் எடுக்கப்படாமல், அடுத்த **5** நாட்களில் நிலைமையை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும் என்ற முடிவு மட்டும் எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தற்போது **8** நாட்கள் ஆகிவிட்ட போதும், கண்காணிப்புக் குழுவினால் வேறு எந்த அடுத்த கட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது.

**8.9.2001** அன்று நான் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவெடுத்தவாறு, கடந்த **10.9.2001** அன்று, அனைத்துக் கட்சித் தலைவர்களும் அடங்கிய குழு ஒன்று தங்களை சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தது. தாங்கள் அப்போது கர்நாடக மாநில அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையை கொண்டு செல்வதாக பரிவோடு உறுதி அளித்தீர்கள். இதனையடுத்து **11.9.2001** அன்று இந்த குழு மரியாதைக்குரிய இந்திய குடியரசு தலைவர் அவர்களையும் சந்தித்து, தற்போது காவிரி டெல்டா பகுதியில் கருகி வருகின்ற குறுவை நெற்பயிரை பாதுகாப்பதற்கு அவருடைய உதவியை நாடி கோரிக்கை மனு ஒன்றை அளித்தது. தற்போது, தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதியில் நிலவி வருகின்ற நிச்சயமற்ற, ஆபத்தான நிலைமையையும், தங்களுடைய பயிர்கள் காய்ந்து வருவது குறித்து ஏதும் செய்ய முடியாமல் பார்த்து கொண்டும் மற்றும் பொருளாதார அழிவினை எதிர்நோக்கியும் இருக்கின்ற, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளின் துன்பகரமான சூழ்நிலையையும் தாங்கள் நன்கு அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த பொருளாதார நிலையில், இந்த பிரச்சினை ஏற்படுத்துகின்ற பாதிப்பு மிகவும் கடுமையானதாக இருக்கும். தற்போது பயிரிடப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் ஏற்படும் இழப்போடு, அடுத்த நெற்பயிர் பருவமான சம்பா நெற்பயிரின் விளைச்சலும் மிகவும் மோசமானதாக இருக்கும் என்று தோன்றுகின்றது. தண்ணீர் இல்லாமல், நாற்றங்கால்களை பயிரிட்டு வளர்க்கின்ற பணியும் தண்ணீர் இல்லாமல் தற்போது பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது.

கர்நாடக மாநிலத்தில் **13.9.2001** அன்று மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில் கர்நாடகா தமிழ்நாட்டுக்கு தற்போது தண்ணீரை திறந்து விட முடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளதை பத்திரிக்கை செய்திகள் வாயிலாக நாங்கள் அறிகிறோம். நாங்கள் இதற்கு மேலும் காத்திருந்து முக்கிய மான காலத்தை இழந்து விட முடியாது.

நாங்கள் ஏற்கெனவே தங்களுக்கு அளித்துள்ள கோரிக்கை மனுவில் கேட்டுக் கொண்டுள்ளபடி, அக்டோபர் மாதம் இறுதி வரை தினமும் **1** டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும் என்ற தமிழ்நாட்டின் வேண்டுகோள் குறித்து விவாதிப்பதற்காக, காவிரி நதி நீர் ஆணையத்தின் அவசரக் கூட்டம் ஒன்று உடனடியாக கூட்டப்பட வேண்டும். தற்போது தமிழகத்தில் நிலவி வருகின்ற அசாதாரணமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு காவிரி நதி நீர் ஆணையம் (கூட்டம் நடத்துதல் பற்றிய விதிகள்) **1998**ன் பிரிவு VII (i)–ல் கூறியுள்ளபடி கூட்டம் கூட்டப்படுவதற்கான கால அவகாசத்தை தளர்த்தி, இந்த அவசரக் கூட்டத்தை உடனடியாக நடத்த வேண்டும் என்று நான் தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★

# பட்டப்படிப்பு படிப்பதற்கு நிதி உதவி

தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளிலும், மருந்தியல், செவிலியர் பட்டப்படிப்பு, கால்நடை அறிவியல் பட்டப்படிப்பு மற்றும் இளங்கலை செயல்முறை மருத்துவம் (B.O.T.) ஆகிய உயர்கல்வி பட்டப்படிப்பு பயில இடம் கிடைத்தும் அங்கு சேருவதற்கு போதிய நிதி வசதி இல்லாமல் தவித்த 11 ஏழை மாணவ மாணவிகளுக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை "முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"யிலிருந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 7.9.2001 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

சென்னையைச் சார்ந்த மாணவ-மாணவிகள் வி. ராஜகோபால், எஸ். சாந்தி மற்றும் சிதம்பரம் எஸ். அனிதா, முசிறி டி. சக்திவேல், கோவை பாப்பநாயக்கன் பாளையம் எம்.பூர்ணிமாதேவி ஆகியோர் பொறியியல் கல்லூரிகளில் பயிலவும், உத்திரமேரூர் வி. பிரபு, ராஜபாளையம் சி. குருசுப்பிரமணியம் ஆகியோர் மருந்தியல் பட்டப்படிப்பு பயிலவும், ஸ்ரீபெரும்புதூர் ஜெ. கிரிஜா, நெல்லை அம்பாசமுத்திரம் பீ. பாஸ்டின் புஷ்பராணி ஆகியோர் செவிலியர் பட்டப்படிப்பு பயிலவும், அரியலூர் மாவட்டம் ஏ.மணிகண்டன் கால்நடை அறிவியல் பட்டப்படிப்பு பயிலவும், திருக்கோவிலூர் கே. கார்த்திகேயன் இளங்கலை செயல்முறை மருத்துவம் பயிலவும் கல்லூரிகளில் இடம் கிடைத்து போதிய நிதிவசதி இல்லாமல் கல்லூரிகளில் சேர முடியாமல் தவிப்பதாக குறிப்பிட்டு உதவி கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனு அளித்திருந்தனர்.

இவர்களது குடும்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மனுவினை பரிவுடன் பரிசீலனை செய்த முதலமைச்சர்அவர்கள் பொறியியல், செவிலியர், மருந்தியல், கால்நடை அறிவியல் மற்றும் இளங்கலை செயல்முறை மருத்துவம் ஆகிய பட்டப்படிப்பு படிப்பதற்காக 11 மாணவர்களுக்கும் தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் "முதலமைச்சர் பொது நிவாரண நிதி"யிலிருந்து வழங்க அனுமதி அளித்தார்கள். இதன்படி மேற்கண்ட 11 மாணவ மாணவிகளுக்கும் மொத்தம் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் 7.9.2001 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

நிதியுதவியைப் பெற்று கொண்ட மாணவ மாணவிகள் தாங்கள் தொடர்ந்து கல்வி பயிலுவதற்காக தக்க நேரத்தில் தங்களுக்கு நிதியுதவி வழங்கி தங்களது கல்வி தொடர வழி அமைத்து கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ★

# பொதுத் தொண்டின் மூலம் புதிய வரலாறு

**- பேரறிஞர் அண்ணா**

பெரியார் அவர்கள் இன்று 89–வது வயதில் அடியெடுத்து வைக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில், அவர்கள் நமக்கு இதுவரையில் ஆற்றியிருக்கிற தொண்டிற்கு – அவர்களால் தமிழகம் பெற்றிருக்கிற நல்ல வளர்ச்சிக்கு – பெயருக்கு – அவர்களுக்கு நாம் நம்முடைய மரியாதையை, அன்பை, இதயத்தைக் காணிக்கையாக்குவதற்காக இங்கே கூடியிருக்கிறோம்.

பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ளும் நேரத்தில் இங்கே நடந்த ஊர்வலமும் விழாவும் வேடிக்கையும் பெரியார் அவர்களுக்கு நம்முடைய வணக்கத்தைத் தெரிவிப்பதற்காகத்தான் என்று எண்ணுவது நம்முடைய கடமையாகும்.

தமிழகத்திற்கும், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும் இன்னும் உலகத்திற்கே கூட என்றும் சொல்லலாம். அவர்கள் செய்திருக்கிற அரிய பெரிய காரியங்கள், ஆற்றியிருக்கிற அருந்தொண்டுகள், ஏற்படுத்தியிருக்கின்ற புரட்சி உணர்ச்சிகள், ஓடவிட்டிருக்கிற அறிவுப் புனல் தமிழகம் என்றுமே கண்டதில்லை.

இதற்குப் பிறகும் இப்படிப்பட்ட மாபெரும் புரட்சி வேகத்தை நாம் பார்க்கப் போவதில்லை.

அப்படிப்பட்ட வரலாற்றில் பொறிக்கத்தக்க புதிய வரலாறு என்று கருதும் நிலைமையை அவர்கள் தம்முடைய பொதுத் தொண்டின் மூலம் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

### பெரியார் ஒரு போர் வீரர்

பிறந்த நாள் கொண்டாடுகிற நேரத்தில் என்னுடைய நினைவுகள் திராவிடர் கழகமாகவும் அதற்கு முன்னால் தமிழர் இயக்கமாகவும், சுயமரியாதை இயக்கமாகவும் இருந்த நேரங்களில் அவர்களோடு இணைந்திருந்து பணியாற்றிய பல எண்ண அலைகளை நெஞ்சில் ஓடவிட்டுக் கொண்டிருக்கின்றேன்.

எத்தனை இரவுகள், எத்தனை பகல்கள், எத்தனை காடுமேடுகள், எத்தனை சிற்றாறுகள், எத்தனை பேராறுகள், எத்தனை மாநாடுகள் என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில், ஒரு போர் வீரன் களத்தில் புகுந்து 'இந்தப் படையை முறியடித்தேன், அந்தப் படையை வென்றேன்' என்று காட்டி, மேலும் மேலும் செல்வதைப் போல, அவர்கள் வாழ்நாள் முழுவதும் களத்தில் நிற்கிற ஒரு மாபெரும் போராட்டமாகும்.

### பெரியாரின் முதல் போராட்டம்

முதல் போராட்டம் அவர்கள் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

செல்வக் குடியில் பிறந்தவர் அவர்.

தம்முடைய செல்வத்தை – செல்வாக்கைக் கொண்டு ஊரை அடக்கி, போக போக்கியத்தில் மிதந்து மகிழ்ந்திருக்கலாம். அப்போதிருந்தவர்கள் பலரும் கூட, அப்படிப்பட்ட வாழ்க்கையில் இருந்தார்கள்.

அப்படிப்பட்ட வாழ்க்கையிலிருந்து தம்மைத் தனியாக்கிக் கொண்டு–தம்மைப் பிரித்துக் கொண்டு– ''என்னுடைய செல்வம் எனக்கில்லை, என்னுடை செல்வத்தைக் கொண்டுபோக போக்கியத்தில் திளைக்கப் போவதில்லை, பொது வாழ்க்கையில் ஈடுபடப் போகிறேன்'' என்று எண்ணிய நேரத்தில் அவர்களுக்கிருந்த செல்வமும், அவருடைய குடும்பத்திலிருக்கின்ற செல்வாக்கும், அதனால் அடையக்கூடிய சுகபோகங்களும் அவர்கள் மனத்தில் ஒரு கணம் நிழலாடியிருக்க வேண்டும்.



அப்போது உள்ளத்தில் நிச்சயமாக ஒரு போராட்டம் எழுந்திருக்க வேண்டும்.

''செல்வத்தில் புரளலாமா அல்லது வறுமையில் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு என்னை நான் ஒப்படைப்பதா?'' என்ற போராட்டத்தில், தொண்டு உள்ளத்தில் வெற்றி அடைந்தார்.

''செல்வத்திற்காக அல்ல நான்; சுக போகத்திற்காக அல்ல நான். என்னிடத்தில் உள்ள அறிவு, உழைப்புத்திறன், மக்களுக்குத் தேவை. தமிழகத்திற்கு மட்டுமல்ல– என்னிடத்தில் அமைந்திருக்கிற பகுத்தறிவு யாவும் தமிழகம் முடிந்தால் இந்தியா முழுவதற்கும் தேவை –



வசதிப்பட்டால் உலகிற்கே தேவை! வீட்டை மறப்பேன் – செல்வத்தை மறப்பேன் – செல்வம் தரும் சுக போகங்களை மறப்பேன்'' என்று துணிந்து நின்று அந்தப் போராட்டத்தில் முதன்முதலில் வெற்றி பெற்றார்.

### பெரியாரின் முதல் வெற்றி

இதில் பிரமாதம் என்ன இருக்கிறது என்று எண்ணக்கூடும் செல்வம் இல்லாதவர்கள்.

செல்வம் உள்ளவர்கள், அவற்றை விட்டுவிட்டு வெளியே வருவது ஒரு புறம் இருந்தாலும், ஒருவர் கையில் ஒரு பலாப்பழத்தை கொடுத்து ஒரு மணி நேரம் அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்றால், வைத்திருப்பவர் வாயில் நீர் ஊறும். நேரம் செல்லச் செல்ல, பலாச் சுளையில் மொய்த்துக் கொண்டிருக்கிற ஈயோடு சேர்த்துச் சாப்பிட்டு விடுவார்களே தவிர பார்த்துக் கொண்டே இருக்கமாட்டார்கள்.

பெரியார் அவர்களது குடும்பத்தின் நிலை எப்படிப்பட்டது?

எந்தப் பக்கம் திரும்பினாலும் குடும்பச் செல்வாக்கு! எந்தப் பக்கத்திலே திரும்பிப் பார்த்தாலும் வாணிபத்தில் ஆதாயம்; நிலபுலன்கள்; வீடு வாசல்கள்!

இவை எல்லாவற்றையும் பார்த்து, ''இவை எனக்குத் தேவையில்லை'' என்றார்.

''என் நாட்டு மக்களுக்கு–அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் நாட்டு மக்களுக்கு–நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப் போயிருக்கும் மக்களுக்கு – வேறு ஒரு செல்வத்தைத் தருவேன், அறிவுச் செல்வத்தைத் தரப்போகிறேன், சிந்தனைச் செல்வத்தைத் தரப் போகிறேன், பகுத்தறிவுச் செல்வத்தைத் தரப் போகிறேன், அவற்றை ஏற்று நடக்கத் தக்க துணிவைத் தரப் போகிறேன், அதைத் தடுக்க எவரேனும் குறுக்கிடுவார்களானால் அவர்களுடைய ஆற்றலை முறியடிப்பேன்!''

– இதுதான் என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள் என்று அவர்கள் கிளம்பினார்கள்.

– அதுதான் வாழ்க்கையின் முதல் போராட்டத்தில் அவர் பெற்ற வெற்றி1

அதற்குப் பிறகு அவர்கள் சந்தித்த ஒவ்வொரு களத்திலேயும் வெற்றிதான் கிடைத்திருக்கிறது.

அந்த வெற்றிகள் எல்லாம் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற காரியங்களுக்குப் போதுமானதாக அமையவில்லை என்று சிலர் சொல்லலாம். ஒப்புக் கொள்கிறேன்.

அந்த போராட்டத்திற்கான இன்றைய தினம் சூழ்நிலை என்ன, எந்த நிலைமையில் மொழிப் பிரச்சினை வந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

**1934–35–36**ஆம் ஆண்டுகளில் இந்தியை அவர்கள் ஆட்சிமொழி என்று அல்ல, இணைப்பு மொழி என்று அல்ல, தேசிய மொழி என்று அழைத்தார்கள். 'இந்தத் தேசத்திற்கென்று ஒரு மொழி உண்டு. அதுதான் இந்தி. இந்தத் தேசத்திற்கு இருக்கத்தக்க தேசிய மொழி இந்திதான்' என்று 1935–ல் அவர்கள் சொன்னார்கள்.

பெரியார் அவர்களின் போர்முறையின் தன்மை உங்களிலே பலருக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன்.

அவர்கள் எதிரில் உள்ள படையை மட்டுமல்ல, முதலிலே அப்படைக்கு எங்கே மூலபலம் இருக்கிறது என்று கண்டுபிடித்து அந்த மூல பலத்தைத் தாக்குவதுதான் அவருடைய போர் முறையாகும்.

**பெரியாரின் இந்தி எதிர்ப்பு**

இந்தியைக் கொண்டு வந்தவர்கள் இந்தியைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதி, தேசியத்தையும் இந்தியாவையும் உடைத்து விடக்கூடாது என்று – தேசியம் என்று சொல்லியதை மாற்றிக் கொண்டு – இந்தியாவில் தேசிய மொழிகள் பதினான்கு இருக்கின்றன – அதில் ஒன்றுதான் இந்தி – ஆனால் இந்தி பெரும்பாலானவர்கள் பேசுவதால் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அப்போது பெரியார், 'ஆட்சிமொழி என்பது பின்னால் இருக்கட்டும்; உங்களுடைய ஆட்சியின் இலட்சணம் என்ன, யார், யாரை ஆள வேண்டும் – எதற்காக ஆள வேண்டும்' என்று ஆட்சி முறையைப் பற்றி அவர்கள் தாக்க ஆரம்பித்தார்கள்.

உடனே இந்தியை ஆதரிக்கிறவர்கள் ஆட்சி மொழி என்பதை விட்டுவிட்டு – ஓர் இணைப்பு மொழியாக இருக்கட்டும் என்று நேசம் கொண்டாடுகிறார்கள்; பாசம் காட்டுகிறார்கள்; சொந்தம் கொண்டாடுகிறார்கள்.

நாம் இணைந்திருக்க வேண்டாமா ? அதற்கு இணைப்பு மொழி தேவையில்லையா ? என்று வலிய வலியக் கேட்கிறார்கள்.

தேசியத்திலிருந்து நழுவி, இன்று இணைப்பு மொழி என்ற இடத்திற்கு இந்தி வந்ததற்கு மிகப் பெரிய காரணம் – பெரியார் அவர்கள் நடத்திய அறப்போராட்டம் தான்.

இருபது ஆண்டுகளில்...

மொழிப் பிரச்சினை, பெரியார் அவர்களைப் பொறுத்தவரையில் மிகச் சாதாரணப் பிரச்சினை.

அவர்கள் முக்கியமாகக் கருதுவது–தமிழ்நாட்டு மக்களிடையே மனிதத்தன்மை வரவேண்டும்.

மற்றவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற காட்டுமிராண்டித்தனமான கொள்கைகள், நாட்டைக் காடாக்கத்தக்க கொள்கைகள், மனிதனை விலங்காக்கத்தக்க கொள்கைகள், வெளியுலகத்தாராலே இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே உதறித் தள்ளப்பட்ட உருப்படியற்ற கொள்கைகள் மறைய வேண்டும்.

இவை நீக்கப்பட்டு தமிழக மக்கள் துல்லியமான மனத்துடன் தூய்மையான எண்ணத்தில் – செயல்திறனில் – பகுத்தறிவாளர்களாக, பண்பாளர்களாகத் திகழ வேண்டும்; அதற்கு ஓர் அறிவுப் புரட்சி தேவை என்பதிலே பெரியாரின் நாட்டம் அமைந்திருக்கிறது.

அந்த நாட்டத்தின் உருவகம்தான் பெரியார் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

எந்த நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய செயல்களை, இருபது ஆண்டுகளில் அவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள்.

ஐரோப்பாக் கண்டத்தை எடுத்துக் கொண்டால், நாட்டினுடைய விழிப்பிற்கு 50 ஆண்டுகள் – அமைந்த அரசியல் ஆட்சியை மாற்றுவதற்கு 50 ஆண்டுகள் – என்ற அளவில் ஒரு பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக – ஒரு வால்டேர், ரூசோ இப்படித் தொடர்ச்சியாகப் பலர் வந்து வந்து இரண்டு மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டுப் பாடுபட்டுதான் பகுத்தறிவுப் பாதையில் அந்த நாடுகள் செல்ல முடிந்தன.

**"என் நாட்டு மக்களுக்கு - அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் நாட்டு மக்களுக்கு - நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப் போயிருக்கும் மக்களுக்கு - வேறு ஒரு செல்வத்தைத் தருவேன், அறிவுச் செல்வத்தைத் தரப்போகிறேன், சிந்தனைச் செல்வத்தைத் தரப் போகிறேன், பகுத்தறிவுச் செல்வத்தைத் தரப் போகிறேன், அவற்றை ஏற்று நடக்கத் தக்க துணிவைத் தரப் போகிறேன், அதைத் தடுக்க எவரேனும் குறுக்கிடுவார்களானால் அவர்களுடைய ஆற்றலை முறியடிப்பேன்!"**

இப்படி இரண்டு மூன்று நூற்றாண்டுக்ளில் செய்ய வேண்டிய செயல்களைப் பெரியார் அவர்கள் இருபதே ஆண்டுகளில் செய்துமுடிக்க வேண்டுமெனக் கிளம்பினார்கள். திட்டமிட்டார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

ஆங்கிலத்தில் சொல்வார்கள் – "புட்டிங் செஞ்சுரிஸ் இண்டு கேப்சல்ஸ்" (Putting Centuries into Capsules) என்று.

சில மருந்துகளை உள்ளடக்கிச் சில மாத்திரைகளிலே இருபது ஆண்டுகளை அடைத்து, அவர்கள் தம்முடைய வாழ்நாளிலேயே சாதித்துத் தீரவேண்டும் என்ற – வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற – அறிவோடும் உணர்ச்சியோடும் நெஞ்ச ஊக்கத்தோடும் – யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதைக் கூட இரண்டாந்தரமாக வைத்துக்கொண்டு – எந்த அளவு முன்னேறுகிறோம் என்பதைக் காண்பதிலேயே பெரியார் அவர்கள் – வாழ்க்கை முழுவதும் போராட்டக் களத்தில் நின்றிருக்கிறார்கள்.

## வாழ்நாள் முழுவதும் எண்ணி மகிழத் தக்கவை

அந்தப் போராட்டக் களத்தில் அவர் நின்றிருந்த நேரத்தில், சில பகுதிகளில் நான் உடனிருந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் கல்லூரியை விட்டு வெளியே வந்ததும், முதலில் அவரிடத்தில்தான் சிக்கிக் கொண்டேன்.

நான் சிக்கிக் கொண்டது வாலிபப் பருவத்தில்!

எங்கெங்கோ போய்ச் சிக்கிக் கொண்டிருக்க வேண்டியவன், அவரிடத்தில்தான் முதன்முதலில் சிக்கிக்கொண்டேன்.

நான் காஞ்சிபுரத்தில் – கல்லூரியில் படித்த படிப்பையும், அதன் மூலம் என்னென்ன எண்ணங்கள் ஏற்படுமோ அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு ஈரோட்டில் போய்க் குடியேறினேன்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது – இதுபற்றி என்னுடைய பாட்டியார் அப்போது அடிக்கடி அவரை ஒத்த மூதாட்டிகளோடு பேசும்போது சொல்வார்கள் – ஆறு மாதங்களுக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காஞ்சிக்குச் செல்கின்ற நேரங்களில் அவர்கள் என்னைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லும்போது – ''யாரோ ஈரோட்டிலிருந்து வந்த ஒருவன் என்னுடைய பிள்ளையைப் பிடித்துக் கொண்டு போய்விட்டான்'' என்று பேசுவார்கள்.

அவர்களே ஒரு தடவை காஞ்சிபுரத்தில் ஆடிசன்பேட்டையிலே நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பெரியார் அவர்களுடைய பேச்சைக் கேட்ட பிறகு சொன்னார்கள் என்னைப் பார்த்து, ''நீ ஈரோட்டிலேயே இரு'' என்று.

இத்துணைக்கும் அவர்களுக்கு அதிகமாய்ப் படிப்பு அறிவு இல்லை. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், தொடக்க காலத்தில் – அவரிடத்தில் இருந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பலப்பல இருக்கின்றன.

என்னுடைய வாழ்நாள் முழுவதும் எண்ணி எண்ணி மகிழத்தக்கவை அவை.

இப்போது எனக்குக் கிடைத்திருப்பது – இனி எனக்குக் கிடைக்கக் கூடியது என்று எந்தப் பட்டியலைக் காட்டினாலும் – நான் ஏற்கெனவே பெற்றிருந்தவற்றைவிட, இவை எதுவும் மகிழ்ச்சியிலோ பெருமையிலோ நிச்சயமாக அதிகமானவையாக இருக்க முடியாது.

## மனச் சேற்றைத் துடைத்தெறிந்தார்

அவரிடத்திலே அப்போது ஓடாது என்று கருதிய காரணத்தால் தரப்பட்ட ஒரு ஃபோர்டு மோட்டார் இருந்தது.

அதிலேதான் நானும் அவரும் ஏறிக்கொண்டு செல்வோம்.

ஏறிக்கொண்டு செல்வோம் என்று சொல்வதற்குக் காரணம், அது சில நேரத்தில் ஓடாது – பிடித்து தள்ளவேண்டும்.

அந்த மோட்டாரில் கிளம்பிய நேரம், தமிழகத்தில் நீதிக்கட்சி அடியோடு தரைமட்டமாக்கப்பட்ட நேரம்.

இனிக் காங்கிரசுக்கு எதிராக மாற்றுக் கட்சி உண்டாகவே முடியாது என்ற நிலைமை ஏற்பட்டபொழுது, நீதிக் கட்சியின் தலைவராகப் பெரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டே ஆண்டில் அந்த நீதிக்கட்சி என்ற அரசியல் இயந்திரத்தைச் சுயமரியாதை இயக்கம் என்ற ஓர் இஞ்சினோடும் (இழுவையோடும்) பூட்டி மிக வேகமாக அதை இயக்கத் தொடங்கினார் அவர்.

இதே திருச்சியில் புத்தூர் மைதானத்தில் (திடலில்) திராவிடர் கழக மாநாடு ஒன்று நடைபெற்ற நேரத்தில், மறுநாள் காலை மாநாடு. அன்று இரவு மிகப் பெரிய மழை. அதனால் கொட்டகை முழுவதும் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் தேங்கியிருந்தது.

பெரியார் அதைப் பார்த்து, அவருடைய தொண்டர்களை அழைத்து, "இப்படியிருக்கிறதே, நாளை மாநாடு நடக்குமா?'' என்று கேட்டார்கள். அதற்கு அத்தொண்டர்கள் நடக்கும் என்றார்கள்.

அப்படியே காலையில் நடந்தது. தண்ணீரிலா என்றால் இல்லை. தொண்டர்களின் உழைப்பினால் தண்ணீர் இறைக்கப்பட்டு, மணல் தூவப்பட்டுக் காலையில் மாநாடு வெற்றிகரமாக நடந்தது.

இதை நான் சொல்வதற்குக் காரணம், முழங்கால் அளவுக்குச் சேறு இருந்த இடம் பக்குவப்படுத்தப்பட்டதைப் போல, தமிழ் மக்களின் மனத்தில் ஊறிப் போயிருந்த சேற்றை பெரியார் துடைத்தெறிந்தார். தமது வாழ்நாளிலேயே அதை முடித்தார்.

**20** ஆண்டுகளுக்கு முன்பு அவர்களோடு நான் வடநாட்டுக்குச் சென்றிருந்த நேரத்தில், வடநாட்டில் உள்ள பல தலைவர்கள் இந்தியப் பேரரசில் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர்கள் எல்லாம் பெரியாரைப் பார்த்து, "பெரியார் அவர்களே, உங்களை இன்னுமா விட்டு வைத்திருக்கிறார்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்குப் பெரியார் அவர்கள், ''நான் என்ன தவறு செய்தேன்? எதனால் எனக்கு ஆபத்து வரப்போகிறது?'' என்று சொல்லிய நேரத்தில், ''நீங்கள் பேசுவதில் பத்தாயிரத்தில் ஒரு பகுதியை – நீங்கள் செய்வதில் ஆயிரத்தில் ஒரு பகுதியை – நாங்கள் சொன்னாலும் செய்தாலும் எங்களை அடியோடு அழித்திருப்பார்கள்; நீங்கள் எப்படித் தப்பிப் பிழைக்கிறீர்கள்?'' என்று சொன்னார்கள்.

அப்படிக் கேட்கும் அளவுக்கு வீரம் மிக்க காரியங்களை – நடத்திக் காட்ட முடியாத காரியங்களை நடத்திக் காட்டி, அதில் பெற்ற வெற்றிகளை நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்.

அவர் சாதித்த காரியங்கள் மிகப் பெரியவை என்றாலும், அவர் துணையோடு நாம் சாதிக்க வேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன.

ஒரு பெரிய மலை பிளக்கப்பட்டிருக்கிறது. கற்பாறைகள் எல்லாம் கீழே உருண்டு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் பக்குவப்படுத்தி, அவற்றை எந்தெந்த வடிவங்களிலே நாம் செதுக்க வேண்டுமோ, அதில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.



பெரியார் அழைக்கிற அழைப்பைக் கேட்காத தமிழ் மக்கள் என்றுமே இருந்ததில்லை. அவர்கள் கூப்பிடும் குரலுக்கு ஓடிவரத் துடிக்காத இளைஞர்கள் இருந்ததில்லை.

அப்படிப்பட்ட மாபெரும் தலைவருடைய 89ஆவது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மிகுந்த பெருமைப்படுகின்றேன்.

என்னுடை நண்பர்கள் என்னை இவ்விழாவிற்குத் தலைமை ஏற்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், திராவிடர் கழகம் நடத்துகிற இந்த விழாவில் தலைமை வகிக்க வேண்டுமென்று கேட்டார்கள் – அவர்களுக்குத் திராவிடர் கழகத்தின் வரலாறு தெரியாத காரணத்தால்!

திராவிடர் கழகம் என்று பெயர் வைத்தவன் நான்தான். அதைக் கொண்டு நாட்டிலே பெரிய புரட்சியை உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கை நிரம்பப் பெற்றவன் நான். ஆகையினாலே நான் இங்கே தலைமை வகிப்பது, இயற்கைக்கு மாறானதல்ல!

## நினைத்தாலே தைரியம் பிறக்கும்

ஏன் அவ்வளவு காலம் பெரியார் வாழ வேண்டுமென்று சொல்கிறோம் என்றால், அவர்களை மறக்கிற நேரத்தில் நம்மை அறியாமல் ஒரு பலவீனம் வருகிறது.

அவரை எண்ணிக் கொள்கிற நேரங்களில் நமக்குத் தைரியம் வருகிறது.

அவர் இருக்கிறார் என்ற நினைவு வரும்போது, பரவாயில்லை பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியம் நமக்கு வருகிறது.

அந்த நினைவு அரசியல் துறையிலே உள்ள என் போன்றோருக்கு மட்டுமல்ல – வணிகத் துறையில் தமிழர்கள் சங்கடப்படும் போது பெரியாரைத்தான் எண்ணிக் கொள்கிறார்கள்.

பெரியார் சொல்லுகிறபடி நடந்தால் நாம் பிழைக்க முடியும் என்று தமிழ்ப் புலவர்கள் கருதுகிறார்கள்.

பெரியார் சொல்லுகிறபடி நடந்துகொண்டால்தான் நமக்கு மதிப்புக் கிடைக்கும் என்னும் அரசியல்வாதிகளைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை.

இன்றைய தினம் பெரியாருடைய குடும்பத்தில் – ஒரு பெரிய குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் பிறந்து, ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு திக்கிற்குச் சென்று, நான் இந்தத் திக்கில் போய் இதைக் கொண்டு வந்தேன் – அண்ணன் அந்தத் திக்கிலே போய் அதைக் கொண்டு வந்தான் என்று சொல்வதைப் போல அவருடைய பிள்ளைகள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். எந்தக் கட்சியில் அவர்கள் இல்லை?

## பெரியாரின் பிள்ளைகள்

எந்தப் பிள்ளையும் ஒருவருக்கொருவர் சோடை போனவர்கள் அல்லர்.

அவர்கள் எதை எதைப் பெறவேண்டுமென்று கருதுகிறார்களோ, அதைப் பெற்றுக் குடும்பத்தில் நடக்கிற விழாவில் அவர்கள் பெற்றவற்றைப் பெரியாரிடம் காட்டி, இதோ பாருங்கள் நான் பெற்றது என்று ஒவ்வொருவரும் காட்டும்போது, உரிய புன்னகையோடு அவற்றைப் பார்த்து, நான் கேட்டது இது அல்லவே என்கிறார்கள்.

அவர்கள் கேட்டதைப் பெற்றுத் தரத்தக்க ஆற்றல், யாரிடத்திலும் இல்லை.

ஆனால், அதைப் பெற்றுத் தரும் பொறுப்பு அவர்களிடத்தில் தான் இருக்கிறது. அப்படிப் பெற்றுத் தந்தால், அதைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அது கிடைத்தால் யாருக்கு என்ன பங்கு என்று கேட்கச் சிலர் இருக்கலாம்.

## வில்லை விட்டுக் கிளம்பிய கணை

அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி சுலபத்தில் நிற்கப்போவதில்லை.

அது போகவேண்டிய தூரத்திற்குப் போய், அடைய வேண்டிய சக்தியை – இலக்கைத் தொட்டுத்தான் நிற்கும்.

எப்படி வில்லை விட்டுக் கிளம்பிய கணை, பாய வேண்டிய இடத்தில் பாய்ந்தால்தான் அதன் வேகம் நிற்குமோ அதைப் போல, அவர்களிடத்திலிருந்து பிறந்த அறிவுக் கணை எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ அதை அடைந்தே தீரும். அதில் ஐயம் யாருக்கும் இல்லை. அதில் கால அட்டவணையைக் கூட

பெரியார் அழைக்கிற அழைப்பைக் கேட்காத தமிழ் மக்கள் என்றுமே இருந்ததில்லை. அவர்கள் கூப்பிடும் குரலுக்கு ஓடிவரத் துடிக்காத இளைஞர்கள் இருந்ததில்லை.

நாம் கருதத் தேவையில்லை. அந்தப் பாதையில் நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்திலே பேசுவதற்கு கூச்சப்பட்ட செய்திகளை இன்று நம்முடைய எட்டு வயதுச் சிறுவன் வெகு தாராளமாகப் பேசுகிறான்.

இருபது வருடங்களுக்கு முன்னாலே நம்முடைய மனத்தில், நாம் பயந்து கொண்டிருந்த தத்துவங்கள் இன்றைய தினம் கேலிக்குரியனவாகுமென்று நாடே சொல்கிறது.

இரண்டு நூற்றாண்டுகள் பாடுபட்டு உண்டாக்க வேண்டிய அறிவுப் புரட்சியை இருபது ஆண்டுகளில் பெரியார் அவர்கள் சாதித்துக் கொடுத்ததால், நமக்கு எல்லாம் எளிதாக இருக்கின்றன.

### செருப்புத் தோரணங்களுக்கிடையே...

ஆனால், இது எளிதாகும் அளவுக்கு அவர்கள் பட்ட துன்பங்கள் எத்தனை! நன்றாக நினைவுக்கு வருகிறது ஒரு நிகழ்ச்சி.

நானும் அவரும் ஒரு முறை சிவகங்கை மாநாட்டுக்குப்போன நேரத்தில், அந்த ஊர் முழுவதும் பழைய செருப்புகளைத் தோரணமாகக் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள்.

இன்று நடந்த ஊர்வலத்தில் மாலைகள் போட்டார்கள். கம்பீரமாகச் செல்கிறோம். ஆங்காங்கே கொடிகளும் அசைந்து வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றன.

ஆனால், அப்போது சிவகங்கையிலே தொங்கியவை, தோரணங்கள் அல்ல. அறுந்து போன பழைய செருப்புக்கள்! அப்படி அறுந்து போன செருப்புக்களை எடுத்துத் தோரணங்களாகக் கட்டியவர்கள் பிள்ளைகளிலே சிலர் இந்த மண்டபத்தில் வந்திருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட மாறுதல் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது.

### சமூகத்தை ஆளாக்கி விட்டவர்

பெரியாரைப் புரிந்துகொள்ள முதலிலே மறுத்தார்கள். புரிந்துகொள்ள மறுத்தவர்கள், புரிந்த பிறகு ஏற்றுக்கொண்டனர். ஏற்ற வரும் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள்தான் அப்போது இருந்தார்கள்.

இப்போது அவர் பேசுவது எல்லோருக்கும் புரிந்துவிட்டது. பெரும்பாலோருக்கு அது பிடித்துவிட்டது. அதிலே மிகப் பெரும்பாலோர் அவற்றைத் தங்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஒரு சமூகத்தை – ஒரு நாட்டு மக்களை ஆளாக்கிவிட்ட பெருமை உலகத்தில் பல தலைவர்களுக்குக் கிடைத்ததில்லை.

நம்முடைய தமிழகத்தில் பெரியார் அவர்களுக்குத்தான் அந்தத் தனிப்பெருமை சேர்ந்திருக்கிறது.

அந்தப் பெருமைக்குரியவர்களாக நாம் நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அவர் அளித்துள்ள செல்வம் – அவர் நமக்குக் காட்டியுள்ள இலட்சியப் பாதையில் நடந்து செல்வதற்கேற்ற ஆற்றல் – நமக்கு வரவேண்டுமென்று அவர் இன்றைய தினம் நமக்கெல்லாம் வாழ்த்துச் சொல்ல வேண்டும். அந்த வாழ்த்து நமக்குப் புதிய வல்லமையை, புதிய உற்சாகத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை.

''என்னுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டவர்களே! என்னுடைய வழியைப் பின்பற்றியவர்களே! நாம் செல்லுகின்ற பயணம் மிக நீண்ட பயணம்! அதிலே நடந்து வருவதற்கான – செல்வதற்கான வல்லமை – வலிவு – தாங்கும் சக்தி உங்களுக்கெல்லாம் வேண்டும். அவையெல்லாம் உங்களுக்கு வரவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.'' என்று அவர் நமக்கு வாழ்த்துக்கூற வேண்டும். இந்த விழா நாளில் நாம் அவரிடம் வாழ்த்துப் பெறவே வந்திருக்கிறோம்.

### கடுமைமொழியைக் கேட்டறியாதவன் நான்

என்னுடைய உளம்கனிந்த நன்றியை நான் பெரியார் அவர்களுக்குக் காணிக்கை ஆக்குகிறேன்.

அவர்களுடைய அன்பினையும் ஆதரவினையும் பெற்றவன் என்ற முறையில் – என்றைய தினமும் அவர்கள் கடுமொழியைக் கேட்காதவன் என்ற முறையில் – அவர்களுக்கு என்னிடம் இருக்கின்ற தனிப்பட்ட பாசத்திற்கு என்னுடைய இதயம் கலந்த – கனிவு நிறைந்த – நட்புமிகுந்த–தூய்மை நிறைந்த வணக்கத்தையும் மரியாதையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திருச்சியில் 1967 செப்டம்பர் 17ல் நடைபெற்ற பெரியாரின் 89ஆவது பிறந்த நாள் விழாவில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையிலிருந்து...*

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் வகுத்த இலக்கணங்களுக்குத் தாமே இலக்கியமாக வாழ்ந்து காட்டினார்கள்.

அண்ணா அவர்களால் அப்படி நடந்துகாட்ட முடிந்தது எதனால்? அவருடைய அகமும் புறமும் ஒன்று போல் ஒரு பாதையில், ஒரே குறிக்கோளை நோக்கிச் செயற்பட்டதே அதற்குக் காரணம்.

அவ்வாறு அகமும் புறமும் ஒன்றுபட்டு இயங்கப் பகுத்தறியும் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், அதைப் பயன் படுத்தத் தவறுவதனாலேயே மக்களிடையே மாறுபட்ட தன்மைகள் இடம் பெறுகின்றன.

ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நாம் போக வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப் போவதற்கு ஏற்ற பாதை வேண்டுமல்லவா?

பாதையே இல்லாத பகுதியில் அடியெடுத்து வைத்து, அல்லற்பட்டு நடந்து மற்ற இடத்தை அடையவும் கூடும்.



ஏன், மலைமேலே ஏறி இறங்கிப் போகலாம்!

காட்டு வெளிகளில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து செல்லலாம்!

தண்ணீரில் நீந்தியும் செல்லலாம்! ஆனால், இப்படிப் போய்ச் சேருவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் பாதைகள் ஒழுங்கற்றவைகளாக இருப்பதால், பாதசாரிகளுக்கு அந்தப் பாதைகள் தொல்லைகளையும் இடர்பாடுகளையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# அண்ணா கண்ட அன்புத் தத்துவம்

□ டாக்டர் எம்.ஜி.ஆர்.

இந்த நிலையைத் தவிர்க்க எண்ணி, பாதையே இல்லாதிருந்த இடத்தில், ஓர் ஒழுங்கான பாதையை உருவாக்கி, 'இந்த வழியாகப் போனால் அங்கே போய்ச் சேரலாம்' என்பதையும் குறிப்பிட்டுப் பாதசாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு வசதி ஏற்படுத்தித் தரப்படுமானால், அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பார்களா?

தேவையை உணர்ந்து அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு இடையில் குறுக்கிட்டு, "நமது முன்னோர் இந்தப் பாதையில்தான் சென்றார்களா? நாம் ஏன் செல்ல வேண்டும்?" என்று கேட்பார்களேயானால், அது சிந்தித்து விடையிறுக்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகும்.

விதவைத் திருமணத்திற்கும், விவாக விலக்திற்கும், கலப்பு மணத்திற்கும், வாழ்க்கை ஒப்பந்தம், பதிவுத் திருமணம் ஆகியவைகளுக்கும் மக்களிடையே ஆதரவு பிறந்ததே, அது எப்படி? இவை யாவும் முன்னோர் பின்பற்றிய நெறிகளா? இல்லையே! அறிவு வளர்ச்சியின் விளைவுகளேயல்லவா?

சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமைய வேண்டும். புறத்தில் உள்ளது வேறு, அகத்தில் உள்ளது வேறு என்று இருந்தால் எந்தச் சமூகக் கட்டுப்பாடோ, அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காண முடியாது.

இதனால்தான் அகமும் புறமும் மாறுபடக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் அவசியம் பிறக்கிறது. அதற்கு உறுதுணையாக உள்ளதுதான் பகுத்தறிவு, அந்தப் பகுத்தறிவு வளர்க்கும் பணியில் தன்னிகரற்று விளங்கியதோடு, அமைதியான முறையில் மெல்லமெல்ல மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்களின் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் திடீரென்று மக்களிடையே பரவிடவில்லை. திடீரென்று ஒருநாள், மக்கள் எல்லோரும், 'இதுதான் நமக்கு ஏற்றது' என்று முடிவெடுத்துவிடவில்லை.

முதலில் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆசை கொண்டார்கள். அதன்பின், 'அவர் பேசுவதிலும் சில நியாயங்கள் இருக்கின்றன' என்றார்கள். பிறகு 'அவர் கூறுவதுதான் உண்மை' என்று எண்ணத் தொடங்கினார்கள். இதன் பிறகு பல நேரங்களில், பற்பல சூழ்நிலைகளில் அவரவரும் தங்களின் அனுபவ வாயிலாக அறிந்து, சிந்தித்துப் பிறகு, இதுதான் ஏற்றது என்ற முடிவுக்கு வந்து, அப்போதும் எதிர்ப்பட்ட பல எதிர்ப்புக்களைச் சமாளித்துப் பிறகுதான் அண்ணா அவர்களின் எண்ணத்தோடு கலந்தார்கள்.

*அறிவு என்கிற வழிகாட்டி*
*பகுத்தறிவு என்கிற ஒளிவிளக்கு*
*தன்னம்பிக்கை என்கிற நடை*
*மனப்பக்குவம் என்கிற வலிமை*

இவைகளைக் கொண்டுதான் மனிதன் தனது வாழ்க்கையைக் கடக்க வேண்டியவனாகிறான்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் எதை விரும்பவேண்டும் என்பது அவனுடைய அகத்திற்கும் புறத்திற்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். ஒரு பெரிய ஆற்றை நீந்திக் கடக்க வேண்டும் என்ற ஆசை உள்ளத்திலே எழுந்தால் மட்டும் போதுமா? உடலிலே வலிமையும் உறுப்புக்களுக்குப் பழக்கமும் வேண்டும் அல்லவா? அதுபோலத்தான் வாழ்க்கையும்!

பொருளாதாரத்தையும், சமூக அமைப்பையும், சமூக நாகரிக வளர்ச்சிக்காக ஏற்படும் மாற்றங்களையும் அனைத்தையுமே 'மக்கள் வாழ்வுக்காக' என்று சிந்திக்க வேண்டுமே தவிர, எனக்காக, என் ஒருவனுக்காகவே, என் ஒருவனுக்காகவே' என்று சிந்திக்கக்கூடாது என்ற முடிவைத்தான், அண்ணா அவர்களின் தத்துவக் கருத்துக்களைத் துணையாய்க் கொண்டு நான் சிந்தித்துப் பார்த்த அளவில் மிகவும் ஏற்புடையதாகக் கருதலானேன்.

உலகில் பூசலும் போராட்டமும் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? தகுதியுடையவன் தன் தேவையைப் பெறாதபோது விடுகின்ற கண்ணீர்த் துளிகள் கனலாக மாறுகின்றன.

ஏராளமான பொருள்களுக்குரிய ஒருவர், தன் கண் எதிரில் கஞ்சிக்குப் போராடும் எளிய உருவங்களைக் காணும்போது இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஏன் அவர்கள் அந்த நிலையிலும், நாம் இந்த நிலையிலும் இருக்கிறோம் என்பதையாவது சிறிதளவு யோசிக்க வேண்டுமல்லவா?

அந்த யோசனை அவருக்கு உண்டாக வேண்டுமானால், இயற்கையான அன்பின் உயிரோட்டப் பண்பு அவரிடம் உண்டாக வேண்டும். அனுபவித்தால் அது எந்த அளவிற்கு வெற்றி பெறும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. அதனால்தான் நாட்டில் வேறு வேறுபட்ட நிலைகள் காலம் காலமாக வளர்ந்து வருகின்றன.

முந்தைய தலைமுறையில் செயற்பட்டவைகள் எல்லாம் தொடர்ந்து வரவேண்டும் என்று முடிவு செய்தால், நாட்டில் மக்களின் வாழ்க்கை அமைப்பும் பொருளாதார நெறியும் ஒரு கோணத்திலேயே நடைபோட்டுக் கொண்டிருக்கும். மேம்பட்டவர்கள் மேலும் மேம்படவும், தாழ்ந்தவர்கள் மென்மேலும் தாழவும் தான் நேரும்.

மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் எல்லோருக்கும் நடுநிலையான வாழ்க்கை வசதி அளிக்கப்பட்டாக வேண்டும் என்ற பிரச்சினை எழுந்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன.



இந்தப் பிரச்சினைக்குச் சரியான முடிவு பிறக்க அண்ணா அவர்களின் அன்புத் தத்துவம் அதற்கு ஏற்றதொரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. மக்கள் அதை உள்ளும் புறமும் ஒருமைப்பாட்டுடன் ஏற்பதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது.

குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பது போல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பதுபோல, இல்லாதவர்களுக்குத் தேவையானதை இருப்பவர்கள் அளிக்க முன்வர வேண்டும் என்பதே அண்ணா அவர்களின் அந்த அன்புத் தத்துவம். இதைக் கடைப்பிடித்தால் பிரச்சினையைச் சமாளிப்பதற்கான உதயம் தென்படும்! ●

# திருக்கோயில்களில் திருப்பணிகள்

சட்டமன்றப் பேரவையில்
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **பீ.சி. ராமசாமி**

திருப்பணி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தேவையுள்ள திருக்கோயில்களிலும் மூன்று வருடங்களுக்குள் திருப்பணி செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். முதற்கட்டமாக, திருக்கோயில் களின் திருப்பணிக்காக வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் அரசின் மானியமான ரூபாய் 75 இலட்சத்தை ரூபாய் 1 கோடியாக உயர்த்தி இவ்வருடம் வழங்கப்படும்.

ஒரு கால பூசை

1993–96ஆம் ஆண்டுகளில் அதாவது அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது 6,260 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசை தடையின்றி தொடர்ந்து நடந்துவர ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா ரூ.25 ஆயிரம் வைப்பு நிதி முதலீடு செய்யப்பட்டது. 1996–2001ஆம் ஆண்டுகளில் அதாவது கடந்த ஆட்சி காலத்தில் 1982 திருக்கோயில் களுக்கு மட்டும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இன்றைய நிலையில் ஒரு கால பூசை இல்லாத திருக்கோயில்கள் 2,054 உள்ளன என கணக்கிடப் பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைப்படி ரூபாய் 5 கோடியே 13 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு வைப்பு நிதி முதலீடுகள் சம்பந்தப்பட்ட திருக்கோயில்களில் ஏற்படுத்து வதன் மூலம் அனைத்திலும் ஒரு கால பூசை நடத்தும் திட்டத்தை நிறைவு செய்யப்படும் என்பதை மகிழ்வோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி

கிராமப்புறத்தில் அமைந்துள்ள சிறிய திருக் கோயில்களில் திருப்பணி செய்து பராமரிக்கும் வகையில் இவ்வாண்டு 100 திருக்கோயில்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.25 இலட்சம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ஏற்படுத்தப் பட்ட மைய நிதியின் வட்டியிலிருந்து வழங்கப் படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் திருக்கோயில் திருப்பணி

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக் கோயில்களின் சிறு சிறு திருப்பணிகளை செய்து பராமரித்திட இவ்வாண்டு 100 திருக்கோயில்களுக்கு தலா ரூ.25,000 வழங்கப்படும். 50 திருக்கோயில் களுக்கு அரசு நிதியிலிருந்தும், 50 திருக்



கோயில்களுக்கு, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்தும் தலா ரூ.12.50 இலட்சம் வழங்கப்படும்.

### மின் இணைப்பு இல்லாத திருக்கோயில்களுக்கு மின் இணைப்பு

மின் இணைப்பு இல்லாது உள்ள 1,000 திருக்கோயில்களுக்கு இவ்வாண்டு மின் இணைப்பு இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### திருத்தேர் திருப்பணி

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் 515 மரத்திருத்தேர்கள் உள்ளன. அவற்றில் 120 மரத்திருத்தேர்கள் செப்பனிட வேண்டியுள்ளது. இவ்வாண்டில் 20 திருத்தேர்கள் செப்பனிடப் படும். கடந்த 3.7.2001இல் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான புராதனமான திருத்தேர் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. செய்தி அறிந்ததும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புதிய திருத்தேர் செய்திட ரூ.25 இலட்சம் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து வழங்கிட ஆணையிடப்பட்டது. அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### அடிப்படை வசதிகள்

திருக்கோயில்களுக்கு சுற்றுலாப் பயணிகள் மற்றும் சேவார்த்திகள் நாளுக்கு நாள் அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்றனர். இவற்றினைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களில் குடிநீர் வசதி செய்திடவும், தேவையான இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு 100 திருக்கோயில்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்துத் தரப்படும். அதேபோல், நவீன கழிப்பிட வசதி செய்து தரவும் குறிப்பாக பெண்களுக்கென தனியே கழிப்பிட வசதி செய்து கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. திருத்தணி, திருச்செந்தூர், சமயபுரம் போன்ற இடங்களில் மேலும் அதிக அளவில் அடிப்படை வசதிகள் செய்தளிக்கப்படும். இவ்வாண்டில் 30 திருக்கோயில்களில் நவீன கழிப்பிட வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்.

### திருக்குளத் திருப்பணி

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்குளங்கள் உள்ளன. அவற்றில் 596 திருக்குளங்கள் செப்பனிடப்பட வேண்டியுள்ளது. திருக்குளங்களைப் பாதுகாக்க திருக்குளங் களைச் சுற்றியும் உள்ளேயும் உள்ள ஆக்கிர மிப்புகளை வெளியேற்றவும், தூர்வாரி ஆழப் படுத்தவும், மழை நீரை சேமிக்கவும், சுற்றுச்சுவர் அல்லது வேலி அமைக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்செப்பனிடும் பணி நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் திருக்குளங்களை அத்திருக்கோயில் நிதியின் மூலமும், எஞ்சிய திருக்குளங்களை உள்ளாட்சி அமைப்புத் திட்டங்கள் மூலமும் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமும் மேற்கொள்ளப்படும்.

### புத்தொளிப் பயிற்சி

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்களுக்கு வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம் ஆகியவற்றில் அவர்களது திறனை மேம்படுத்தும் வகையில் 1991ஆம் ஆண்டு முதல் புத்தொளிப் பயிற்சி

அளிக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் இத் திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. எனவே, இப்புத்தொளிப் பயிற்சிக்கு புத்துயிர் அளித்து முதற்கட்டமாக 25 திருக்கோயில்களில் 464 அர்ச்சகர்கள், 185 பட்டாச்சாரியார்கள், 54 ஓதுவார்கள் மொத்தம் 703 பணியாளர்களுக்கு புத்தொளிப் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மூன்று மாதங்களில் நிறைவடைந்ததும் அடுத்தக் கட்டமாக மேலும் 25 திருக்கோயில்களில் இப்பயிற்சி துவங்கப்படும்.



### இலவசத் திருமணம்

இந்து சமயத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட மற்றும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் மூலம் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. இவ்வாண்டு 1000 இணைகளுக்கு திருக்கோயில்களின் மூலம் இணை ஒன்றுக்கு ரூ.3,000 செலவில் திருமணம் செய்து வைக்கப்படும். இதற்கு ரூ.30 இலட்சம் செலவிடப்படும்.

### இணைய தளம்

தமிழகத்தில் பாடல்பெற்ற தொன்மைமிக்க திருக்கோயில்கள் பல உள்ளன. அவற்றின் பெருமைகளையும், கலை மற்றும் கலாச் சாரங்களையும் அறிந்துகொள்ள இந்திய மக்கள் மட்டுமல்லாது பன்னாட்டு மக்களும் பேரார்வம் கொண்டுள்ளனர். இவர்கள் எளிதில் தமிழகத் திருக்கோயில்களைப் பற்றி அறிந்துகொள்ளவும், தங்களுடைய பிரார்த்தனைகளை இருக்கு மிடத்திலிருந்தே நிறைவேற்றிடவும் ஏதுவாக திருக்கோயில் பற்றிய முழுமையான விவரங்களுடன் பூஜா கால விவரங்கள், பிரார்த்தனை செலுத்தும் விவரங்கள், விழாக்கள் தொடர்பான விவரங்கள் போன்ற அனைத்து விவரங்களையும் தொகுத்து இணைய தளம் ஏற்படுத்தி இணையத்தில் இணைத்து பன்னாட்டு மக்களும் பயன்பெற வழி செய்யப் படும்.

இவ்வாண்டு முதல், முதல்கட்டமாக பழனி, ஸ்ரீரங்கம், திருச்செந்தூர், திருவண்ணாமலை போன்ற 50 திருக்கோயில்களை இணையத்தில் இணைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

### அர்ச்சகர் குடியிருப்பு

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் 7493 அர்ச்சகர்களுக்கு குடியிருக்க குடியிருப்புத் தேவையுள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளை ஒதுக்கீடு செய்யவும் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கவும் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### அர்ச்சகர்கள் ஓய்வூதியம்

நிலுவையிலுள்ள அர்ச்சகர்களின் ஓய்வூதிய விண்ணப்பங்கள் யாவும் விதிப்படி பரிசீலித்து ஒப்பளிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

### கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

சென்ற அரசு 2,500 கிராமக்கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்த ஆணையை செயல்படுத்தவில்லை. இருந்தபோதிலும், இந்த வருடம் முதற்கட்டமாக 1,000 நபர்களுக்கு மாதம் ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்படும்.

• • •

# பால்வளத்துறை

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

திரு.சி. சண்முகவேலு

**2001** –ஆம் ஆண்டு 'பெண்கள் உரிமை ஆண்டாக' கொண்டாடப்படுகின்ற இத் தருணத்தில் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக ஆக்குவதற்காகவும், பெண்கள், மாணவர்கள், அடித்தளத்து மக்கள், ஆதரவற்ற குழந்தைகளின் துயர் துடைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாயுள்ளத்துடன் சாலப் பரிந்து நலத் திட்டங்கள் பல தீட்டி முன்னேற்றப் பாதையில் நடைபோட வழி வகுத்து வருகிறார்கள். இவ் வேளையில் புனிதப் பொருளான பால், மனித வாழ்க்கை முழுவதும் தொடர்புடையதாகவும், விவசாய குடிமக்களின் வாழ்க்கையில் பால் உற்பத்தி ஒரு பிரதான தொழிலாகவும் மாறி வருகிறது. கிராமப்புற மகளிரின் பங்கு, பால் உற்பத்தி தொழிலில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. கிராமப்புற பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய வருடம் முழுவதும் வருவாய் ஈட்டக் கூடிய பால் உற்பத்தியை அதிகப்படுத்தவும் அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு நல்ல விலையும், வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான பாலை வழங்கவும் இந்த நல்லரசு முன்னிலும் சிறந்த நடவடிக்கைகளை தமிழக முதல்வர் அவர்களின் நல்வழி காட்டுதலின் பேரில் எடுக்கப்பட உள்ளது. "மிக்க பொருள்வளம் உடையதாய் எல்லோரும் விரும்பத்தக்கதாய், மிகுதியாக விளை பொருள் தருவதே நாடு" என்ற வள்ளுவரின் வாக்குப்படி நம் தமிழ்நாடு பால்வளத் துறையில் உயர்வு காண உள்ளது.

**பால் கொள்முதல்**

கடந்த ஐந்தாண்டுகளில் 13 இலட்சம் முதல் 16.98 இலட்சம் லிட்டர் பால் மாநிலம் முழுவதும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. பால் உற்பத்தியாளர்களிடம் பாகுபாடின்றி தரமான பால் முழுவதையும் நியாயமான விலையில் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டதின் விளைவாக நமது அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த 100 நாட்களிலேயே பால் கொள்முதல் நாளொன்றுக்கு **18,29,115** லிட்டரை எட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் கொள்முதல் **21.48** இலட்சம் லிட்டர்களாக உள்ளது.

**சென்னையில் பால் விற்பனை**

சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் கடந்த ஐந்தாண்டுகளில் முதல் ஆண்டில் நாளொன்றுக்கு **7.93** இலட்சம் லிட்டர் விற்பனை செய்யப்பட்ட பால் கடந்த ஆண்டு 7,2 இலட்சம் லிட்டராக குறைந்து, தனியார் விற்பனையை அதிகரிக்க வழிகோலியது. மேலும் கடந்த



ஐந்தாண்டுகளில் பால் விற்பனை அளவினை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மொத்தத்தில் **8.95** சதவிகிதம் குறைந்து உள்ளது. இதனை மாற்றியமைத்து தற்போதைய அரசு பொறுப்பேற்ற **100** நாட்களிலேயே சென்னையில் பால்விற்பனை நாளொன்றுக்கு **7.62** இலட்சம் லிட்டரை எட்டியுள்ளது. அதாவது நாளொன்றுக்கு சராசரியாக **39,000** லிட்டர் என்ற அளவிற்கு கூடுதல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இது கடந்த காலத்தைவிட **5.4** விழுக்காடு உயர்வாகும். தற்போதைய சந்தை நிலவரத்தை கணக்கிடும் போது இது ஒரு குறிப்பிடத்தக்க விற்பனை உயர்வு ஆகும். இதன் மூலம் சென்னை மற்றும் புறநகர் பகுதி மக்களுக்கு தரமான பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பால் கொள்முதல் விலை**

தமிழ்நாட்டிலுள்ள ஊரகப்பகுதிகளில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பால் ஊற்றும் விவசாயிகள் கூடுதல் கொள்முதல் விலை பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு இவ்வரசு **1991** முதல் **1996** வரை ஒவ்வொரு ஆண்டும் பால் கொள்முதல் விலையைக் கூட்டி நிர்ணயித்து வழங்கி வந்தது. ஆனால் கடந்த ஐந்து

ஆண்டுகளில் இரண்டு முறை மட்டுமே பால் கொள்முதல் விலையை உயர்த்தி அதன் பயனை உரிய காலத்தில் பால் ஊற்றுபவர்கள் அடைய முந்தைய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

### விற்பனை விலை ஒப்பீடு

தமிழ்நாட்டில் அண்டை மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் குறைவான விலையில் பால் விற்கப்படுகிறது. லிட்டர் ஒன்றுக்கு ரூ.10.50 விலையுள்ள சமன்படுத்திய பால் தனியார்களால் சென்னையில் ரூ.13–க்கும் விற்கப்படுகிறது. அதே போல் ஆந்திராவில் ரூ.13–க்கும் கேரளாவில் ரூ.13–க்கும், கர்நாடகாவில் ரூ.11 முதல் ரூ.12 வரையிலும் விற்கப்பட்டு வருகிறது.

தென் மாநிலங்களில் பால் விற்பனை விலை விவரம்

30 விழுக்காடு கொழுப்பு சத்து மற்றும் 8. 5 விழுக்காடு இதர சத்து கொண்ட சமன்படுத்திய பால் லிட்டர் ஒன்றுக்கு

(ரூபாயில்)

| ஆந்திரப் பிரதேசம் | கேரளம் | கர்நாடகம் | தமிழகம் | தனியார் |
|---|---|---|---|---|
| ரூ.13 | ரூ.13 | ரூ.11 லிருந்து ரூ.12 வரை | ரூ.10.50 | ரூ.13 |

### வழிவகைக் கடனை மானியமாக மாற்றுதல்

இந்நிலையில் ஏப்ரல் 2001–இல் ரூ.28 கோடியை வழிவகை முன் பணமாக வழங்கி அதனை 17 சதவீத வட்டியுடன் இரண்டாண்டுகளில் திரும்பச் செலுத்த முந்தைய அரசு ஆணையிட்டது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகின்ற இவ்வரசு ஏற்கெனவே நலிவுற்ற ஒன்றியங்களில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்பினைக் கருத்தில் கொண்டும், ஊரகப் பகுதியில் உள்ள வறிய பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய பால் பாக்கி பணத்தை கருத்தில் கொண்டும் ரூ.36.98 கோடி மானியமாக இவ்வாண்டு ஒதுக்கியுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் முந்தைய அரசு வழிவகை முன்பணமாக வழங்கிய ரூ.28 கோடியை மானியமாக மாற்றம் செய்ய முடிவெடுத்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதோடு முன் பணத்திற்கான வட்டி ரூ.1.17 கோடியை தள்ளுபடி செய்யவும் முடிவெடுத்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பால் பணப்பட்டுவாடா நிலுவை

கடந்த பல ஆண்டுகளாக அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும் சென்னையிலுள்ள இணையமும் பல்வேறு காரணங்களால் நட்டம் அடைந்து வந்துள்ளன. மேலும் பால் பொருட்கள் தக்க விற்பனை விலையை எதிர்நோக்கி தேக்க நிலையை அடைந்துள்ளது. இதனால் பால் உற்பத்தி செய்ய ஏழை எளிய விவசாயிகளுக்கு பால் பாக்கியை, சங்கங்களின் நிதி நிலைமையைப் பொறுத்து, வகைப்படுத்தி, நலிவுற்ற சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்து வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசு பொறுப்பேற்றது முதல் ஏறத்தாழ ரூ.128 கோடி பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளன. தற்போது இணையத்திலிருந்த ஒன்றியங்களுக்கு பால் பண பட்டுவாடா மூன்று வாரங்களுக்கு குறைவாக இருக்கும்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்றிய பிரதம சங்கங்களுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகை ரூ.78 கோடி விரைவில் வழங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தருணத்தில் நான் கூறிக் கொள்வது, 3,038 சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் நாளது தேதி வரை பால் பணம் பெற்றுள்ளனர். எஞ்சியுள்ள சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணம் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### புனரமைப்புத் திட்டம்

நட்டத்தில் இயங்கும் இணையங்கள்/ ஒன்றியங்களுக்கு 'கூட்டுறவுகளுக்கு உதவி' என்ற திட்டத்தின் கீழ் ஒரு புனரமைப்புத் திட்டத்தை மத்திய அரசு மாநில அரசின் உதவியோடு உருவாக்கியுள்ளது. இப்புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஈரோடு மற்றும் விழுப்புரம் ஆகிய ஒன்றியங்களில் ரூ.13 கோடி செலவில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன. இச்செலவினை மாநில அரசும், மைய அரசும் சமமாக ஏற்று இத்திட்டத்திற்கான நிதி ரூ.6.5 கோடி ஒதுக்கீடு செய்து விட்டது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமின்றி கடந்த 100 நாட்கள் நிர்வாகத்தினை சீரமைத்து நட்டத்தை குறைக்கும் அனைத்து நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

2000–2001 ஆம் ஆண்டு ஒதுக்கீடு – ரூ.0.89 கோடி

2001–2002 ஆம் ஆண்டு ஒதுக்கீடு – ரூ.5.61 கோடி

### தொலை நோக்குத் திட்டம்

அகில இந்திய அளவில் பால் தொழிலில் ஏற்பட்டுள்ள அறைகூவல்களை எதிர்கொண்டு பால் பெருக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி தமிழகத்தில் பால்பெருக்குத் திட்டங்களுக்கு நிதி உதவி பெற திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. உலக அளவில் வாணிபத்தினைப் பெருக்கவும் வெளிநாட்டு பால் பொருட்களுடன் நமது பால் பொருட்களும் விற்பனையில் சமமாக பங்கு பெற்று ஏலங்களை வெல்லவும் தற்பொழுது பால் பண்ணைத் தொழிலில் கண்ணோட்டம்–2010–ன் கீழ் 'தொலைநோக்குத் திட்டம்–2005' என்ற புதிய திட்டத்தினை தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ரூ.46 கோடியும் தருமபுரி,திருச்சி, மதுரை,சேலம்,வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஒன்றியங்களுக்கு ரூ.72 கோடியும் ஆக கோரப்பட்டுள்ள நிதியுதவி ரூ.118 கோடி ஆகும். ஆறு ஒன்றியங்களின் திட்ட வரைவுகள் தேசிய பால்வள வாரியத்தின் ஆய்வில் உள்ளன என்பதனையும் இணையத்தின் திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு



செப்டம்பர் 1–ஆம் தேதி முதல் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கு யோகர்ட் வழங்க மேற்கண்ட நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### பகுதி-2 திட்டம்

திருத்திய வரவு செலவுத் திட்டம் 2001–2002–ல் உள்கட்டமைப்பு வசதிகள் தலைப்பில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கும் வகையில் 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட அலுமினியம் பால் கொள்கலன்கள் சங்கங்களுக்கு வழங்கும் வகையில் ரூ.30 இலட்சம் மற்றும் பாலின் தரத்தைச் சோதனை செய்வதற்கான மின்னணு பால் பரிசோதனைக் கருவிகளைப் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கும் வகையில் ரூ.30 இலட்சம் ஆக மொத்தம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முடிவடையும் தருவாயில் உள்ளது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விற்பனை வரிச் சலுகை

பால் பொருட்கள் விற்பனையில் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சமச்சீரான ஆடுகளம் அமைத்து, அனைத்து பங்கேற்போரும் விற்பனைக்கான வாய்ப்பை சம அளவில் பெறும் நோக்கோடு 2001–2002 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழக அரசு வெண்ணெய் மற்றும் நெய் ஆகியவற்றின் மீதான விற்பனை வரியை 11 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக குறைத்துள்ளது. (Ultra High Temperature Treated (UHT) டெட்ரா பாலிற்கான 16 சதவீத விற்பனை வரி முழுவதையும் தள்ளுபடி செய்துள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு, ரூ.150.08 இலட்சம் சேமிப்பாக கிடைக்கிறது என்பதனையும், இதனால் பிற மாநிலங்களில் நமது பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க இயலும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சென்னை மாநகரில் பால் பொருட்கள் விற்பனை

தமிழகத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையத்தால் தயாரிக்கப்படும் பால் பொருட்கள் சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் இணையத்தின் பால் பொருட்கள் விற்பனை பிரிவு மூலம் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆட்சியில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக சுமார் ரூ.2.32 கோடி விற்பனை செய்யப்பட்டு வந்த பால் பொருட்கள் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் விளைவாக பால் பொருட்களின் விற்பனை அதிகரித்து ஆகஸ்ட் 2001–ல் ரூ.3.15 கோடி என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.

மேலும் புதிய விற்பனை நிலையங்கள் நகரத்தின் மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் அமைப்பதற்கும் புதிய விற்பனையாளர்கள் நியமனம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### மேற்கு தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டிற்கான, பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான கேன்கள், திரவ நைட்ரஜன் குடுவைகள், கிட்டி மற்றும் கன்று வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மானியத் தொகையாக ரூ.9.32 இலட்சம் மாநில அரசு திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு வாரியம்

ஒன்பதாவது மற்றும் பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியன ஒருங்கிணைந்து வளமான எருமை மற்றும் பசு இன மேம்பாட்டிற்காக ரூ.100.20 கோடி மதிப்பீட்டில் மைய அரசின் 100 சதவிகித நிதியுதவியுடன் ஒரு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கருத்துரு மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்ட ஒப்பதல் பெற்ற பின் மாநில அளவில் திட்ட அமலாக்கும் நிறுவனம் ஒன்றினை அமைத்து இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ரூ.32.23 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் எதிர்வரும் ஐந்தாண்டு காலத்தில் படிப்படியாக தமிழகத்திலுள்ள அனைத்து எருமை மற்றும் பசு இனங்களைச் செயற்கை முறை கருவூட்டல் மூலம் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

• • •

# அண்ணா பிள்ளைத் தமிழ்

தமிழ்த்தாய் வணக்கம்

அண்ணா பிள்ளைத் தமிழுரைக்க ஆன்றோர்
செங்குட் டுவனார்தாம்
எண்ணிய எண்ணம் உளங்கொண்டு எளியேன்
இமயம் தனக்குப்பொன்
வண்ண ஆடை வனைதற்கு வகையாய்
முயன்றேன் பிழைபொறுப்பீர்
வண்டமிழ்த் தாயின் திருவடியை வணங்கிப்
பிள்ளைத் தமிழுரைப்பேன்

காப்புப் பருவம்

மூத்த தமிழே முன்னவளே முதன்மை அடியவர்
நாவினிலே
ஏத்தக் குளிரும் இனியவளே என்றும் உன் னருள்
ஏத்திடுவோம்
வாய்த்த வாணாள் முழுதுமுனை வளர்த்தோன்
தமிழர் மாத்துன்பம்
தேய்த்த அண்ணா தனைக்காக்க! சீர்பெரி யார்சேய்
தனைக்காக்க!

செங்கீரைப் பருவம்

தமிழின மக்களின் தனித்தலைவ! தன்னலம்
பேணாத் தகவுடையாய்!
தமிழால் உயர்ந்து தமிழ்த்தாயின் தகவார் மடியில்
தவழ்ந்தவனே!
அமிழ்த அங்கதச் சுவைவளர்த்த அண்ணா ஆடுக
செங் கீரை
தமிழகக் காஞ்சி தந்தபெரும் தலைவா ஆடுக
செங் கீரை

தாலப் பருவம்

அஞ்சா நெஞ்சம் தான்கொண்ட அருமைப் பெரியார்
தன்மதலாய்!
அஞ்சா ஆடல் அரசீன்ற அண்ணா தம்பியர்
அகத்திருப்பாய்!
தஞ்சைக் கோபுரம் புகழுடையாய் தமிழே தாலே
தாலேலோ
கொஞ்சு தமிழ்த்தாய் தந்த பெரும் கொடையேதாலே
தாலேலோ

கைப்பாணிப்பருவம்

முத்தமிழ்த் தலைவா உன்னெழுத்தில் மூத்த
தமிழ்த்தாய் நடம்புரிவாள்!
அத்தனை மணமும் உன் தமிழில் அனைவர்
மனமும் உன்தமிழில்



□ பேரா. முனைவர் வீ. சேதுராமலிங்கம்

முத்தமிழ் வளர்த்த கையாலே முன்னவ கொட்டுக கைப்பாணி!
முத்தமிழ்க் கலைவாணரை வளர்த்தவனே! மூத்தவ கொட்டுக கைப்பாணி!

### முத்தப் பருவம்

உவமை வயலில் விளைந்தவனே ஓங்கிய புலமை நாயகனே!
தவஞ்செய் தமிழ்த்தாய் தன்மதலாய்! தாயகம் காக்க உளங்கொண்டு
அவனியில் தோன்றிய தமிழ்க்குழவி! ஆயிழை ராணி அன்புமலர்
உவந்தாய் முத்தம் தருவாயே! உயர்ந்தோர் முத்தம் தருவாயே!

### வருகைப் பருவம்

எதையும் தாங்கும் இதயத்தை இவ்வுல குக்கு ஈந்தவனே!
சிதையாத் திராவிடப் பெருமைதனைச் சீமை எங்கும் உரைத்தவனே!
புதைந்த தமிழினச் சீர்மைகள் பொலிந்திட வருக பொன் மகனே!
பதைக்கச் செய்யும் பாதகங்கள் பயங்கொள வருக பைந்தமிழே!

### அம்புலிப் பருவம்

புறவிருள் போக்கித் திரிகின்றாய் புதுமலர்க் கமலம் வாடிடவே
பிறஒளி இரந்து அலைமதியே பேதமை அகற்றும் தொண்டனிவன்
புறங்கொடுத் தோடும் அகஇருளும் புண்ணியன் இவன்உனை அழைக்கின்றான்
திறங்கொள் அம்புலி ஆடவாவே! செந்தமிழ்ச் சேயுடன் ஆடவாவே!

### சிற்றிற் பருவம்

பார்வதி நாவல் படைத்தவனே! பண்பிலா மடமை துடைத்தவனே!
கார்போல் தமிழ்மழை பொழிந்தவனே! கடமைப் பயிர்தனை வளர்த்தவனே!
நேரார் போற்றும் நேர்மையனே! நேயக் கண்ணியச் சீர்மையனே!
சீரார் சிற்றில் சீதையேலே செந்தமிழ்ச் சிற்றில் சிதையேலே!

### சிறு தேர்ப் பருவம்

அரசியல் களைநீக்கும் ஆன்றோர்கள் போற்றிடும்
அன்புகொள் அறிஞர் அண்ணா
விரசமார் சொற்பொழிவு மேடைவிட் டகலவும்
மேன்மைகள் நடமா டவும்
உரசுபோர் எண்ணங்கள் உலகுவிட் டோடவும்
உயர்தேர் உருட்டி யருளே
சிரசுபுகழ் முடிசூடும் செந்தமிழ்ப் பேரரசு
சிறுதேர் உருட்டி அருளே

### சிறுபறைப் பருவம்

கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகவும்
கயமைப் புயல் நீங்கவும்
கண்ணியநன் மழையினால் கடமைகள் வளரவும்
கவினருள் சிறந்தோங்கவும்
மண்ணுலகம் போர்நீங்கி வளமோங்கி
வாழ்ந்திடவும் மாண்பறை முழக்கியருளே
விண்ணதிர மண்ணதிர மேலோர் புகழ்குழவி
மென்பறை முழக்கியருளே!

*அன்னை தெரசாவின் இயற்பெயர் என்ன தெரியுமா? அக்னேஷ் கான்ஷா போகாஸ் நீயூ என்பதே அவரின் இயற்பெயராகும். அவர் இந்தியா வரும்போது கையில் ஐந்து ரூபாய் மட்டுமே இருந்தது. அவர் தந்தை அவருக்கு கொடுத்த (தந்தை வான் எக்ஸெம்) நீலக்கோடுகள் போட்ட வெள்ளை நிறச் சேலைகள் மூன்றை கொடுத்திருந்தார். மிஷினரி ஆப் சாரிட்டியின் சீருடையாகவே அதுவே இன்றளவும் உள்ளது.*

# தமிழ்நாட்டின் கல்வி நிறுவனங்களை உலகத் தரத்திற்கு உயர்த்த உறுதி

□ மாண்புமிகு கல்வியமைச்சர்
டாக்டர் எம்.தம்பித்துரை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தமிழகத்தில் உள்ள மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர் சமுதாயத்தின் நலன்களைச் சிறந்த முறையில் பாதுகாக்க வேண்டுமெனவும், தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களை உலகத் தரம் வாய்ந்ததாக மாற்ற வேண்டுமெனவும் முடிவு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து கல்வி துறையின் பணிகளை ஆய்வுசெய்த கூட்டத்தின் போதும், பின்னர் கல்வி துறையின் நிதி நிலைக் குழு கூட்டத்தின் போதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக சில முக்கிய முடிவுகளை எடுத்தார்கள். அந்த முடிவுகளின் அடிப்படையில் தமிழக சட்டமன்ற பேரவையில் 27.8.2001 அன்று கல்விக்கான மானிய கோரிக்கை மீது நடந்த விவாதத்திற்கு பின்னர் அளிக்கப்பட்ட பதிலில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

1) அனைத்திந்திய பணிகளுக்கான–இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மத்திய அரசின் பணிகள் ஆகியவற்றிற்கு நடக்கும் போட்டித் தேர்வுகளில் அதிக அளவில் பெண்கள் கலந்து கொள்ள, அவர்களுக்கு பயிற்சி அளிக்க இரண்டு பயிற்சி மையங்கள் இந்த அரசினால் தொடங்கப்படவுள்ளன.

2) ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி பட்ட மேற்படிப்பு ஆசிரியர்கள் தேர்ந்தெடுப்பதற்கான வயது வரம்பு தளர்த்தப்படும். ஆசிரியர்கள் தேர்வு விரைவில் தொடங்கும். தேர்வு முறையில் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவை இருக்கும்.

3) மெட்ரிகுலேஷன் பள்ளிகளை நன்கு கவனிப்பதற்கு முழு நேர இயக்குநர் பதவி உருவாக்கப்படவிருக்கிறது.

4) ஆட்சி பொறுப்பேற்ற சில நாட்களிலே முதலமைச்சர் அவர்கள் வெளிப்படையான ஆசிரியர் இட மாறுதல்



கொள்கை ஒன்றை அறிவித்திருந்தாா்கள். சமீபத்தில் இந்த மாறுதல் திட்டம் அமல்படுத்தப்பட்ட போது ஆசிரியா் சமுதாயம் முழுமையும் ஒருமனதாக இந்தத் திட்டத்தை வரவேற்றது. இனி அரசு இந்தத் திட்டத்தைக் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியா் அல்லாத பிற ஊழியா்களுக்கும் விரிவுபடுத்தும்.

5) இதுநாள்வரை பொறியியல் கல்லூரிகளுக்கு ஒற்றைசாளர முறையில் மாணவா்களை அனுமதிப்பதற்கு சென்னையில் மட்டுமே கவுன்சிலிங் நடத்தப்பட்டு வந்தது. இந்த கல்வி ஆண்டு முதல் இந்த கவுன்சிலிங் முறை திருச்சிராப்பள்ளியிலும் நடத்தப்பட்டு அது மாணவா்கள் மற்றும் பெற்றோா்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்றுள்ளது. வருங்காலத்தில் கவுன்சிலிங் முறையை தமிழகத்தில் பிற மையங்களுக்கும் விரிவுப்படுத்த அரசு எண்ணியுள்ளது.

6) பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பற்றி மாணவா்கள் அறிந்து கொள்ளும் வண்ணம், அவா்களுக்கு வழி காட்டுவதற்காக "வேலைவாய்ப்பு வழிகாட்டும் பிரிவு" அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கல்லூரிகளில் அமைக்கப்படும்.

7) அரசு பொறியியல் கல்லூரிகளில், சுயநிதி அடிப்படையில் வேலைவாய்ப்பு உடனே கிடைக்கக் கூடிய படிப்பு பிரிவுகள் தொடங்கப்படும். இந்தப் படிப்பு பிரிவுகளுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் இருப்பதாக அறியப்படுகிறது. இந்தப் படிப்பு பிரிவுகளுக்கு நியாயமான கட்டணங்கள் விதிக்கப்படும்.

8) பள்ளிகளில் 6–வது வகுப்பு முதல் 8–வது வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியா்களுக்கு விளையாட்டுத் துறையில் Sports Report Card அறிமுகப்படுத்தப்படும். இதில் மாணவ மாணவியா்களுடைய விளையாட்டு ஆா்வத் திறனை குறிப்பிட்டு காணபிக்கப்படும். இது மாணவ மாணவியா்களுக்கு ஏற்கெனவே உள்ள பாட முன்னேற்ற அறிக்கை போன்றே இருக்கும். இந்த முறையின் மூலம் மாணவ மாணவியா்களிடையே காணப்படும் விளையாட்டிற்கான ஆா்வத்தை தூண்ட முடியும்.



9) இதுவரையில் தொழில் நுட்ப படிப்பு பிரிவுகளுக்கான, அதாவது மருத்துவம் பொறியியல் போன்றவற்றில் சேரும் போது மாணவா்கள் மிகக் குறைந்த Cut Off மாா்க் வித்தியாசத்தில் வாய்ப்பை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதை தவிா்க்கும் பொருட்டு, அந்த மாணவா்கள் மீண்டும் மேம்பாட்டு முறையில் தோ்வுகள் எழுதி அவா்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் அடுத்த ஆண்டு தொழில் நுட்ப கல்லூரிகளில் சேரும் வாய்ப்பை மேம்படுத்திக் கொள்ளலாம் என்ற முறை இருந்து வருகிறது. காலப்போக்கில் இந்த மாதிரி இரண்டாவது, மூன்றாவது மேம்பாட்டு முறை மாற்றுத் தோ்வு எழுதி

(Improvement) அதன் மூலம் அதிக மதிப்பெண்களை பெறுபவர்கள் மட்டுமே தொழில் நுட்ப படிப்பு பிரிவுகளில் சேருகின்ற நிலை உருவாகி விட்டது. இதனால் முறையாக பயின்று வரும் மாணவர்களுக்கு தொழில் நுட்ப கல்லூரிகளில் சேரும் வாய்ப்பு குறைந்து விடுகிறது. எனவே அந்த அந்த ஆண்டில் பயிலும் மாணவர்களுக்கு நியாயம் வழங்குவதற்காக இனிமேல் மேம்பாட்டு தேர்வுகள் மூலம் மதிப்பெண்கள் பெற விரும்பும் மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் தேர்வுகளை எழுதி கிடைக்கும் மதிப்பெண்களை வைத்தே தொழில்நுட்ப கல்லூரிகளில் சேரும் வாய்ப்பு வழங்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்பு போல ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் மட்டும் தேர்வுகள் எழுதி மதிப்பெண்களை மேம்படுத்தி தொழில்நுட்ப கல்லூரிகளில் சேரும் முறைக்கு இது மாற்றாக இருக்கும்.

10) 'மொழிஞாயிறு' தேவநேயப்பாவாணர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு மாநில அளவில் அரசு விழாவாக நடத்தப்படும்.

11) தமிழ் இலக்கியங்களை பாதுகாத்ததில் டாக்டர் ஊ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் பணி மகத்தானது. அவரது பணிகளை நினைவு கூரும் முகத்தான், அவர்கள் தமிழில் எழுதிய நூல்கள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்படும்.



12) ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுத் துறை நடவடிக்கைகளை அதிகரிக்கவும், இளம் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தவும் மாவட்ட விளையாட்டுத் துறை குழுக்களை இந்த அரசு அமைக்கும். மாவட்டந்தோறும் அமைக்கப்படவுள்ள குழுவிற்கு தலைவராக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருப்பார்கள். உதவித் தலைவராக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் இருப்பார். குழுவின் செயலாளராக மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலர் பணியாற்றுவார். மேலும், குழுவின் உறுப்பினர்களாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள முக்கியமான விளையாட்டு மன்றங்களின் தலைவர் அல்லது செயலாளர் நியமிக்கப்படுவார்கள். மேலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையில் அக்கறை காட்டுகின்ற அறக்கட்டளைகள் இந்த குழுவில் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும் இந்த குழு, கீழே குறிப்பிடும் குறிக்கோள்களை நிறைவேற்றும்.

★ மாவட்டத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளின் போது மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலருக்கு உதவிகள் செய்யும்.

★ மேலைநாட்டு விளையாட்டு வீரர்கள் அடைந்த சாதனை அளவிற்கு திறமையை வளர்க்க ஊக்கமளிக்கும்.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டு கட்டமைப்புகளை உருவாக்க பணிபுரியும்.

★ அந்தந்த மாவட்டத்தில் பெரும்பான்மையாக விளையாடப்படும் விளையாட்டைத் தேர்ந்தெடுத்து அதில் மேலை நாட்டவர் அடைந்த அளவிற்கு சாதனைகளை மிஞ்சுவதற்காக பயிற்சி அளிக்க பணிபுரியும்.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டு மேம்பாட்டிற்கான திட்டம் ஒருங்கிணைந்த முறையில் உருவாக்கும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாவட்ட விளையாட்டுத் துறை குழுக்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் அவைகளுக்கு தேவையான எல்லா வகை தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கும்.

13) அறிவியல் தொழில் நுட்பத்திற்கு ஊக்கம் அளிப்பதற்காக அறிவியல் நகரத்தின் நிர்வாக கட்டடம் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். இதில் தகவல் மையம், மாநாட்டு கூடம், தலையரங்கம், விவர மையம் ஆகியவை இருக்கும்.

• • •

**எம்.** ஆர்.ஐ. (Magnetic Resonence Imaging) என்ற நுண்கதிர் கருவி மனித உடலில் ஏற்படும் நோய்களை துல்லியமாக கண்டறிய பயன்படும் அதி நவீன கருவியாகும். இந்த நவீன கருவி, மனித உடலில் உள்ள மல்டிபிள் செலெரோஸிஸ் (Multiple Selerosis), மூளையில் ஏற்படும் சதைக்கட்டிகள் (Brain Tumor), மூளை, முதுகெலும்பு முள் (Spine), மூட்டு சேரும் இடங்களில் ஏற்படும் நோய் பரவுதல், தசை நார்கள் மற்றும் எலும்புகளின் அமைப்பில் ஏற்படும் காயங்கள், ஸ்ட்ரோக்களை (Strokes), அவைகளின் ஆரம்ப நிலை முதலியவற்றை கண்டுபிடிக்கவும், உடலின் மென்மையான திசுக்களில் ஏற்படும் கட்டிகள், எலும்புகளில் ஏற்படும் கட்டிகள், சிஸ்ட்ஸ் (Cysts) மற்றும் முதுகெலும்பு முள்ளில் உருவாகும் ஹெர்னி யேட்டட் டிஸ்க்குகள் (Herniated Discs) ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும் பயன் படுத்தப்படுகிறது. எம்.ஆர்.ஐ.ஸிஸ்டம் அயனைஸிங் கதிர்வீச்சினை பயன்படுத்து வதில்லை. ஆதலாலும், எம். ஆர். ஐ. காண்ட்ராஸ்ட் எடுக்க பயன்படும் பொருட்கள் மிக குறைந்த பக்க விளைவுகள் ஏற்படுத்துவதாலும், இக்கருவி நோயாளிகளுக்கு ஆறுதலைத் தருகிறது என்பது உண்மையாகும். எம்.ஆர்.ஐ. எந்த மட்டத்திலும் பிரதிமையை (Image) தரும் திறனுடையது என்பது இக்கருவியின் இன்னொரு பெரிய நற்பயனாகும். சி.டி.ஸ்கேன் கருவி ஒரே ஒரு மட்டத்தில், அதாவது ஆக்ஸியல் மட்டத்தில் மட்டும் பிரதிமையை (Image) தரும். ஒரு எம்.ஆர்.ஐ. சிஸ்டம் நோயாளியை நகர்த்தாமலேயே, எந்தக் கோணத்திலும் ஆக்ஸியல் இமேஜஸ் (Axial Images) மற்றும் சாஜிட்டல் ப்ளேன் (Sagitall Plane) மற்றும் கோரனலி ப்ளேன் (Coronally Plane) முதலியவற்றின் பிரதிமையை (Image) உருவாக்கக் கூடியது. இக்கருவியின் விலை ரூ.4.80 கோடிகளாகும்.

**அரசு மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன்**

இதுவரை தமிழ்நாட்டில் உள்ள எந்த அரசு மருத்துவமனையிலும் இக்கருவி நிறுவப் படவில்லை. ஆகையால், அரசு மருத்துவ மனைகளில் வந்து கொண்டிருக்கின்ற நோயாளிகள், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் நிறுவப்படாத காரணத்தால், உயர்ந்த தரம் வாய்ந்த இந்த ஸ்கேனிங் எடுப்பதற்காக, தனியார் மருத்துவமனைகளுக்கு அனுப்ப வேண்டிய நிலை இருந்தது. ஆனால் தனியார் மருத்துவ மனைகளில் இந்த வகை ஸ்கேன் எடுப்பதற்கு மிக அதிகமான தொகை வசூலிக்கப்பட்டு வருவதால், பொதுமக்களுக்கு இத்தொகையை செலுத்த இயலாத நிலை இருந்தது. தற்பொழுது தமிழகத்தில் நான்கு தனியார் எம்.ஆர்.ஐ. கருவிகள் மட்டுமே உள்ளன. அவற்றில் மூன்று எம்.ஆர்.ஐ. கருவிகள். சென்னையிலும் ஒரு கருவி கோயம்புத்தூரிலும் உள்ளது. சென்னை பொது மருத்துவ மனையிலும் மற்றும் மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனையிலும் பொருத்தப் பட்டுள்ள அதிநவீன எம்.ஆர்.ஐ. கருவிகளின் மூலம் தமிழகப் பொதுமக்களுக்கு நவீன வசதியை ஏற்படுத்தி உள்ளது.



*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **23-8-2001** அன்று சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனை ஆகிய இரு மருத்துவமனைகளில் இயங்க உள்ள, மனித உடலில் ஏற்படும் நோய்களை மிகத் துல்லியமாக கண்டறியப் பயன்படும் அதிநவீனக் கருவியான எம்.ஆர்.ஐ.(Magnetic Resonance Imaging) ஸ்கேனிங் நுண் கதிர்க் கருவிகள் பிரிவை, சென்னை அரசு பொது மருத்துவமனையில் திறந்துவைத்தார்.*

# எம்.ஆர்.ஐ. ஸ்கேன்

தென்கோடியில் இருக்கும் நோயாளிகள் எடுப்பதற்காக வெகு தொலைவில் இருந்து சென்னை நகருக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. இவற்றை எல்லாம் மனதில் கொண்டு, அரசு மருத்துவ மனைகளில் வரும் நோயாளிகளுக்காக, தமிழக அரசு சென்னை அரசு பொது மருத்துவமனையில் ஒரு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியையும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் ஒரு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியையும், தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் மூலமாக வாங்கி, நிறுவி பராமரிப்பதற்கு தமிழகஅரசு அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. இந்த 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. கருவி மருத்துவ துறையில் அதி நவீனமானது. மாநிலத்தில் உள்ள அனைத்து ஏழை எளிய மக்களுக்கு மிகக் குறைந்த விலையில், சிறந்த மருத்துவ வசதிகள் செய்துதர வேண்டுமென்பது தான் தமிழக அரசின் தலையாய குறிக்கோளாகும்.





## தமிழக அரசு நடவடிக்கை

அனைத்து பொது மக்களும், உயர்தர மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அதி நவீன மருத்துவக் கருவிகளை நிறுவுவதற்காக, தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சென்னை அரசு பொது மருத்துவமனையிலும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையிலும், சீமென்ஸ் நிறுவனத்தாரால் பொருத்தப்பட்டுள்ள எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் ஏழை எளிய மற்றும் நடுத்தர பிரிவு மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தமிழக அரசின் அங்கீகாரத்தோடு, ஸ்கேன் எடுக்கப்பட இருக்கும் உடல் உறுப்புகளைப் பொறுத்து, மிகக் குறைவான தொகை நோயாளிகளிடமிருந்து வசூலிக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. இத்துடன் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள சில நோயாளிகளுக்கு ஸ்கேன்கள் இலவசமாக எடுத்துத் தரப்பட உள்ளது. நோயாளிகளின் வசதிக்காக பதிவு மற்றும் மருத்துவ அறிக்கை வழங்கும் நிலைகள், நோயாளிகள் காத்திருக்கும் அறை போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மிக நவீன எம்.ஆர்.ஐ. கருவிக்கு 24 மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் வழங்க 125 கிலோ வோல்ட் ஆம்பியர் (KVA) திறனுள்ள மின் உற்பத்தி செய்யும் இயந்திரம் (ஜெனரேட்டர்) பொருத்தப்பட்டுள்ளது.

*– தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம்* □

□ அசோகமித்திரன்

# அப்பாவின் சிநேகிதர்

"சங்கரனோட பிள்ளையா? இங்கே மெட்ராஸுக்கு எப்போடா வந்தே?"

சையது மாமா!

நாராயணன் திடுக்கிட்டு நின்றான். அவன் சையது மாமாவிடம் கடைசியாக நான்கு மாதங்கள் முன்பு பேசிய பேச்சு: "நீங்க எங்களை மோசம் பண்ணிட்டீங்க, மாமா! நாங்க வீட்டைக் காலி செய்ய உங்க பேச்சைக் கேட்டு உங்களையே நம்பி வேறே எங்கேயும் தேடலை. இப்போ தெரிஞ்சிடுத்து நீங்க பொய்யா அளந்திருக்கீங்கன்னு. நீங்க நன்னா இருக்க மாட்டீங்க மாமா. நீங்க எங்களை ரொம்ப மோசம் பண்ணிட்டீங்க''. அவனுடைய கோபத்தைத் தெரிவிக்க அதிகபட்சமாக அவனால் செய்ய முடிந்தது இதைச் சொல்லிக் கண்ணீர் விட்டது தான். சையதிடம் பதில் எதிர் பார்க்காமல் அந்த இடத்தை விட்டு விரைந்து சென்று விட்டான்.

வீட்டில் பிரமை பிடித்தவள்போல உட்கார்ந்திருந்த அம்மாவிடம், 'இந்த ஊரைவிட்டே போயிடலாம்மா, எல்லாருமே மோசக்காரங்க. நாம இந்த இடத்திலேயே இருக்க வேண்டாம்', என்றான். அவனுக்குத் தெரிந்தவரை வீட்டுச் சாமான்களைத் திரட்டி வேண்டாததென்று தோன்றியவற்றை வண்டி வண்டியாக ஏலக்கடையில் பத்து ரூபாய்க்கும் இருபது ரூபாய்க்கும் விற்றுவிட்டு அம்மா தம்பி தங்கையோடு சென்னை வந்து சேர்ந்து கிணற்றங்கரையில் ஓர் அறையும் வாசல் கதவருகே ஓர் அறையுமாக பிரித்து வைத்திருந்த ஒரு பழைய மாம்பலத்துப் பழைய வீட்டிற்கு ஒண்டிக் குடித்தனம் வந்து விட்டான். அப்பா செத்த ஊரே வேண்டாம் என்று ஐந்நூறு மைல் தள்ளியிருந்த இந்த இடத்தில் மீண்டும் அப்பாவின் ஒரு சிநேகிதர் சையது மாமா. அவனை ஏமாற்றி ஊரை விட்டேபோய்விடச் செய்த சையது மாமா.

சையது, நாராயணனை அப்படியே வாரிக் கட்டிக் கொண்டார். "டேய் நாராயணா, நீ அன்னைக்கு என்னை மோசக்காரன்னு சொல்லிட்டுப் போனப்புறம் எவ்வளவு தடவை உன்னை நினைச்சுண்டு அழுதேன் தெரியுமா. நான் ஏண்டா இந்த வயசிலே உன்னை மோசம் பண்ணப் போறேன்? நானும் உங்கப்பனும் பள்ளிக் கூடத்திலே சிநேகிதங்களாவாடா இருந்தோம்? அவன் போற கல்யாணம் விசேஷத்துக்கெல்லாம் எனக்குத் திருட்டுப் பூணூல் போட்டு அழைச்சிண்டு போயிடுவாண்டா. எங்களுக்கு உடம்பு தான் இரண்டு இருந்ததேதவிர உயிரு ஒண்ணுதாண்டா. அவன் பெண்டாட்டி பிள்ளைகளுக்கு ஏதும் செய்ய முடியலேன்னு எவ்வளவு தவிச்சிருப்பேன் தெரியுமா? இப்போ எங்கேடா இருக்கே? அம்மா, தம்பி தங்கையெல்லாம் சௌக்கியமா? எங்கேடா இருக்கீங்க இப்போ? வாடா, என்னை உடனே வீட்டுக்கு அழைச்சுண்டு போடா,"

நாராயணன் அவர் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டான். "நீங்க இங்கே எங்கே வந்தீங்க மாமா?" என்று கேட்டான்.

"என் மச்சினன் குரேஷி இங்கதான் இருக்காண்டா. என் புத்தியை ஜோட்டாலே அடிக்கணும். நாலு வருஷமா இங்கே வந்துடு இங்கே வந்துடுன்னுதான் அவன் சொல்லிண்டிருந்தான். நான்தான் அந்தப் பாழாப்போன சிகந்தராபாத்திலேயே இருந்து திண்டாடினேன். உனக்குத்தான் தெரியுமேடா. மிலிட்டரி வந்து நிஜமாவே குவிந்தப்புறம் என் வீட்டிலேதான் எவ்வளவு தடவை கல்லடிச்சிருக்காங்க. சாணியைக் கரைச்சுக் கொட்டியிருக்காங்க? டேய் நாராயணா. இந்த அறுபது வயசிலே பாக்காத துன்பத்தையெல்லாம் இந்தக் கடைசி நாலு வருஷத்திலே பார்த்துட்டேண்டா".

சையது அழுது கொண்டிருந்தார். ஆறடிக்குமேல் ஆஜானுபாகுவாக இருந்த மனிதர் இப்போது அவன் அளவுக்குக் குறுகிப் போய்விட்ட மாதிரி இருந்தது.

அவர் குறுகிப் போய்ப் பல வருடங்கள் ஆகிவிட்டன. இரண்டாம் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோதுதான் அவர் சிகந்தராபாத் வந்திருந்தார். தற்செயலாக மிலிட்டரி காண்ட்ராக்டர் என்று பதிவு செய்துகொண்டார். ஊரிலிருக்கும் வெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறி, கோழி முட்டை எல்லாம் திரட்டிப் போட்டுக் கொண்டு இரண்டே ஆண்டில் கொள்ளையாகச் சம்பாதித்தார். பணத்தை எண்ணாதபடி அப்படியே கோட்டுப் பையிலிருந்தும் எடுத்துப் போடுவார் என்றும் அவர் பக்கத்திலிருப்பவர்கள்தான் எண்ணுவார்கள் என்றும் நாராயணனின் அப்பா சொல்லுவார். அப்படிப் பணம் குவித்து வந்தவர் அவருக்குத் தொடர்போ பிணைப்போ இல்லாத இயக்கங்களில் கலந்து கொண்டார். அவராக மிலிட்டரி உடை தைத்துப் போட்டுக் கொண்டு நிஜாமுக்கு படை திரட்டினார்.

அவர் இருந்த பேட்டையில் அந்த ஆட்களை கையில் மூங்கில் போல் தூக்கிவரச் செய்து லெஃப்ட்–ரைட் ரைட்–அபவுட்–டர்ன் என்று ஊர்வலம் வந்தார். அந்த நாட்களில் நாராயணனின் அப்பாவே சையதைச் சந்திக்கத் தயங்குவார் என்று அம்மா சொல்லியிருக்கிறாள்.

சையது அவர்கள் வீட்டுக்கு வந்தால் நிஜாமைத் தவிர இதர மனிதர்கள் எல்லாரும் அயோக்கியர்கள் என்று கத்திப் பேசுவார். 'நிஜாம் ராஜ்யத்துள்ளே ஒரு பயல் வரட்டும். கண்டதுண்டமா வெட்டிடறேன்". என்பார். பயல் என்ன, சைன்யமே வந்தது. சையதுக்குச் சட்டைப் பையிலிருந்து எடுத்துப் போடக் காலணா அரையணா கூட இல்லாமல் போய்விட்டது.

''உங்க அம்மாவெல்லாம் பாக்க வேண்டாமாடா? வாடா, நேரே உன் வீட்டுக்குப் போவோம்."

"இல்லே, மாமா..."

"என்னடா?"

"நான் உங்களப்பத்தி ரொம்ப மோசமா அம்மாகிட்டே சொல்லியிருக்கேன், மாமா."

"நீ சொன்னா எனக்கென்னடா? நீ நேத்திப் பையன்; உனக்கு நல்லது எது மோசம் எதுன்னு என்ன தெரியும்"?

''நான் நாளைக்கு அழைச்சிண்டு போறேன், மாமா. இப்பவே ஆபீஸுக்கு லேட்டாயிடுத்து. நான் வரேன் மாமா".

"நாளைக்கு என்னை நீ எங்கேடா பாப்பே? ஓடறியே?"

"குரேஷி வீடுன்னு சொன்னீங்களே, மாமா"

"அந்த வீடு உனக்குத் தெரியுமா?"

நாராயணன் வாயைத் திறந்து பேசாது நின்றான்.

"சரி. போடா. உனக்கு இந்த சையது இனிமே எதுக்கு? எல்லாம் உங்க அப்பாவோட போச்சு."

'இல்லேமாமா. நான் இங்கேயே வந்துடலாம்னு இருந்தேன்.'

திடீரென்று நடுரோடில் சையது தன் மார்பில் அடித்துக் கொண்டார். "நான் அவ்வளவு இளப்பமாயிட்டேண்டா! நான் அவ்வளவு கிள்ளுக் கீரையாயிட்டேண்டா?"

நாராயணன் நிதானமாக இருந்தான். முன்பொரு சமயம் சையது இப்படித்தான் தன்னைத் தானே அடித்துக் கொண்டார். அன்று நாராயணன் செய்வதறியாது பதறி நின்று கொண்டிருக்க, அவர் மாறி மாறி அடித்துக் கொண்டேயிருந்தார். இன்று அவன் உடனே சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு அவருடைய இரு கைகளையும் பிடித்துக் கொண்டான். அவர் நன்றாயிருந்த காலத்தில் அவர் கையைப் பிடித்தால் விரல்கள் இணையாது. இன்று ஓர் எலும்புக் கூட்டின் மணிக்கட்டைப் பிடிப்பது போலிருந்தது.

சையது ஒரு நிமிடம் சிலை போல நின்றார். அவர் கண்களிலிருந்து நீர் பெருகியது. அது அப்படி ஒன்றும் நாராயணின் மனத்தை நெகிழ வைத்து விடவில்லை. தெருவில் போய்க் கொண்டிருந்தவர்கள் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

"வாங்க, மாமா, வாங்க வீட்டுக்குப் போவோம்."

நான்கு நாட்கள் வயிறு காய்ந்த வீட்டுப் பிராணி போல சையது அவனைப் பின் தொடர்ந்தார். நாராயணனுக்குப் பரிதாபமாகவும் கோபமாகவும் இருந்தது. தன்னை நிஜாமின் படைத் தலைவராக நினைத்துக் கொண்டிருந்த நாட்களில் சையதுக்கு நாராயணனின் அப்பா ஒரு பொருட்டாக இருந்ததில்லை. அன்று எவ்வளவுதான் உரத்துப் பேசுவார்! இப்போதும் நான்கு ஊர் கேட்கிறபடிதான் கத்துகிறார். கிட்டத்தட்டக் கெஞ்சல், சையதால் கெஞ்சுவதைக்கூட உரத்துத் தான் செய்ய முடிகிறது.

"நீங்க எப்போ மாமா மெட்ராஸுக்கு வந்தீங்க. அதைச் சொல்லலியே?"

"வந்து ஒரு வாரம் ஆறதுடா."

"மாமி, அன்வர் எல்லாரும் வந்திருக்காங்களா?"

"மாமி வந்திருக்கா, அவ்வளவு தான்."

"மாமிக்கு ரேஷன் கார்டு கிடைச்சுடுத்தா, மாமா?"

அவர்கள் இருந்த சிகந்தராபாத்தில் ஒவ்வொரு வருக்கும் தனித்தனி ரேஷன் அட்டை. யுத்தம் நடந்து கொண்டிருந்த நாட்களில் ஊரெல்லாம் சர்க்கரைக்கும் அரிசிக்கும் பறந்து கொண்டிருந்த வேளையில் சையது வீட்டில் மூட்டை மூட்டையாகச் சர்க்கரை இருக்கும். நாராயணனின் அப்பாவே பல முறை சையதிடமிருந்து சர்க்கரை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால் அதன்பின் தொடர்ந்த நாட்களில், அதுவும் இந்தியா சுதந்திர நாடான பிறகு, எல்லோரையும் போல சையதும் ரேஷன் கார்டைப் பொக்கிஷமாகக் கருத வேண்டி வந்தது. சையதின் மனைவிக்கும் மூன்று பெண்களுக்கும் ரேஷன் கார்டே வாங்கவில்லை என்று அப்போது தெரிந்தது. ரேஷன் ஆபீஸில், 'இவ்வளவு நாட்கள் எப்படிச் சமாளித்தீர்களோ, அப்படியே இப்போதும் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விட்டார்கள். விஷயம் இதுதான். அந்த ரேஷன் ஆபீஸில் சூப்ரண்டெண்டண்டாக இருந்த அஞ்சையாவை சையதின் விசேஷப் படை ஒரு முறை நடுத்தெருவில் கவனித்துக் கொண்டிருந்தது. அப்போது நிஜாமின் ராஜ்யம். சையதுக்கு ஒரு காலமானால் அஞ்சையாவுக்கு ஒரு காலம்.

"கடைசி வரைக்கும் கிடைக்கவேயில்லேடா. இங்கே ரேஷன் கார்டுக்கு அப்ளை பண்ணப் போனா அந்த ஊர் கார்டைக் கொண்டான்றான். எங்க வீட்டிலே சாயாவுக்குச் சர்க்கரை போட்டுக் குடிக்கறதையே விட்டாச்சு, தெரியுமா?"

"தெரியும் மாமா."

ரயில்வே லெவல் கிராஸிங்கைத் தாண்டிப் பழைய மாம்பலத்தின் தெருக்களில் நாராயணன் சையதை அழைத்துக் கொண்டு சென்றான். அவன் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதம் தான் ஆகிறது. அதற்குள் மூன்று நாட்கள் காலதாமதமாப் போயிருக்கிறான். எப்படியும் இந்த வேலையில் அதிக நாட்கள் இருக்கப் போவதில்லை. ஆனால் வேலையில் இருக்கும் நாட்களில் ஒழுங்காகப் போகலாம் – அது முடியாது போலிக்கிறது.

எப்போதோ அப்பாவுடன் சேர்ந்து படித்த மனிதர்ராம். எப்பேர்ப்பட்ட மனிதர்? எல்லாப் பொறுப்பையும் தான் ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி விட்டு எதையும் செய்யாதிருக்கும் மனிதர். சிறிது எதிர்த்துப் பேசினால் உடனே தன்னைத் தானே மொத்திக் கொள்கிறவர்.

நாராயணனுக்கே இந்த இடம் அதிக பழக்கமில்லை. அவன் வீடு செல்ல அவனுக்குத் தெரிந்த ஒரே வழியில் கால் வைத்த இடமெல்லாம் சேறு. சையதும் ஆடி ஆடிச்சேற்றில் நடந்து வந்து கொண்டிருந்தார். இந்த மனிதனைப் பார்த்தவுடன் அம்மா என்ன சொல்லுவாள்? முதலில் யாரைத் திட்டுவாள்? சையதையா, நாராயணனையா?

நாராயணனுக்கும் சையது மீது மிகவும் கோபமாக இருந்தது. எங்கோ இருந்த ஒரு வீட்டைக் காண்பித்து, "இது காலியாகப் போறதுடா. இந்த வீட்டையெல்லாம் பார்த்துக்கற முன்ஷிகிட்டே சொல்லியிருக்கேன். நீங்க கவலையே படவேண்டாம். அடுத்த மாசம் இங்கேயே வந்திடலாம்," என்றார்.

நாராயணன் அவன் அப்பா வேலை பார்த்த காரியாலயத்திற்குச் சென்று வீட்டைக்காலி செய்ய இன்னும் ஒரு மாதம் தவணை கேட்டு வந்தான். ஒரு மாதத்திற்குப் பிறகு சையதைக் கண்ணிலேயே காண முடியவில்லை. முன்ஷியைத் தேடிப் பிடித்து விசாரித்ததில் முதலில் அவருக்கு சையதைத் தெரியாது என்றும் அதைவிட முக்கியமாக தம்முடைய நிர்வாகத்திலுள்ள எந்த வீடும் காலியாகப் போவதில்லை என்றும் தெரிவித்தார். அதற்குப் பின் நடந்த சந்திப்பில் தான் "நீங்க எங்களை மோசம் பண்ணிட்டீங்க, மாமா..."



நாராயணனின் அம்மாதான் சையதை எவ்வளவு வைதிருப்பாள்! சையது விஷயமே அவளிடம் சொல்லாமல் நாராயணனாக ஊரை விட்டுப் போவதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம். ஆனால், அவனால் சையதைப் பற்றிச் சொல்ல முடியாமல் இருக்க முடியவில்லை. ஏனோ அன்று அம்மாவுக்கு அழுகை வரவில்லை. அப்பா செத்துப் போனபிறகு எடுத்ததற்கெல்லாம் அழுபவள் அன்று வாயார வைதாள்.

ஏன் இந்த மனிதன் கண்ணில் விழுந்தோம்? நாம் போகும் ஊரிலெல்லாம் இந்த மனிதனுக்கு என்ன வேலை? எல்லாவற்றையும் விட்டொழித்து விட்டு நிம்மதியாக இருக்கும் போது திடீரென்று இவன் எங்கே முளைத்தான்?

சையது மாமாவின் செருப்பு அறுந்து விட்டது. அதை அவர் கையில் எடுத்துக் கொண்டு நாராயணனைப் பின் தொடர்ந்தார்.

இன்று அவருக்குப் போதாத காலம். அவருடைய சிநேகிதன் மனைவி அவரைக் கண்டபடி திட்டப் போகிறாள், ஏசப்போகிறாள், மானத்தை வாங்கப் போகிறாள்....

"இதுதான் வீடு," என்று நாராயணன் சொன்னான், வாசற் கதவு சாத்தியிருந்தது.

"முழு வீட்டிலியுமா?"

"இல்லே, இரண்டு அறைதான்."

நாராயணன் கதவை ஜாக்கிரதையாகத் தட்டினான். வீட்டுக்காரர் கதவைத் திறந்தார்.

"சைக்கிள், செருப்பு எல்லாத்தையும் வெளியிலே வைச்சுட்டு வா. வீடெல்லாம் சேறாகிறது," என்றார்.

நாராயணன் சைக்கிளைப் பூட்டி, செருப்பைக் கழட்ட, சையது அவருடைய செருப்பையும் ஓரமாகப் போட்டார். இருவரும் வீட்டினுள்ளே நுழைந்தார்கள். நாராயணன் வசித்த பகுதிக்கு இருந்த முன் அறை பூட்டியிருந்தது.

"அம்மா சமையலறையிலே இருக்கா போலேயிருக்கு," என்று நாராயணன் சையதிடம் தழைந்த குரலில் சொன்னான்.

"நான் உள்ளே வரலாமாடா?" என்று சையது அதைவிடத் தழைந்த குரலில் கேட்டார்.

வீட்டுக்காரர் கண்ணுக்குத் தெரியவில்லை. "நீங்க வாங்க மாமா" என்று நாராயணன் சொன்னான். உடனே அப்படிச் சொல்லியிருக்கக் கூடாதோ என்றும் தோன்றியது.

அவனுடைய அம்மா புத்திசாலியாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் வீட்டுக்காரருக்கு சையது முஸ்லிம் என்பது தெரிந்து விடும்...

அப்போது அம்மாவே முற்றத்தைத் தாண்டி வந்தாள். "இன்னிலேந்தே வேலையிலேந்து நின்னுட்டயா?", என்று நாராயணனைக் கேட்டாள். சையது நின்ற இடம் பகலிலும் இருட்டாக இருந்தது.

நாராயணன் சையது இருந்த திசையில் திரும்ப அம்மாவும் அவரைப் பார்த்துவிட்டாள். நாராயணனுக்குத் திகில் தாங்க முடியாததாக இருந்தது. அம்மா கேட்டாள், "யாரு?"

"நான்தாம்மா, சையதும்மா" சையதே பேசினார்.

அம்மா ஒரு கணம் திகைத்து நின்றாள். அவள் வையப் போகிறாள் என்று நாராயணன் காத்திருந்தான்.

ஆனால் அவள், "உங்களை எல்லாம் விட்டுட்டு இவ்வளவு சீக்கிரம் போக உங்க சிநேகிதருக்கு எப்படி மனசு வந்தது?" என்று கேட்டபடி புலம்ப ஆரம்பித்தாள்.

*அப்பாவின் சிநேகிதர்' என்ற*
தொகுப்பு நூலிலிருந்து ●

ஆசிரியராக தமது பணியினைத் தொடங்கி, இந்த நாட்டின் மிக உயர்ந்த பதவியான குடியரசுத் தலைவர் பொறுப்பினையும் ஏற்று திறம்படப் பணியாற்றி, தமது அறிவால், சிந்தனை வளத்தால், சான்றாண்மையால் உலகே போற்றும் தத்துவ மேதையாகத் திகழ்ந்து, தாம் சார்ந்திருந்த ஆசிரியச் சமுதாயத்துக்கே தனிப் பெரும் பெருமையைத் தேடித் தந்தவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள். ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாள் நாடெங்கும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இச்சீரிய நாளில், தமிழகமெங்கும் உள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு*
*கற்றனைத் தூறும் அறிவு'*



# ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு முதல்வர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

என்று கல்வியின் சிறப்பை வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைத்துள்ளார். ஒரு நாட்டின் வளங்களில், மிக முக்கியமான ஒன்றாக மனித வளம் விளங்குகிறது. அந்த மனித வளம் ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்பட வேண்டும் என்றால் ''அனைவர்க்கும் கல்வி'' என்ற கொள்கை வெற்றி அடைய வேண்டும். ஒரு சமுதாயத்தில் உள்ள அனைவரும் கல்வி அறிவு பெற்றவர்களாகத் திகழ்ந்தால், அந்தச் சமுதாயம் வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஜாதி, மத, இன, மொழி ஆகிய வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்பினருக்கும் கல்வி புகட்டி, சமுதாய மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குகின்ற ஆசிரியர்களின் பணி மகத்தானது, போற்றுதலுக்குரியது! இந்த நல்ல நாளில் ''டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது'' பெறுகின்ற ஆசிரிய சகோதர, சகோதரிகள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் மகிழும் வண்ணம் ''வெளிப்படையான இடமாறுதல்'' கொள்கையினை அமல்படுத்தி, ஆசிரியச் சமுதாயத்தின் ஒட்டுமொத்த பாராட்டுதல்களையும் பெற்றுள்ள தமிழக அரசு, நமது மாநிலத்தில் உள்ள கல்வி நிலையங்கள் அனைத்தும், அதாவது கிராமப் பள்ளிகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை, உலகத் தரம் வாய்ந்த கல்விக் கூடங்களாக உருவெடுப்பதற்கும், ஆசிரியர்களின் நலன்கள் மென்மேலும் பேணப்படுவதற்கும், தனது சீரிய முயற்சிகளைத் தொடரும் என்று இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்னாளில் மீண்டும் ஒரு முறை, தமிழகத்து ஆசிரியப் பெருமக்கள் அனைவர்க்கும் எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்வதில் அகமகிழ்கிறேன். ★



# மின்சார கொள்முதல் ஒப்பந்தங்கள்

## முதல்வர் முன்னிலையில் கையெழுத்து

பெருகி வரும் தமிழகத்தின் மின் தேவையைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்து (Neyveli Lignite Corporation) 493 மெகாவாட் மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்ய உள்ளது. இதற்கான இரண்டு மின்சார கொள்முதல் ஒப்பந்தங்கள் (Power Purchase Agreements) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கும் இடையே 20.9.2001 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. கே. ஞானதேசிகன், அவர்களும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. ஏ.கே.சகாய் அவர்களும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அப்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும் மேலாண் இயக்குநருமான திரு. சகாய் அவர்கள் இந்த ஒப்பந்தம் தங்களுடைய நிறுவனத்திற்கு பெருமை அளிக்கக்கூடியது என்று தெரிவித்தார். மேலும் தங்கள் நிறுவனம் மூலம் ஆற்றி வருகின்ற மக்கள் நலப் பணிகளைப் பற்றி எடுத்துக் கூறினார். இதற்கு முதலமைச்சர் அவர்கள் தனது பாராட்டுக்களை தெரிவித்து கொண்டதுடன், தமிழகத்தின் நலனுக்காக தொடர்ந்து இப்பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

முதல் ஒப்பந்தத்தின்படி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன அனல் மின் நிலையம் – Iன் விரிவாக்கத்தில், தலா 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் அமைக்கப்படவுள்ள இரண்டு புதிய அலகுகளிலிருந்து (unit) 168 மெகாவாட் மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுரங்கம் தோண்டுவது உட்பட ரூபாய் 3000 கோடியில் அமையவுள்ள இந்த மின் திட்டம் 2002ஆம்



ஆண்டு மார்ச் மாதத்தில் மின் உற்பத்தியை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது ஒப்பந்தத்தின்படி, நெய்வேலி அனல் மின் நிலையம் – IIன் விரிவாக்கத்தில் உற்பத்தி செய்யப்பட உள்ள **500** மெகாவாட் மின் உற்பத்தியில் **325** மெகாவாட் மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு சுரங்கம் தோண்டுவது உட்பட ரூபாய் **4000** கோடி ஆகும். இதில் மின்உற்பத்தி **2007** ஆண்டில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தற்போதைய பங்களிப்பு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அன்றாட மின்தேவையில் **15** விழுக்காட்டை நிறைவு செய்யும் வகையில் அமைகிறது. இந்நிறுவனத்திடமிருந்து கூடுதலாக பெறப்படும் மின்சாரத்திற்குரிய கட்டணம் மத்திய மின் ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்படும். கூடுதலாக மேற்காணும் மின்உற்பத்தி தொடங்கப்படும்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மின்உற்பத்தி திறன் தற்போது உள்ள **2070** மெகாவாட்டிலிருந்து **2990** மெகாவாட்டாக உயர்கிறது. மேலும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் பெறும் பங்கு **1041** மெகாவாட்டிலிருந்து **1534** மெகாவாட்டாக உயர்கிறது.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் திரு. பி. சங்கர், நிதித்துறை செயலர் திரு. ஆர். சந்தானம், தொழில்துறை செயலர் திரு. எம்.ஏ. கௌரிசங்கர், எரிசக்தித்துறை செயலாளர் திரு. ஆர். ரத்தினசாமி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் உறுப்பினர்கள் திரு. எஸ். நாகல்சாமி, திரு. எஸ். தண்ணீர்மலை, திரு. ஏ. பாலசுப்பிரமணியன், தலைமைப் பொறியாளர் (திட்டம்) திரு. ஆர். ஜெகநாதன் ஆகியோரும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில் இயக்குநர் (நிதி) திரு. எஸ். ஜெயராமன், இயக்குநர் (மின்சாரம்) திரு. பி.ஆர். பாலசுப்பிரமணியன், இயக்குநர் (பணியாளர்) திரு. ஆர். நரசிம்மன், இயக்குநர் (திட்டம்) திரு. ஜே.எல். மேத்தா ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழக மக்களின் நலனைக் கருதி தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தங்கள் தமிழகத்தின் மின் தேவைக்கும் விநியோகத்திற்கும் உள்ள இடைவெளியை வெகுவாக குறைக்கும்.

• • •



*பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான **15–9–2001** அன்று அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்தனர்.*

# உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பும் நிதிஉதவியும்

**மா**ண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்னையைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற கே. உமா மகேஸ்வரி, சுமதி, ஆர். தீபா, எஸ். உமாமகேஸ்வரி மற்றும் எஸ். பாலாஜி, கிருஷ்ணசாமி ஆகிய 6 நபர்களுக்கு 7.9.2001 அன்று தலைமைச் செயலகத்தில் வேலைவாய்ப்பிற்கான ஆணைகள் மற்றும் தொழில் தொடங்க நிதியுதவிக்கான காசோலைகள் வழங்கினார்கள்.

சென்னையைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற கே.உமாமகேஸ்வரி, சுமதி, ஆர். தீபா, எஸ். உமாமகேஸ்வரி மற்றும் எஸ். பாலாஜி, கிருஷ்ணசாமி ஆகிய 6 நபர்களும் தங்களது குடும்பங்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருப்பதாகவும், இந்நிலையைப் போக்க உடல்ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டங்களின் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் செய்வதற்கு கடனுதவி கோரி தலைமைச்செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் மனு அளித்திருந்தனர்.

**மனுக்கள் பரிசீலனை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவர்களது மனுக்களை பரிவுடன் பரிசீலனை செய்து, அவர்களது கல்வி தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு மற்றும் கடன் உதவி வழங்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு உத்தரவிட்டார்கள். இந்த ஆணையின்படி, கே.உமாமகேஸ்வரி, சுமதி ஆகிய இருவருக்கும் சென்னை அண்ணாநகரில் உள்ள ரெயின்போ கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தில் கணினி இயக்குபவர் பணியும், ஆர். தீபா, எஸ். உமாமகேஸ்வரி ஆகிய இருவருக்கும் சென்னை பிரிமியர் பிளாஸ்டிக் நிறுவனத்தில் பணியும், எஸ். பாலாஜி, கிருஷ்ணசாமி ஆகிய இருவருக்கும் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் பெட்டி கடை வைப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ரூ.15 ஆயிரமும், இதில் 5 ஆயிரம் அரசு மானியமாக சென்னை மாவட்ட மறுவாழ்வு மையம் மூலம் வழங்கவும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி, வேலைவாய்ப்பிற்கான ஆணைகள் மற்றும் பெட்டி கடை வைப்பதற்கு கடனுதவிக்கான காசோலை களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட உடல்ஊனமுற்ற 6 நபர்களுக்கு 7.9.2001 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

இந்த உதவிகளைப் பெற்றுக் கொண்ட 6 நபர்களும் தங்களது குடும்பத்தின் வறுமையைப் போக்க உரிய நேரத்தில் உதவிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். ★

# காவிரி நதிநீர்ப் பிரச்சினை

**8-9-2001 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உரை**




இங்கு நடைபெறுகின்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்களின் பொறுப்பாளர்களே!



மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

அரசு அலுவலர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய வேண்டுகோளை ஏற்று இந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நதிநீர் பங்கீட்டு நடுவர் மன்றம் தனது 25.6.1991 தேதியிட்ட இடைக்கால ஆணையில், ஒவ்வொரு பாசன ஆண்டிலும், அதாவது ஜூன் மாதம் முதல் மே மாதம் வரை, மாதாந்திர அடிப்படையில் ஆண்டுதோறும், கர்நாடக மாநிலம் தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி அடி தண்ணீரை விட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அத்தகைய ஆணை பிறப்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்தே கர்நாடக மாநிலம் அவ்வாறு வரையறுக்கப்பட்ட தண்ணீர் அளவினை, தானாக முன்வந்து திறந்துவிடவில்லை என்பதையும் கர்நாடக மாநிலத்தின் நீர்த் தேக்கங்களில் தேக்கி வைக்க முடியாத உபரி தண்ணீரை மட்டுமே, கர்நாடக மாநிலம் தமிழகத்திற்கு திறந்து விட்டுள்ளது என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



கடந்த 1992 ஆம் ஆண்டு மே மாதம் நான் முதலமைச்சராக இருந்தபோது, தமிழக அரசு இது குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினை தொடுத்தது. உச்சநீதிமன்றத்தில் 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மத்திய அரசு அளித்த வாக்குறுதியை தொடர்ந்து, காவிரி நதி நீர் ஆணையம் என்ற அமைப்பு பாரதப் பிரதமர் தலைமையில் 11.8.1998ல் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு , கேரளா, கர்நாடகா மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் முதல்வர்களை உறுப்பினர்களாகவும், மத்திய நீர்வள அமைச்சகத்தின் செயலாளரை செயலாளராகவும் கொண்ட இந்த காவிரி நதி நீர் ஆணையம் பாரத பிரதமரின் தலைமையில்,





கடந்த 29.10.1998 மற்றும் 14.7.2000 ஆகிய இரண்டு நாட்களில் மட்டுமே கூடியது.

இந்த ஆணையத்தின் அறிவுரைகளை மாநில அரசு பின்பற்றத் தவறினால், பிரச்சனைக்குரிய நீர்த்தேக்கம் அல்லது அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்து விடும் பொறுப்பினை, இந்த ஆணையமே மேற்கொள்ள வேண்டும் என்று 1997ஆம் ஆண்டு மே மாதம் தயாரிக்கப்பட்ட வரைவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டது. அதனை ஏற்க வேண்டும் என்று அ.இ.அ.தி.மு.க. வலியுறுத்தியது. ஆனால், அதனைத் தொடர்ந்து 1998ஆம் ஆண்டு ஜுலை மாதம் திருத்தி அமைக்கப்பட்ட வரைவுத் திட்டத்தில் இந்த அம்சம் இடம் பெறவில்லை. அதனை அ.இஅ.தி.மு.க. கடுமையாக எதிர்த்தது.

இத்தகைய திருத்தியமைக்கப்பட்ட வரைவுத் திட்டத்தைப் பற்றி விவாதிப்பதற்காக, கடந்த ஆட்சியின் போது 3.8.1998 அன்று நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாக, இது குறித்து எடுத்துக் கூறியது. திருத்தி அமைக்கப்பட்ட வரைவு திட்டத்தின்படி அமைக்கப்படும் காவிரி நதி நீர்ஆணையம், தமிழகத்திற்குத் தண்ணீர் பெற்றுத் தருவதற்கு எந்தவகையிலும் உதவாது என்ற கருத்தின் அடிப்படையில், நான் காவிரி நதி நீர் ஆணையம் அமைப்பதற்கு என்னுடைய எதிர்ப்பினை பல்வேறு கட்டங்களில் தெரிவித்திருந்தேன். 8.8.1998 ஆம் நாளன்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அப்போது அதனுடன் இருந்த தோழமைக் கட்சிகளும், 1997 ஆம் ஆண்டு போடப்பட்ட வரைவுத் திட்டத்தை அடியோடு கைவிட்டுவிட்டு எந்த ஒரு அதிகாரமும் இல்லாத ஒரு புதிய காவிரி நதிநீர் ஆணையத்தை, அப்போதைய முதலமைச்சர்





திரு கருணாநிதி ஏற்றுக் கொண்டிருப்பது, கடுமையான கண்டனத்திற்குரியது என்று கூறினோம். அதனைத் தொடர்ந்து 24.8.1998, 16.9.1999, 19.5.2000 மற்றும் 16.8.2000 ஆகிய நாளிட்ட எனது அறிக்கைகளில் நான், மத்திய அரசு ஏற்கெனவே அனுப்பி வைத்திருந்த பழைய வரைவுத் திட்டத்தை அரசிதழில் வெளியிட்டு, நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி அனுமதி பெற வேண்டும் என்றும், அதிகாரம் ஏதும் இல்லாத முதலமைச்சர்கள் அடங்கிய காவிரி நதிநீர் ஆணையத்தைக் கலைத்துவிட்டு, அதிகாரிகளை மட்டுமே கொண்டு செயல்படும் ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும், காவிரி நதிநீர் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் முடிவை அமல்படுத்த இயலாத காவிரி நதிநீர் ஆணையம் தேவையில்லை என்றும், எனது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளேன்.

ஆனால்,முந்தைய அரசு எங்களது கருத்தினை ஏற்றுக் கொள்ளாமல்; தற்பொழுது நடைமுறையில் உள்ள திட்டத்தினை ஏற்றுக் கொண்டது என்பதை



இத்தருணத்தில் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திட்டத்தில் உள்ள ஆணையம் மற்றும் அதன்கீழ் இயங்கி வரும் கண்காணிப்புக் குழு ஆகியவற்றால் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த முடியவில்லை.

உதாரணமாக, 14.7.2000 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் நடத்திய காவிரி நதிநீர் ஆணைய கூட்டத்தில், கர்நாடக மாநிலம், ஜூன் 2000 வரை, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை அடுத்த 30 நாட்களுக்குள் வழங்க ஒத்துக் கொண்டது. அதன்படி கர்நாடக மாநிலம் அடுத்த 30 நாட்களுக்குள் வழங்க வேண்டிய 52.92 டி.எம்.சி. அடி தண்ணீருக்குப் பதிலாக



19.87 டி.எம்.சி. அடி தண்ணீர் மட்டுமே வழங்கியது. இந்த இரண்டு மாதங்களில் மட்டும் 33.05 டி.எம்.சி. அடி தண்ணீர் குறைவாக கர்நாடக மாநிலம் வழங்கியுள்ளது. கர்நாடக மாநிலம் முழுமையாக தண்ணீர் வழங்க, காவிரி நதிநீர் ஆணையம் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதை இந்த எடுத்துக்காட்டு சுட்டிக் காட்டுகிறது.

இந்த ஆண்டு, காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, கர்நாடக மாநிலம் தமிழகத்திற்கு நேற்று வரை அதாவது 7. 9.2001 வரை 114.98 டி.எம்.சி.அடி தண்ணீர் வழங்க வேண்டியுள்ளது. ஆனால் கர்நாடக அரசு நேற்று வரை 50.95 டிஎம்.சி.அடி தண்ணீரை மட்டுமே வழங்கியுள்ளது. எனவே, இன்னும் கர்நாடக அரசு



நேற்று வரை 64.03 டி.எம்.சி. அடி தண்ணீர் வழங்க வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மேட்டூர் அணையில், 7.9.2001 வரை, அடுத்த 8 நாட்களே தண்ணீர் திறந்து விடக்கூடிய அளவிற்கு 12.14 டி.எம்.சி.அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. அதன் பின்னர், மேலும் தண்ணீர் திறந்துவிட இயலாத குறைந்தபட்ச கொள்ளளவு, அதாவது (Dead Storage) என்ற அளவில், 5. டி.எம்.சி.அடி அளவிற்கு, மேட்டூர் அணையில் நீரின் அளவு குறைந்து விடும்.

கர்நாடக மாநிலம், நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, தண்ணீரைத் திறந்து விட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, நான் கர்நாடக மாநில முதல்வருக்கு கடந்த 27.7.2001 அன்று ஒரு கடிதமும், பின்னர் 23.8.2001 அன்று, கர்நாடக முதல்வருடன் தமிழக அமைச்சர்கள் விவாதிக்க தேதி கேட்டு ஒரு கடிதத்தையும் எழுதியிருந்தேன். அதற்கு 27.7.2001 நாளிட்ட கடிதத்திற்கு, கர்நாடக முதலமைச்சர் அவர்கள், தமிழக அமைச்சர் குழுவை



சந்திப்பது குறித்து, புது தில்லி சென்று வந்த பின்னர் தேதி வழங்குவதாகத் தெரிவித்து 24.8.2001 அன்று கடிதம் அனுப்பியிருந்தார்.

மேலும், காவிரி நதி நீர் ஆணையத்தின் கீழ் அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழு, உடனடியாக இந்த பிரச்சினை குறித்து கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கோரி, மத்திய நீர்வள துறையின் செயலருக்கு தமிழக தலைமைச் செயலாளர், கடந்த 3.8.2001 மற்றும் 14.8.2001 ஆகிய நாட்களில், கடிதம் எழுதியிருந்தார். அதனைத் தொடர்ந்து, கடந்த 6.9.2001 அன்று, புது தில்லியில், காவிரி நதி நீர் ஆணையத்தின் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. துரதிருஷ்டவசமாக, இந்தக் கூட்டத்திலும் கர்நாடக



மாநிலம் தமிழகத்திற்கு தண்ணீர் தருவது குறித்து எந்தவொரு ஒப்புதலையும் அளிக்கவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரியது. மேலும், கர்நாடக மாநிலம், தமிழகத்திற்குத் தண்ணீர் நிச்சயமாக அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு இந்தக் கூட்டத்தில் கர்நாடக மாநிலத்தை வலியுறுத்தவில்லை என்பது, இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை முறைப்படி செயல்படுத்துவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து, தங்களது மேலான கருத்துக்களை அளிக்கும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். ★

# உலகத் தகவல் தொழில்நுட்ப வரைபடத்தில் தமிழகத்திற்குச் சிறப்பான இடம்



## முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா உறுதி

சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் 'கனெக்ட் 2001' என்ற பெயரில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பு மற்றும் உயிரியல் தகவல் நுட்பம் மாநாடு மற்றும் கண்காட்சியை 13.9.2001 அன்று தமிழக முதலமைச்சர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து ஆற்றிய உரை.

சென்னையில் இந்தியத் தொழில் கூட்டமைப்பால் (சிஐஐ) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, பிரம்மாண்டமான தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சியான 'கனெக்ட் 2001'ன் துவக்க விழாவில் என்னை இணைத்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசின் சார்பில், உங்கள் அனைவருக்கும் அன்பான வரவேற்பை அளிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களை நான் சென்னையிலுள்ள தகவல் தொழில்நுட்பத்தின் செழிப்புக்கு மட்டுமின்றி தமிழ்நாட்டில் எங்களது உபசரிப்புக்கும், அன்பிற்கும் உங்களை நான் அழைக்கிறேன்.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நடத்தப்படும் 'கனெக்ட் 2001' தான் முதல் சர்வதேச தகவல் தொழில்நுட்பம், தொடர்பு தொழில்நுட்பங்கள் மற்றும் உயிரியல்– தகவல் நுட்பம் ஆகியவற்றின் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி என்று அறிகிறேன்.

வளமான தகவல் தொழில்நுட்ப கலாச்சாரம் கொண்ட ஒரு முற்போக்கான மாநிலத்தின் முதலமைச்சர் என்ற முறையில், இந்தப் புதிய பாதை அமைக்கும் முன் முயற்சியில் கூட்டு அமைப்பாளராக சி.ஐ.ஐ.யுடன் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நமது வளர்ச்சி முயற்சிகளைத் துரிதப்படுத்தும் வகையில், பொது ஆதாரங்களுக்கும், தனியார் முனைப்புக்கும் இடையில் பயனளிக்கும் கூட்டை வளர்த்தெடுக்க தமிழக அரசு தொடரும் முயற்சிக்கு இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியை மேலும் ஒரு உதாரணமாக நான் பார்க்கிறேன்.

என்னுடைய அரசு அனைத்து துறைகளிலும் நல்ல நிர்வாகத்தை வழங்குவதற்கு மிகவும் கட்டுப்பட்டுள்ளது. பதவியேற்ற பின்னர் நான் ஏராளமான முற்போக்கான வளர்ச்சி முனைப்புடைய கொள்கை முன்முயற்சிகளை அறிவித்துள்ளேன். தமிழ்நாடு அருமையான பௌதீக மற்றும் சமூக கட்டமைப்பையும், உயர்ந்த மனிதவள




ஆதாரங்களையும், இந்த இடு பொருட்கள் மிகவும் மலிவான செலவில் கிடைப்பதையும் வழங்குகிறது. இவைதவிர, தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் செயல்துடிப்பு மிக்க அரசாகவும் இருக்கிறது.

'நல்ல நிர்வாகம்' என்பதன் அளவை நிர்ணயிப்பது மிகவும் சிரமம் என்பதை நான் அறிவேன். இருப்பினும் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டின் நல்ல நிர்வாகத்திற்கு சாட்சியாக நான் சில குறயீடுகளை விவரிக்க முயலுகிறேன்'.

* மக்கள் தொகைக்கான தேசிய ஆணையம் சமீபத்தில்12 முக்கியமான சமூகப் பொருளாதாரக் குறியீடுகளை உள்ளடக்கிய ஒரு கலவைக் குறியீடு அடிப்படையில் இந்தியாவிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் வரிசைப்படுத்தி உள்ளது. நாட்டிலுள்ள முதல் 100 மாவட்டங்களில் தன்னுடைய 93.3 சதவீத மாவட்டங்களுடன் தமிழ்நாடு, நாட்டிலுள்ள இதர மாநிலங்களைவிட நல்லநிலையில் உள்ளது என்ற தகவலை உங்களுடன் பரிமாறிக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

* தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களில் முதலீடுகள் செய்துள்ள முதலீட்டாளர்களைத் தவிர பொதுவாக தமிழ்நாட்டு மக்களையும் மகிழ்ச்சியடையச் செய்யக்கூடிய சிலசெய்திகளை நினைவில் நீங்காது நிற்கக்கூடிய மேடையில் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனது தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர் தமிழ்நாட்டில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளதாக புதுடெல்லியிலுள்ள தொழில் உதவி செயலகம் நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது. இந்த ஆண்டு (2001) ஜூன் மாதம் இந்தியா முழுவதும் 32.65 கோடி அமெரிக்க டாலர்கள் அளவுக்கு நேரடி வெளிநாட்டு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது. தமிழ்நாடு மட்டும் 4.38 கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்று முதலிடத்தை அடைந்துள்ளது. மகாராஷ்டிரா 3.20 கோடி அமெரிக்க டாலர் முதலீட்டுடன் இரண்டாவது இடத்தையும், டெல்லி 2.90 கோடி அமெரிக்க டாலர் முதலீட்டுடன் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. கடந்த ஆட்சியின் போது இருந்த மந்தமான போக்கிலிருந்து நான் அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் துரிதமான வேகத்திற்கு மாறியுள்ள தமிழ்நாட்டில் தொழில் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள இந்த மகிழ்ச்சிக்குரிய மாறுதல் எதிர்காலத்திலும் தொடருமென்று நான் உறுதி அளிக்கிறேன். தமிழ்நாட்டுக்குக் கிடைத்துள்ள இந்தப் பெருமை தமிழ்நாட்டில்,குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தில் உள்ள அனைத்து தொழில் முனைவோரையும் எங்களது தொழிலில் மேலும் உயர்வடைய உத்வேகம் அளிக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

* இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் என்ற அமைப்பு திரட்டியுள்ள கட்டமைப்பு வளர்ச்சி தொடர்க் குறியீடு பிரதான மாநிலங்களில் பஞ்சாப் (171.92),கேரளா (162.42) ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக 145.62 புள்ளிகளுடன் தமிழ்நாட்டை வைத்துள்ளது. இதன் அகில இந்தியக் குறியீடு 100 புள்ளியாகும். அதுபோலவே 472. 48 புள்ளியுடன் சென்னை நகர மாவட்டம் தென்னிந்திய மாநகரங்களில் முதல் இடத்திலும், டெல்லி (730.62) சண்டிகர் (625.73) ஆகியவற்றிற்கு அடுத்த இடத்திலும் வைக்கப்பட்டுள்ளது.

* சமீபத்திய 'இந்தியா–மனித வளர்ச்சி அறிக்கையின்படி தமிழ்நாட்டின் 85.5 சதவீத கிராமங்களுக்கு 2 கிலோ மீட்டர் தூரத்தில் தொலைபேசி இருப்பதால், நாட்டில் இம்மாநிலத்தில் மிகச் சிறந்த கிராமப்புற இணைப்பு உள்ளது.

* இந்தியாவில் முன்னாள் பிரதான தகவல் தொழில்நுட்ப மாநிலமாக தமிழ்நாடு உறுதியாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்ற உண்மை தற்போது மறுக்க முடியாததாகிவிட்டது. இந்த உண்மையை ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலுள்ள சர்வதேச வளர்ச்சி மையத்தின் வெளியீடு விரிவாக எடுத்துக் கூறியுள்ளது. தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழிலின் வளர்ச்சி அபரிமிதமானது. எங்களிடம் பதிவு செய்யப்பட்ட 750 மென்பொருள் ஏற்றுமதியாளர்கள் உள்ளனர். இவர்களின் ஏற்றுமதிகள் 2/3 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேலாகும்.




கடந்த சில காலமாக தமிழ்நாட்டில் நடந்துவரும் துரிதமான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை நீட்டித்து தக்க வைக்க தமிழக அரசு எடுத்துள்ள பிரதான முன்முயற்சிகள் சிலவற்றை நான் விவரிக்கிறேன்.

இந்தியாவிலுள்ள இதர மாநிலங்களில் தகவல் தொழில் நுட்பத்துக்கும், உயிரியல் தொழில்நுட்பத்துக்கும் தனியான கொள்கைகளை வகுப்பதால், தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருந்து வந்துள்ளது. தகவல் தொழில்நுட்பம் அதற்கான மனித ஆதாரங்கள், நிர்வாகத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆகியவை தொடர்பாக அனைத்து கொள்கை பிரச்சினைகளிலும் தொடர்ச்சியான அடிப்படையில் முடிவுகள் எடுக்க சமீபத்தில் முதலமைச்சர் தலைமையில் 'தமிழ்நாடு தொழில்நுட்ப கவுன்சில் ' ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தற்போதுள்ள டைடல் பூங்கா அருகில் தற்போது பணி நடந்துவரும், டைடல்–II சென்னையில் தரமான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புக்கான பெருகிவரும் தேவையை சந்திக்க நவீன வசதிகளை வழங்கும். ரூ.62.50 கோடி செலவில் சென்னை தரமணியில் உலகத் தரமான உயிரியல் தொழில்நுட்ப பூங்காவை அமைக்க கடந்த 25.8.2001 அன்று என்னுடைய முன்னிலையில் அமெரிக்காவிலுள்ள கார்னெல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, ஒரு ஒப்பந்தம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்துக்கும், கார்னெல் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது. இந்த முன்னோடி முயற்சி, நாட்டிலேயே இத்தகைய முதல்திட்டம், வேகமாக வளர்ந்து வரும் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டின் முனைப்புக்கு ஒரு முக்கிய அடையாளமாகும். பழைய மகாபலிபுரம் சாலையில், 1,000 ஏக்கருக்கு மேலான மேம்படுத்தப்பட்ட நிலத்தில் தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு கழகத்தில் உருவாக்கப்பட்டுவரும் சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்கா, தகவல் தொழில்நுட்பத் தொழிலால் நன்கு வரவேற்கப்பட்டு, பல தகவல் தொழில்நுட்ப தொழிற்சாலைகள் தங்களது சொந்த ஆலைகளை அமைக்க நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. பழைய மகாபலிபுரம் சாலை உயர் தொழில்நுட்ப தகவல் தொழில்நுட்பப் பகுதியாக துரிதமாக உருவாகி வருவதால், அதில் தேசிய நெடுஞ்சாலை எண்.45 மற்றும் கிழக்கு கடற்கரைசாலை ஆகிய இரண்டிற்கும் நல்ல இணைப்பு இருக்கும் வகையில் நான்கு பாதைகள் போடப்படுகின்றன. இந்தப் பகுதியில் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் தலையிட்டு வருகிறது.




தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத்தின் பரவலான வளர்ச்சியைத் தூண்டிவிட இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா இந்த மாதம் திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிய விண்கல பூமி நிலையங்களை அமைக்கிறது. இது தற்போது சென்னையிலும், கோவையிலும் உள்ள வசதிகளுடன் உருவாவதாகும். எந்த நவீன மாநிலத்தின் அத்தியாவசியமான கட்டமைப்பின் பகுதியாக உயர் 'பேண்டுவித்' கண்ணாடி இழை அடிப்படைத் தொடர்பு முதுகெலும்பாக அமைந்துள்ளது. தெருக்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஓரத்தில் இவற்றை பதித்துக்கொள்ள




பொது உரிமை வழங்கும் எங்களது கொள்கையால் 1,400 கிலோ மீட்டர் தூரத்துக்கும்மேல் தனியார் துறையால் கேபிள் பதிக்கப்பட்டுள்ளது. இதே கொள்கை வழிகாட்டுதலின்படி, சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு கடலுக்கடியில் கண்ணாடி இழை தொடர்பு அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது இந்த ஆண்டு இறுதியில் செயல்படத் தொடங்கி, சென்னைக்கு வரையரையற்ற சர்வதேச தொடர்பை வழங்கும்.

கிராமப்புற பகுதிகளுக்கு குறைந்த செலவிலான கம்பித் தொடர்பில்லா தொழில்நுட்பம் மூலமாக தொலைபேசி மற்றும் இண்டர்நெட் தொடர்பை உருவாக்கித் தர சென்னை ஐ.ஐ.டி., எம்.ஐ.டி. மீடியா லேப் மற்றும் 'ஹார்வர்ட் பல்கலைக் கழகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டு வரும் திட்டத்திற்கு தமிழக அரசு ஆதரவை அளித்துள்ளது. மதுரை மாவட்டத்தில் ஒரு முன்னோடி திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. குடிமக்களுக்கு நல்ல நிர்வாகத்தை வழங்கும் தொடர் முயற்சியாக, தமிழக அரசு பதிவுத்துறை, போக்குவரத்து சர்வே மற்றும் நில ஆவணம், வணிகவரி ஆகிய துறைகளை பெருமளவு கம்ப்யூட்டர் மயமாக்கலுக்கு தெரிவு செய்துள்ளது. இந்தத் துறைகளில் கம்ப்யூட்டர் மயமாக்கல் மிகக் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்றும், ஏற்கெனவே ஏராளமாக பொதுமக்களுக்கு பயனளித்துள்ளது என்றும் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆகவே, ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் நாட்டிலேயே உயர்ந்த தகவல் தொழில்நுட்ப மாநிலமாகத் தமிழ்நாட்டை ஆக்குவதுடன், உலகத் தகவல் தொழில்நுட்ப வரைபடத்தில், அசைக்க முடியாத சக்தியாகவும் மாற்றுவதில் வெற்றிபெறுவோம் என்பதில் எனக்கு ஐயமில்லை. இந்த மிகப்பெரிய கடமையை விரைவில் உண்மையாக மாற்றும் பணியில் தமிழ்நாடு அரசு உங்களுடன் முழுமையாக இருக்கிறது என்று நான் உங்கள் அனைவருக்கும் உறுதி அளிக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை சி.ஐ.ஐ. சென்னையில் ஆண்டுதோறும் நடத்தும் என்று நம்புகிறேன். இந்தப் பயனுள்ள திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு மகிழ்ச்சியுடன் உதவி அளிக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

இன்று 'கனெக்ட் 2001' சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியை துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் உலகம் முழுவதும் இருந்து வந்துள்ள பிரதிநிதிகளிடம் 'கனெக்ட் 2001' பெரும் ஆர்வத்தைத் தூண்டிவிட்டுள்ளது என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தகவல் கண்காட்சி மற்றும் மாநாடு தகவல் தொழில்நுட்பம் குறித்த நல்ல விவாதங்களுக்கு அர்த்தமுள்ள கலந்துரையாடல்களுக்கும் சிறந்த மேடையாக உருவாக்கி மாநிலத்துக்கும், நாடு முழுவதற்கும் நல்ல பயன்களைத் தரும் என்று நம்புகிறேன்.

இங்கே கூடியுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது முயற்சிகள் அனைத்திலும் வெற்றிபெற விழைகிறேன். ★

# சமூக நலத்துறை

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

திருமதி **பா. வளர்மதி**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்டுவிட்ட தொய்வினைப் போக்கி சீரமைத்திட சுமார் 9,180 கட்டடங்கள் ரூபாய் 25 கோடியே 19 இலட்சத்து 54 ஆயிரம் செலவில் பழுது நீக்கம் செய்யப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், பள்ளி சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (பொது) திட்டம் மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டம் ஆகியவற்றில் பணியாற்றக் கூடிய 2 இலட்சத்து 26 ஆயிரம் பணியாளர்களில் 4,389 பேர் முதுகலைப் பட்டதாரிகள், ஆசிரியர் பயிற்சி பட்டப் படிப்பு பயின்றவர்கள், வழக்கறிஞர்கள் என உள்ளனர். இவர்களைத் தகுதி வாய்ந்த பணியிடங்களில் பணியமர்த்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் திட்டங்களின் கீழ் செயல்படும் மையங்களில் குழந்தைகட்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இணை உணவின்கலவை நிபுணர் குழுவின் ஆலோசனைப்படி மாற்றப்பட்டு சக்திக்கு (Energy) அதிக முக்கியத்துவம் தரும் புதிய இணை உணவு அறிமுகப்படுத்தப்படும். இதில் கடலைப் புண்ணாக்கு மாவும் இருக்காது, சோயா மாவும் இருக்காது.

சத்துணவுடன் சேர்த்து இதுவரை வாரம் ஒரு முறை வழங்கப்பட்டு வந்த முட்டைக்குப் பதிலாக, வாரத்தில் ஒருநாள் 20 கிராம் உருளைக் கிழங்கு. மற்றொரு நாள் 20 கிராம் கொண்டைக்கடலை, மூன்றாவது ஒரு நாள் 20 கிராம் பச்சைப் பயறு ஆகியவை சமைத்து சத்துணவுடன் வழங்கப்படும். இதனால் 158.2 கிலோ கலோரி சக்தியும் (energy) 8.54 கிராம் புரதச் சத்தும் (Protein) ஒவ்வொரு வாரமும் குழந்தைகளுக்குக் கிடைக்கும். இந்த மாற்றத்தால் அரசிற்குக் கூடுதல் செலவினமாக ரூ.11 கோடி அளவில் ஏற்படும்.

ஆண் குழந்தைகளை விரும்பும் போக்கைக் கட்டுப்படுத்தவும், பெண் சிசுக் கொலையை ஒழிப்பதற்கும், குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கவும் 1992ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்திய ''புரட்சித்தலைவி ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்'. அதன்படி ஒரு பெண்குழந்தைக்குப் பின் பெற்றோரில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அக்குழந்தை பெயரில் அரசு ரூ.20,650/– செலுத்தும். இதிலிருந்து வரும் வட்டியில் மாதம் ரூ.150/– அக் குழந்தையின் பள்ளிக் கல்விக்குத் தரப்படும். 20 ஆண்டுகள் முடிந்த பின் ரூ.80,000/– தரப்படும். இது மேற்படிப்பிற்கோ, திருமணச் செலவிற்கோ பயன்படும். இரு பெண் குழந்தைகள் இருந்தால், அவை ஒவ்வொன்றின் பெயரிலும் தலா ரூ.14,450/– அரசால் செலுத்தப்படும். ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளிக் கல்வி தொடர மாதம் ரூ.150–ம் 20 ஆண்டுகள் முடிந்த பின் தலா ரூ.40,000/–மும் மேற்படிப்பிற்கோ, திருமண செலவிற்கோ அப்பெண்களுக்குத் தரப்படும். இதற்கென ரூ.22 கோடியே 70 இலட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.



மாநிலத்தின் சில பகுதிகளில் நடைபெற்று வரும் பெண் சிசுவதையைத் தடுக்கும் நோக்கத்துடன் 1992ல் மாண்புமிகு அம்மா அவர்கள் "தொட்டில் குழந்தை திட்டம்'' அறிமுகப் படுத்தினார்கள். பின்னர் இத்திட்டத்தில் ஏற்பட்டு விட்ட தொய்வினைப் போக்கி தற்போது புத்துயிரூட்டப்பட்ட தொட்டில் குழந்தை திட்டம்



அறிமுகப்படுத்தப்படும். சேலம், தவிர, மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வரவேற்பு மையங்களும், குழந்தை ஏற்பு மையங்களும் உருவாக்கப்படும். இதற்கென ரூபாய் 12 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிர்க்கு தொழில்முனைவோர் பயிற்சியும், சிறு தொழில் பயிற்சியும் வழங்கி, வங்கிகள் மூலமாக சுயமாகத் தொழில் மேற்கொள்ள கடன் வசதி செய்து தரும் திட்டம் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. நடப்பாண்டில் 1 இலட்சம் மகளிர்க்கு பயிற்சிகள் பிற துறைகளின் உதவியுடன் அளிக்கப்படும். இதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 20,000 பேருக்கு பயிற்சி அளிக்கும். இதற்கென நிதியாக ரூபாய் 1 கோடியே 66 இலட்சத்து 95 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டாகிய நடப்பு ஆண்டு 2001ல் மகளிர் பிரச்சினைகள் குறித்து தொடர் மாதாந்திர நிகழ்ச்சிகள் நடத்துவதோடு, ''யுனிசெப்'' உதவியுடன் ''மாநில மகளிர் கொள்கை'' பெண்களுக்கு சம உரிமை அளிக்கும் வகையில் வரையப்பட்டு வெளியிடப்படும்.

பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கும் திட்டத்தின் முதல் படியாக அனைத்து சட்டப்படிக்கான மற்றும் சட்டம் சாராத குழுக்களிலும் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

விறகு, அடுப்பு சமையலின் இன்னலிலிருந்து மகளிரை விடுவிக்க நடப்பாண்டில் 5,000 மகளிர்க்கு ரூ.50 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புப் பெற்றிட ஏதுவாக முன்பணத் தொகை செலுத்திட இலவசமாக நிதி உதவி செய்யப்படும். இதில் 5 ஆண்டுகளில் 25ஆயிரம் மகளிர் ரூ.2 கோடியே 50 இலட்சம் அளவில் பயன் பெறுவர்.

தற்போது முதியோர் இல்லவாசிகளுக்கு மானியமாக அளிக்கப்படும் ஒரு நபருக்கு ரூ.250/– என்பது ரூ.500/– ஆக உயர்த்தித் தரப்படும். இதன் மூலம் 10 இல்லங்களில் உள்ள சுமார் 400 பேர் பயனடைவர். இதற்கென ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டப் பயனாளிகளுக்கு சீருடை தைத்து வழங்கும் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 8 துணி வெட்டும் மையங்களுக்கு ரூ.6 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் புதிதாக துணி வெட்டும் இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

விருதுநகரில் உள்ள, வளரிளம் பெண்கள் தங்கியுள்ள அரசு காப்பகத்திற்கு, இப்பெண்கள் பாதுகாப்பினை மேம்படுத்திட, ரூ.14 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டித்தரப்படும்.

9 மாவட்ட சமூக நல அலுவலகங்களின் செயல் திறனை மேம்படுத்திட ரூ.9 இலட்சம் செலவில் கணிப்பொறிகள் வாங்கித் தரப்படும்.

11 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூ.1 இலட்சத்து 55 ஆயிரம் செலவில் புதிதாக சமையல் செய்யப் பயன்படும் பாத்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

அரசு சேவை இல்லங்களில் உள்ள விதவைகள் கணவனால் கைவிடப்பட்டோர்,ஆதரவற்ற மகளிர் பயன் பெறும் வகையில் தட்டச்சுப் பயிற்சி அளிக்க புதிதாக 48 தட்டச்சுப் பொறிகள் ரூ.3 இலட்சத்து 81 ஆயிரம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

அனைத்து திருமண நிதி உதவித் திட்டங்களுக்கும் நிதி உதவி ரூ.10,000/- என உயர்த்தி வழங்கப்படும். எனினும் கலப்புத் திருமண நிதி உதவி தொடர்ந்து ரூ.20,000/- ஆக இருக்கும். இவற்றில் பயன் பெறுவதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு அனைத்துத் திட்டங்களுக்கும் 20 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்படும்.

ஏலாமையுற்றோர் தடையின்றி நடமாடிட ஏதுவாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களிலும், தலைமைச் செயலகத்திலும் ரூ.65 இலட்சம் செலவில் சாய்வு தளங்கள் அமைத்துத் தரப்படும். அரசு சார்ந்த பொதுக் கட்டடங்கள் மற்றும் கழிப்பிடங்களில் தடையற்ற சூழ்நிலையை உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரையில் உள்ள கடும் ஊனமுற்றோருக்கான அரசு பள்ளியில்,6,7 ம ற்றும் 8 ஆம் வகுப்புகள் ரூ.6 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் தொடங்கப்படும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 6 மாவட்டங்களில் ரூ.15 இலட்சம் செலவில் தொழிற்பயிற்சி மற்றும் விற்பனை மையங்களைத் தொடங்கும். இம்மையங்களில் இணைய தளம், தொலைபேசி வசதிகள் செய்து தரப்படும்.

சென்னையில் உள்ள பெண்களுக்கான அரசு இளைஞர் மற்றும் சிறப்பு இல்லம் ரூ.10 இலட்சம் செலவில் பழுது நீக்கம் செய்யப்பட்டு பராமரிக்கப்படும். இதற்கு மத்திய அரசு 50 விழுக்காடு நிதியுதவி வழங்குகிறது.

செங்கல்பட்டு அரசு இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் ரூ.21 இலட்சத்தில் கழிப்பிடம் மற்றும் நீர் வசதியுடன் கூடிய துயிற்கூடங்கள் கட்டித் தரப்படும். இதில் 50 விழுக்காடு செலவினை மைய அரசு ஏற்கும்.



மன வளர்ச்சிகுன்றியோரும் அவரது பாதுகாவலரும் இலவச பயணச் சலுகை மேற்கொள்ள தற்போதுள்ள ரூ.12,000/- என்ற வருமான வரம்பு நீக்கப்படும். இதற்கென கூடுதலாக ரூ.11 இலட்சத்து 82 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை பூவிருந்தவல்லியில் உள்ள 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி ரூ.33 இலட்சத்து 76 ஆயிரம் செலவில் பழுது நீக்கம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும்.

தஞ்சாவூரில் உள்ள அரசு மாணவர் இல்லப் பள்ளியில் ரூ.12 இலட்சத்து 30 ஆயிரம் செலவில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகள் தொடங்கப்படும்.

சென்னையில் உள்ள 8 முதல் 18 வயதுக்கு உட்பட்ட புறக்கணிக்கப்பட்ட சிறுமிகளின் பாதுகாப்பு இல்லத்தில் பற்றாக்குறை உள்ளது. எனவே, தொண்டு நிறுவனத்தின் துணையோடு,சுமார் 100 சிறுமியர் தங்கக் கூடிய அளவில் புதியதாக ஒரு இல்லம் தொடங்கிட ரூ.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



மாநில சமூக நல ஆணையரகத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்திட

ரூ.60 ஆயிரம் செலவில் 3 கணிணிகள்

ரூ.54 ஆயிரம் செலவில் குளிர்சாதன வசதி,

ரூ.78 ஆயிரம் செலவில் புதிய நகலி இயந்திரம்,

ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் 10 இரும்பு அலமாரிகள்

ஆகியவை வாங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

78 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சுமார் 40,000 மகளிர் பயன் பெறும் வகையில்



தற்போது சீருடை தைப்பதற்காக வழங்கப்பட்டு வரும் தையற் கூலியை 50 விழுக்காடு உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இச்சங்கங்களுக்குக் கூடுதலாக ரூ.2 கோடியே 14 இலட்சத்து 90 ஆயிரத்து 650 வருமானம் கிடைக்கும்.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லவாசிகள் மரணமடைய நேரிடும்பொழுது ஈமச்சடங்கு செய்வதற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.200/– உயர்த்தி ரூ.500/– ஆக வழங்கப்படும்.

குழந்தைகளின் நலன் மற்றும் பராமரிப்பினை உறுதி செய்ய 1993ல் ''டாக்டர் ஜெ ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தினை'' அரசு தொடங்கியது. அத்திட்டத்தில் தற்போது,

1. வளரிளம் பெண்களுக்கான பணிகள்
2. ஆரம்ப நிலையிலிருந்தே குழந்தைகளின் கவனிப்பு, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், பெற்றோர்களின் பொறுப்பு
3. சுய உதவிக்குழுக்கள் – சமுதாயப் பங்கேற்பு

ஆகியவற்றையும் சேர்த்து குழந்தைகள் நலனுக்கான 18 அம்சத் திட்டமாக உருவாக்கப்பட்டு வருகிறது. இதன்கீழ் 2010ஆம் ஆண்டு வரை இலக்குகளும் அதற்கான செயல் திட்டங்களும் நிர்ணயிக்கப்படும். •

# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம்

சட்டப்பேரவையில் 29.8.2001 அன்று
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு.எஸ்.செம்மலை அவர்கள் ஆற்றிய உரை

**புதிய திட்டங்கள் - சிறப்பு அம்சங்கள்**

1. படிப்படியாக அனைத்து மருத்துவமனைகளுக்கும் மின்னாக்கிகள் வழங்கப்படும். இந்த வருடம் 6 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், 6 வட்டார மருத்துவமனைகளிலும் ரூ.132 இலட்சம் செலவில் இந்த வசதி செய்து தரப்படும்.

2. ரூ.200 இலட்சம் செலவில் மதுரையிலும், இராமநாதபுரத்திலும் மனநல மருத்துவத் திட்டம் செயல்படுத்தப்படும்.

3. இந்திய மருத்துவக் கழக விதிகளுக்கேற்ப, அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்கங்கள், தீவிர மருத்துவ சிகிச்சை பிரிவு, தலைக்காயப் பிரிவு, தீவிர சுவாச சிகிச்சைப் பிரிவு மற்றும் தீக்காய உள்நோயாளிகள் பிரிவிற்கு ரூ.30 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்து தரப்படும்.

4. மிகத் தரம் வாய்ந்த மருத்துவ வசதிகளை மக்களுக்கு வழங்க அரசு மருத்துவமனைகளுக்கு அதிநவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள 20 மருத்துவமனைகளில் 967 கருவிகள் நிறுவப்படும். இதற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் ரூ.86 இலட்சம் நிதியுதவிக்கான ஒப்பந்தம் பின்லாந்து அரசு நிறுவனம் மற்றும் தமிழக அரசிற்கு இடையே கையெழுத்தாகியுள்ளது.

5. ரூ.114.8 இலட்சம் செலவில் மதுரையில் புதிய செவிலியர் கல்லூரி ஏற்படுத்தப்படும். இது மாநில அளவில் இரண்டாவது அரசு செவிலியர் கல்லூரி ஆகும்.

6. சென்னை பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூட்டநெரிசலைக் குறைக்க ரூ.80 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

7. செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, குளித்துறை மற்றும் ஒசூர் மருத்துவமனைகளின் பிணவறைகளில் குளிர்பதன வசதி செய்து தரப்படும். இப்பணிக்கென ரூ.69.89 இலட்சம் வழங்கப்படும்.

8. சென்னை அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மகளிர் நோய் சிகிச்சையில் ஒரு முன்னோடி நிறுவனமாகும். இம்மருத்துவமனைக்கு ரூ.47 இலட்சத்தில் நுண்கதிர் ஒளிகருவி யூரோ டைனமிக் யூனிட் மற்றும் நவீன கருவிகள் வழங்கப்படும்.

9. தற்பொழுது சில மாவட்ட மருத்துவமனைகளில் மட்டுமே மனநல மருத்துவர்கள் உள்ளனர். மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மனநல சிகிச்சை அளிக்க வகை செய்ய 14 மனநல மருத்துவப் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.





10. தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை எய்ட்ஸ் நோயாளிகள் சிகிச்சை பெறும் ஒரு முக்கிய மையமாகும். இம்மருத்துவமனையை மேம்படுத்த அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நோய் தடுப்பு மையத்திடம் ரூ.500 இலட்சம் நிதியுதவி பெறும் உடன்படிக்கை முடிவடையும் நிலையிலுள்ளது.

11. மயக்க மருந்தியல் பிரிவில் மருத்துவர்கள் குறைவாக உள்ளதால் மயக்க மருந்தியல் பட்ட மேற்படிப்பில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 19லிருந்து 28 ஆக உயர்த்தப்படும்.

12. அனைத்து மருத்துவக் கல்லூரி நூலகங்களை மேம்படுத்த இணைய வசதி (Internet) செய்து தரப்படும்.

13. புற்றுநோய் சிகிச்சைக்காக 3 கோபால்ட் தெரபி கருவிகளும், 3 மெமோகிராஃபி கருவிகளும் நிறுவப்படும். இவ்வாறு நிறுவப்படுவதன் மூலம் புற்றுநோய் கண்டறிந்து சிகிச்சையளிக்க பெரிதும் உதவும். இத்திட்டத்திற்காக ரூ.540 இலட்சம் செலவிடப்படும்.

14. மூத்த குடிமக்களுக்கு மருத்துவ வசதி வழங்குவதற்கு அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும், 5 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் ரூ.5 இலட்சம் செலவில் வயது முதிர்ந்தோர் சிகிச்சை பிரிவு துவக்கப்படும்.

15. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக கண் வங்கி ரூ.5 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

16. சென்னை மருத்துவக் கல்லூரி ஆய்வுக் கூடம், எய்ட்ஸ் பரிசோதனைக்கான தேசிய ஆய்வுக் கூடங்களுள் ஒன்றாக கருதப்படுகிறது. இந்த ஆய்வகம் ரூ.2.7 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

17. மலைப்பகுதிகளிலும் எளிதில் அணுகக் கடினமாக உள்ள இடங்களிலும் வாழும் மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடமாடும் மருத்துவ முகாம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 25 சுகாதார நல ஊர்திகள் வழங்கப்படும். இதற்காக ரூ.113 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. பேறுகால மரணம் மற்றும் சிசு மரணத்தை தவிர்க்க மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ரூ.139 இலட்சம் செலவில் அவசர கால ஊர்திகள் வழங்கப்படும்.

19. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்தப்படும். இந்த ஆண்டு ரூ. 1289 இலட்சம் செலவில் 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்தப்படும்.

20. காலியாக உள்ள 555 மருத்துவர் பணியிடங்கள் மற்றும் 1508 தொழில்நுட்ப மற்றும் மருத்துவம் சாரா பணியாளர் பணியிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நிரப்பப்படும். மேலும் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் தெரிவு செய்த 350 பெண் மருத்துவர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்படுவார்கள்.

21 ரூ.69.88 இலட்சத்தில் காடையாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்படும்.

22. சுகாதார நலத்திட்டங்கள் மேலும் சிறப்பாக செயல்படுத்தப்பட ரூ.396 இலட்சம் செலவில்

கண்காணிப்பு தொடர்பு அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் தேனியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், சேலம் மற்றும் நாமக்கல்லில் உள்ள வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துணை சுகாதார இயக்குநர் அலுவலகங்களுக்கு கணினி வசதி செய்து தரப்படும். மேலும் படிவங்களும் பதிவேடுகளும் எளிய நடைமுறையில் அச்சிட நடவடிக்கை எடுக்கப்படும்.

23. ரூ.50 இலட்சம் செலவில் குடும்பநல மையங்கள் புதுப்பிக்கப்படும்.

24. ரூ.40 இலட்சம் செலவில் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவம் மருத்துவமனைகளில். கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

25. ரூ.30 இலட்சம் செலவில் சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவம் மருத்துவமனைகளில் இயற்கை சிகிச்சை மற்றும் யோகா சிகிச்சை பிரிவிற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

28. ரூ.2.5 இலட்சம் செலவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுகாதாரம் தொடர்புடைய நலப்பணிகளில் பயிற்சி அளிக்கப்படும்.

29. தொலைதூர இடங்களில் வசிக்கும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்கென சிறப்பு பேறுசார் மற்றும் குழந்தை நல முகாம்கள் நடத்தப்படும்.

30. பெண் சிசுவதை மற்றும் பெண் குழந்தை கருக்கொலையை தடுக்க 4 மாவட்டங்களில் நேரடி தனித்தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

31. இளம் பெண்களிடையே இரத்த சோகை பரவியுள்ளது கவலை தருவதாகும். எனவே 10 முதல் 17 வயது வரையுள்ள இளம் பெண்களுக்கு இரும்புச்சத்து மாத்திரை வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு ரூ.190 இலட்சம் செலவிடப்படும்.

32. ரூ.70 இலட்சம் செலவில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், தன்னார்வ ஆலோசனை



26. மதிப்புமிக்க மூலிகைத் தாவரங்களை இனம் கண்டறியவும், வர்த்தக இலாபத்திற்காக மூலிகைத் தாவரங்கள் அழிவதைத் தடுக்கவும் மற்றும் அதனை பாதுகாக்கவும் மருத்துவத் தாவர வாரியம் ஒன்று ஏற்படுத்தப்படும். மூலிகைத் தாவரங்களுக்கான காப்புரிமை வழங்குதல் போன்ற விவகாரங்களையும் இவ்வாரியம் கவனத்தில் கொள்ளும்.

27. ரூ.102 இலட்சம் செலவில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பேறுசார் நோய் மற்றும் பால்வினை தொற்று நோய் பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

மற்றும் பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப்படும். இம்மையங்களில் ரூ.10 கட்டணமாக செலுத்தி எச்.ஐ.வி. நோய் கண்டறியும் பரிசோதனை மேற்கொள்ளலாம். மேலும் இலவச ஆலோசனையும் பெறலாம்.

33. ஆரம்ப சுகாதார நிலைய அளவில் சுகாதார நலத்திட்டங்களின் தரத்தை மேம்படுத்த பங்கேற்பு சமுதாய நலக்குழு அமைக்கப்படும்.

34. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு 6 மருந்து கிடங்குகள் ரூ.600 இலட்சம் செலவில் கட்டப்படும்.



**35.** நகர்ப்புறத்தில் வாழும் ஏழை எளியோர் முழுமையான மருத்துவ வசதி பெற முடியாதவர்களாக உள்ளனர். எனவே நகர்ப்புற ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் நகர்ப்புற சுகாதாரத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

**36.** பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்யவும், எச்சில் உமிழ்வதை தடை செய்யவும் சட்டம் இயற்றப்படும்.

மருத்துவ சேவைகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிவிப்புப் பலகைகள் வைக்கப்படும். இது குறித்து அரசு சாரா நிறுவனங்களுக்கும் பிற தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப்படும். இதனால் பொதுமக்கள் தங்களது உரிமையை உணர்ந்து மருத்துவ சேவைகளைக் கேட்டுப் பெறலாம்.



**37.** புகையிலை, பான் மசாலா மற்றும் குட்கா பொருட்கள் மெல்லுவதைத் தடைசெய்ய சட்டம் இயற்றப்படும்.

**38.** மக்கள் சாசனம் – மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளைப் பெறுவதற்கான தங்கள் உரிமை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படும். ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவமனைகளிலும்

**39.** மக்கட் பணி ஆர்வலர்கள் சுகாதார வசதி மேம்பாட்டிற்கு அதிக நிதியுதவி வழங்குவதை உற்சாகப்படுத்த ரூ.50 இலட்சத்திற்கு மேலாக நிதியுதவி செய்யும் தனியாருக்கு அவரது உதவியால் ஏற்படுத்தப்படும் மருத்துவமனையின் பிரிவிற்கு பெயரிடும் தகுதி வழங்கும் ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். •

# மொழிஞாயிறு

இருபதாம் நூற்றாண்டுத் தமிழுக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்த மொழிநூல் மூதறிஞர்; தமிழ்மொழியின் தொன்மையையும் தமிழினத்தின் உண்மையையும் உலகுக்கு உணர்த்திய வரலாற்று ஆய்வியல் அறிஞர்; இலக்கியமாவாரி; இலக்கணச் செம்மல்; பாவலர்; பன்மொழிப் புலமையாளர்; தமிழ்ச் சொல்லாய்வுத் துறையின் முன்னோடி; தம் வாழ்நாள் முழுமையும் கொண்ட கொள்கைக்காக ஆய்வு நிகழ்த்திய ஆய்வறிஞர்; அவர்தாம் பாவாணர்! ஆம், பாவாணர் என்றால் அது மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணரை மட்டுமே குறிக்கும்.

பாவாணர் தமிழாக வாழ்ந்தார். அவரது வரலாறு தமிழ் வரலாறாக அமையும் தகைமை சான்றது.

உலகின் மூத்த மொழி தமிழ். பல்வேறு சிறப்புகள் பொருந்திய மொழி தமிழ். இருப்பினும் தமிழ் பன்னூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு காரணங்களால் தளர்வுற்று வந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தேவநேயப் பாவாணர் அத்தளர்வுகளையும் அதற்கான காரணங்களையும் தெளிவாக்கியதுடன் அத்தளர்வுகளின்று விடுபட்டு மீண்டும் தமிழ் தன் சிறப்புடன் திகழ்வதற்கு வழிவகை காட்டினார்.

தமிழ்த் தொடர்பான, குறிப்பாகத் தமிழ்ச் சொற்கள் தொடர்பான பல சிக்கல்களுக்குத் தீர்வுகண்ட பெருமை பாவாணரைச் சாரும்.

பாவாணர்என்னும் முத்தமிழ் வாழ்வினால் தமிழ் ஏற்றம் பெற்றது.

தமிழ் திராவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஞால முதன் மொழியுமாய் இருப்பதைத் தெளிவாக்குவதே பாவாணர் கடைப்பிடியாய் இருந்தது. தமிழை வடமொழியினின்று மீட்பதைத் தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். தாம் மேற்கொண்ட கொள்கையில் தடுமாற்றம் இல்லாமல் இறுதிவரை கொள்கைக் குன்றாக நின்றவர்.

பாவாணரின் தந்தை ஞானமுத்து, தாய் பரிபூரணம். பாவாணருடன் பிறந்தவர் ஒன்பது பேர். மகளிர் அறுவர்க்கும் ஆண்கள் மூவர்க்கும் பின் பாவாணர் பத்தாம் மகவாக **1902** ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் **7** ஆம் பக்கல் வெள்ளிக்கிழமை பிறந்த கடைக்குட்டி. பாவாணரது இயற்பெயர் தேவநேசன். பாவாணர் பிறந்த ஊர் சங்கரன் கோயில் என்னும் ஊருக்கு அருகிலுள்ள பெரும்புத்தூர்.



பாவாணர் ஆம்பூரில் 'மிசௌரி நல்லஞ்சல் உலுத்திரன் விடையூழிய நடுநிலைப்பள்ளி'யில் எட்டாம் வகுப்பு வரை கற்றுத் தேர்ச்சியுற்றார்.

பின்னர் பாளையங்கோட்டைத் திருச்சபை விடையூழியக் கழக (C.M.S.) உயர்நிலைப் பள்ளியில் **4,5,6** ஆம் படிவங்களைப் (**9,10,11** ஆகிய வகுப்புகள்) பயின்று தேர்ச்சி பெற்றார். 'யங்' என்னும் விடையூழியர் பாவாணரது இக்காலக்கட்டக் கல்விக்கு உதவினார்.

சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வும் B.O.L. என்னும் கீழ்கலைத் தேர்வும் எழுதி வெற்றிபெற்றார். **1928** ஆம் ஆண்டு மன்னார்குடிப் பின்லே கல்லூரி (Finlay) உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பொறுப்பேற்று அங்கு ஆறாண்டுகள் பணி செய்துள்ளார்.

மன்னார்குடியில் இருந்த காலத்தில்தான் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் தொடர்பு உண்டாகியது. செந்தமிழ்ச் செல்வியில் இவர்தம் முதற்கட்டுரை வெளியிடப்பட்டது. **1931** சூன்–சூலை இதழில் அவரது முதற்கட்டுரை வெளியானது. தலைப்பு மொழியாராய்ச்சி (Comparative Philology) என்பதாகும். அதில் இவரது பெயர் வித்துவான் ஜி.தேவநேசன் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி பிசப்பு ஈபர் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பது ஆண்டுகள் **(1934–43)** பணியாற்றினார்.

1952–ல் பாவாணர் தாமே தனியாகப் பயின்று தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1956ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியாராய்ச்சித் துறையில் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுக்கும் பணியில் வாசகராக சேர்ந்தார்.

1971ஆம் ஆண்டு பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி உருவாக்க திட்டம் தென்மொழி மூலம் அறிவிக்கப்பட்டது.

மதுரையில் உலகத் தமிழ்க் கழகத்தின் இரண்டாவது மாநாடு இரண்டு நாள் நடைபெற்றது. மாநாட்டுக்குப் பாவாணர் அவர்கள் தலைமையேற்றார். தவத்திரு குன்றக்குடி அடிகளார், பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேரா.கோ.நிலவழகனார், பேரா.க.ப.அறவாணன போன்ற அறிஞர்கள் பங்கேற்றனர்.

பறம்புமலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பாரி விழாவில் பாவாணருக்குச் 'செந்தமிழ் ஞாயிறு' என்றும் பட்டமளித்து சிறப்பிக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் 'மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்' என்னும் தலைப்பில் பேருரையாற்றினார். அன்று உடல்நலன் பாதிக்கப்பட்டு இரவு 10.20 மணிக்கு மதுரை அரசினர் இராசாசி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 15.1.81 அன்று இரவு 12.30 மணிக்கு பாவாணர் இயற்கை எய்தினார்.

மொழி ஞாயிறு, மொழிப் பேரறிஞர், தனித்தமிழ்க் காவலர், மொழிநூற் கதிரவன், மொழிநூன் மூதறிஞர் முதலான பல பட்டங்களுக்கும் உரியவராக ஒளிர்ந்தார். பாவாணர் இயற்றிய நூல்கள் 35க்கும் மேற்பட்டன. அவர் எழுதிய கட்டுரைகள் நூற்றுக்கும் மேற்பட்டன.

பாவாணர் அறிவுத்துறையில் ஆழ்ந்த புலமைமிக்கவர் என்பது மட்டுமல்லாமல் கொண்ட கொள்கையில் உறுதிமிக்கவரும் ஆவார்.

தமிழ் குமரிக்கண்டத்தில் தோன்றிய ஞால முதன்மொழி என்றும் சமற்கிருதத்தில் ஐந்திலிருபகுதி தமிழென்றும் பிறமொழித் துணையின்றித் தமிழ் தனித்து வழங்கவும் தழைத்தோங்கவும் கூடும் என்றும் தமிழிற் கலந்துள்ள வடசொற்களெல்லாம் தேவை அடிப்படையில் விரும்பிக் கடன் கொண்டவை அல்ல என்றும் தாம் கண்டறிந்த தமிழின் சிறப்பை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தினார்.

பாவாணர் மறைந்தாலும் அவரது ஆராய்ச்சி ஆர்வலர்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறது. அவரது புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

□ □ □

---

பல ஆண்டுகளாக ராமேஸ்வரம் தீவு மக்களுக்கு, நேரம் காட்டும் கருவியாய் விளங்கும் ராமேஸ்வரம் கோயில் மணி நூறாவது ஆண்டை நோக்கி நடை போடுகிறது. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களும், தனுஷ்கோடி, மண்டபம், இலங்கை தலைமன்னார், ராமேஸ்வரம், பாம்பன் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும் ராமேஸ்வரம் கோயிலில் அடிக்கப்படும் மணியின் ஓசை கேட்டு நேரத்தை கணக்கிட்டு தங்களின் பணி செய்து வந்தனர்.

இரவு ஒன்பது மணியிலிருந்து ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு தடவை மணி அடித்ததும் பொதுவாக ராமேஸ்வரம் தீவுப் பகுதியில் வசித்து வருபவர்களும், மீனவ நண்பர்களும் கடிகாரம் பார்க்காமல், ராமேஸ்வரம் கோயில் மணி ஓசை கேட்டு நேரத்தை தெரிந்து கொள்வார்கள்.

---

ஆஸ்திரேலியாவின் ஒலிம்பிக் ஸ்டேடியம் உலகிலேயே மிகப் பெரியது. இதில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் இருக்கைகள் உள்ளன. ஸ்டேடியத்திற்கு அருகில் உள்ள ரயில் நிலையத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்கு 50 ஆயிரம் பயணிகள் சென்று வர வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 199 நாடுகளிலிருந்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர். மொத்தம் 296 வகையான விளையாட்டுக்கள் இதுவாகும். யு.எஸ்.நெட் ஒர்க்கான நேஷனல் ப்ராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் நிறுவனம் 71.5 கோடி அமெரிக்க டாலருக்கு ஒளிபரப்பு உரிமை கோரியுள்ளது.

இந்திய நாட்டின் தகவல் தொழில் நுட்பத்தில் முக்கிய மாநிலமாக தமிழ்நாடு வேரூன்றி வருகிறது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலை தமிழ்நாட்டில் உள்ளது. மிகச் சிறந்த அறிவியல் மற்றும் சமூகக் கட்டமைப்பையும், அனைத்திந்திய அளவில் தலை சிறந்த மனித ஆற்றலையும் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது.

இவற்றுக்கு ஆதரவாக, கீழ்க்கண்ட முக்கிய முயற்சிகளைத் தமிழக அரசு எடுத்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மன்றம்'' ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னைக்கருகில் உள்ள சிறுசேரியில் 1,000 ஏக்கர் அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா ஒன்றினை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஏற்படுத்தி பல தகவல் தொழில்நுட்பத் தொழில் பிரிவுகளுக்கு இப்பூங்காவில் தொழில் வளாகத்தை அமைப்பதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# தகவல் தொழில்நுட்பம்

மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தகவல் தொழில் நுட்பத் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அமைப்பதற்கு இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவனம் ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தற்போதுள்ள தரை நிலையங்களைத் தவிர, இவை கூடுதலாக உருவாக்கப்படும் தரை நிலையங்களாகும்.

சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் பொது வழித் தடத்தை உபயோகித்து கண்ணாடி இழைவடம் பதிப்பதற்கு ஏதுவாக பொது வழித்தட உரிமை வழங்கி நல்லதோர் கொள்கையினை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. இதன் பயனாக, தனியார் துறையின் மூலம் மாநிலத்தில் 1,200 கி.மீட்டருக்கு மேல் கண்ணாடி இழை வடம் பதிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் வழியாக சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு கண்ணாடி இழைவடம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள், இத்திட்டம் செயல்படுத்தக் கூடும். இதனால், அதிக அளவில் சர்வதேச அலைத் திறன் சென்னையில் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

சென்னையிலுள்ள, இந்திய தொழில்நுட்ப கல்லூரி (IIT), எம்.ஐ.டி. மீடியா லேப் மற்றும் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட, குறைந்த செலவிலான வயர்லெஸ் தொழில் நுட்பம் மூலம் கிராமப்புறங்களுக்குத் தொலைபேசி வசதிகளும் இணைய வசதியும் அளிக்கும் புதிய திட்டத்திற்கு அரசு ஆதரவு அளித்துள்ளது. ஒரு முன்னோடித் திட்டம் மதுரை மாவட்டத்தில் செயலாக்கத்தில் உள்ளது. தமிழில் புதுமையான மென்பொருள் வளர்ச்சியடைவதை ஊக்குவிக்கும் பொருட்டு "தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வலைத் தள (Web) அடிப்படையிலான தமிழ்க் கல்வியைப் பரப்புவதற்கு "தமிழ் இணையப் பல்கலைக்



கழகம்'' ஒன்று சமீபத்தில் துவக்கப்பட்டுள்ளது.



மக்களுக்கு நல்ல ஆளுமையை அளிக்க தொடர்ந்து உறுதிபூண்டு வரும் இவ்வரசு, அதன் ஒரு பகுதியாக, பத்திரப்பதிவுகள், மோட்டார் வாகனங்கள், நிலப்பதிவுறுக்கள், வரைபடங்கள் மற்றும் விற்பனை வரி ஆகிய குறிப்பான பகுதிகளைக் கண்டறிந்து அவற்றைக் கணினிமயமாக்கி வருகிறது.

பள்ளிக் கல்வித் துறையின் ஒத்துழைப்புடன், மாநிலத்தில் உள்ள 1,200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் விருப்பப் பாடமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டில்,ஆறாம் வகுப்பிலிருந்து கணினி அறிவியல் பாடத்தினை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உலக தகவல் தொழில் நுட்பத்திற்காக உயர்தரம் கொண்ட மனித ஆற்றலைத் தொடர்ந்து வளப்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, அனைத்து அரசு கலைக் கல்லூரிகள், அறிவியல், மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு கணினி அறிவுத் திட்டம் விருப்பப் பாடமாக அளிக்கப்படுகிறது.

மருத்துவம், சட்டம் மற்றும் அலுவல் சேவைகள் போன்ற தகவல் தொழில் நுட்பம் சார்ந்த பணிகள் மேற்கொள்வது இம்மாநிலமெங்கிலும் வெகு வேகமாக பிரபலமாகிக் கொண்டு வருகிறது.

அரசின் நடவடிக்கைகள் ஒளிவு மறைவின்றி நடைபெறுவதற்கு ஏதுவாக பொது மக்களுக்குப் பயன்படும் அரசின் முக்கிய கொள்கைக் குறிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள், விண்ணப்படிவங்கள், சம்பந்தப்பட்ட வலைத்தளத்திற்கான இணைப்புகள், புள்ளி விவரங்கள், பொது மக்களுக்குத் தொடர்புள்ள பிற பத்திரங்கள் போன்றவை WWW-tn.gov.in என்ற அரசு தகவல் தளத்தில் இடம்பெறச் செய்யப் பட்டுள்ளன.

– திரு.**தா.பிரகாஷ்,** இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தகவல் தொழில்நுட்பத்துறை

• • •



# சுற்றுலா வளர்ச்சி

சட்டப்பேரவையில்
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திருமதி **ஆர். சரோஜா**

இந்த நிதி நிலை ஆண்டான **2001–2002**க்கு சுற்றுலாத் துறைக்கு ஒரு சிறப்பான இடத்தை முதல்வர் அளித்துள்ளார்கள். தமிழக சுற்றுலாத்தறை **1971**ம் ஆண்டில் தொடங்கப்பட்டு கடந்த **30** ஆண்டுகள் ஆகியும் இதை யாரும் கவனிப்பாரில்லாத நிலைதான் இருந்து வந்துள்ளது. சென்ற ஆட்சியில், கடந்த நிதிநிலை ஆண்டில் ரூ.**5.50** கோடி தான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு முதன்முதலாக சுற்றுலாத் துறைக்கு சுமார் ரூ.**17** கோடி கடந்த முப்பது ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள் என்பதையும், இதன் மூலம் தமிழகச் சுற்றுலா, வரும் ஆண்டுகளில் சிறப்பான ஓரிடத்தைப் பெற்று இந்தியாவிலேயே தமிழ்நாடு சுற்றுலாதான் முன்னிலையில் உள்ளது என்று கூறத்தக்க அளவில் வளர்ச்சி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில் இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்நாடு சுற்றுலா எவ்வாறு வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்கும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு ஒரு சிறப்பான துறையாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் அரசால் எடுக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு சுற்றுலா சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. சுற்றுலாப் பயணிகள் வருகையும் சிறப்பாக இருந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து விட்டது. இதற்கு முந்தைய அரசின் அணுகுமுறையே காரணமாகும். இத்தகைய நிலை தொடராமல் தமிழகம் இந்தியாவில் முதன்மையான மாநிலமாக ஆக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி பல உரிய, முறையான, சிறப்பு நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்படவுள்ளது.

இங்கிலாந்து, இலங்கை, கனடா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை தருகின்றனர். மேலும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடிவெடுக்கப்பட்டு , கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





1) பிற மாநிலங்களில் இல்லாத சில சிறப்பியல்புகள் தமிழகத்தில் உள்ளன, அதை உரிய முறையில் வெளிகொணரல்.

2) சுற்றுலாத் தொழிலில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கத் தேவையான ஊக்க உதவித் தொகையும், பிற சலுகைகளும் அளிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

3) தற்போது வருகை தரும் 7 முதல் 9 விழுக்காடு வரையிலுள்ள சுற்றுலா பயணிகளின் வருகையை 10 முதல் 12 விழுக்காடு வரை உயர்த்துவது இந்த குறிக்கோளை அடைய கீழ்க்காணும் யுக்திகள் கையாளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ) அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நிலை உயர்த்துதல்.

ஆ) தொன்மை மிக்க வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தை விளம்பரப்படுத்துதல்.

இ) சூழலியல் தோழமையான சுற்றுச் சூழலைப் பேணிக் காத்தல்.

ஈ) நமது பாரம்பரியம் மிக்க பண்பாட்டினைப் பாதுகாப்பதோடல்லாமல் இத் தலைமுறையினருக்கு ஏற்றாற் போல் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மாற்றியமைத்தல்.

உ) உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க புதிய யுக்திகளை நவீன தொழில் நுட்பத்தினைக் கையாண்டு உலகளவில் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளுதல்.

ஊ) புகழ் பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு இயற்கை வளப்புடன் கூடிய புதிய சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

எ) துல்லியமான தகவல்களையும் சிறப்பான சேவையையும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்க மனித வள மேம்பாடு மற்றும் உரிய பயிற்சியும் அளித்தல்.

ஏ) தனியார் தொழில்முனைவோரை சுற்றுலாத் தொழிலில் முதலீடு செய்ய ஊக்குவித்தல்.

ஐ) சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு 'சுற்றுலாக் காவலர்' பிரிவினை ஏற்படுத்துதல்.

ஒ) மண்டலப் பொருளாதார வளர்ச்சியிலுள்ள ஏற்றத் தாழ்வைச் சரி செய்தல்.

ஓ) தோழமை, தேசிய ஒருமைப்பாடு, உலக சகோதரத்துவம் ஆகியவற்றை சுற்றுலா (வளர்ச்சி) மூலம் வளர்த்தல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்த மிகப் பெரிய விளம்பர மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்காணும் வகையில் செயல்படுத்தப்படும்.

அ) பிற மாநிலங்களில் சுற்றுலா அலுவலகம் துவக்குதல்.

ஆ) சந்தைப்படுத்த முகவர்கள் பிற மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் நியமித்தல்.

இ) பிற மாநிலங்களிலும் வெளி நாடுகளிலும் விற்பனை முகவர்களை நியமித்தல்.

ஈ) ஒலி—ஒளிக் காட்சிக்குரியவைகளை நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப முறையில் உருவாக்குதல்.

உ) நவீன அச்சுத் தொழில் நுட்பத்தை மேற்கொண்டு பல வண்ண சுவரொட்டி, விளம்பரப் பலகை மடிப்பேடுகள் முதலியன தயாரிக்கப்படும்.

ஊ) நவீன ஒலி—ஒளி வசதியுடன் கூடிய கலை விழாக்கள் நடத்தப்படும்.

எ) உலகளவிலும், நம்நாட்டிலும், தினசரி, சஞ்சிகைகள், சுற்றுலா வழிகாட்டிப் புத்தகங்கள், செய்திச் சுவடிகளிலும் விளம்பரம் செய்யப்படும். சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல வண்ணக் கையேடுகள், வண்ணப்பட அட்டைகள் ஆகியவை தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு தயாரிக்கப்படும்.

ஏ) உலகளவிலுள்ள கீழ்க்காணும் சுற்றுலாக் கண்காட்சிகளிலும் சுற்றுலாச் சந்தைகளிலும் பங்கேற்கப்பட உள்ளது.

1) உலக சுற்றுலாச் சந்தை (ஐ டி பி) – பெர்லின்

2) உலக சுற்றுலாச் சந்தை (டபிள்யு டி எம்) – லண்டன்

3) பசிபிக் ஆசிய சுற்றுலாச் சங்கம் (பிஏடிஏ) – சிங்கப்பூர்.

4) மொரிசியஸ் சுற்றுலாச் சந்தை – மொரிசியஸ்.

5) தென்னாப்பிரிக்கச் சுற்றுலாச் சந்தை – தென்னாப்பிரிக்கா.

6) மலேசிய சுற்றுலாச் சந்தை (ஜப்பான் சுற்றுலா முகவர்களின் கூட்டமைப்பு) – மலேசியா

7) குவைத் சுற்றுலாச் சந்தை – குவைத்

8) அமெரிக்க முகவர்களின் கூட்டமைப்பு – அமெரிக்கா

9) சுவிஸ் சுற்றுலாச் சந்தை – சுவிட்சர்லாந்து

சென்னை நகரம் கிழக்கு–மேற்கு நாடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளதால் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் சென்னைக்கு வருகை தந்து செல்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

இந்தியாவில் பிற மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பயண எழுத்தாளர்கள், இதழியலாளர்கள், செய்தியாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் ஆகியோரை வரவழைத்து சுற்றுலாப் பயணத் திட்டம் நடத்தி அவர்கள் இங்கே காணுகின்ற சிறப்புகளைத் தங்களது வெளியீடுகள் மூலம் விளம்பரப்படுத்தி அதன் மூலம் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியுமென நம்புகிறோம். இந்த முயற்சி குறைந்த செலவில் நிறைந்த பலன் என்ற வகையில், இது சிறப்பான திட்டமாகும்.



உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தீவிர விளம்பர முகாம் இந்தியா முழுவதும் நடத்தப்படும்.

நாட்டின் பல மாநிலங்களில் நடத்தப்படும் சுற்றுலாக் கருத்தரங்குகள் மற்றும் பொருட் காட்சிகளில் கலந்து கொள்ளுதல் போன்ற விளம்பரப் பணிகள் நடைபெற உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தகவல்களை உலகின் எப்பகுதியிலிருந்தும் அறிந்து கொள்ளும் வகையில்

உடனடி முன்பதிவு செய்யவும் வாய்ப்பு ஏற்படுகின்ற வகையில் " வேன்" (WAN) மூலம் இணைப்பும், புதிய வலைத் தளம் (Web Site) ஒன்றும் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயணத் திட்டங்களுடன் புதிய பயணத் திட்டங்களும் ஏற்படுத்தப்பட உள்ளன. மைய தொல்லியல் துறை, மாநில தொல்லியல் துறை, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து புதிய பயணத் திட்டங்கள் முழுமையாக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிநாடுகளில் இருந்து வரும் கலையார்வம் மிக்கவர்கள், ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உல்லாசச் சுற்றுலாப் பயணிகளுக்கென சிறப்பு வான்வெளி சுற்றுலாத் திட்டம், வானூர்தி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தை முகவர்களுடன் கலந்து ஆலோசித்து தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதையும் இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சுற்றுலாத் துறையின் பொறுப்பு,சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதோடு நின்று விடுவதில்லை. சுற்றுலாத் தலங்களில் சிறந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதும் சுற்றுலாத் துறையின் தலையாய கடமையாகும். இதற்காக மைய அரசு உதவித் திட்டங்கள் மூலம் நடப்பு நிதி ஆண்டில் ரூ.801 இலட்சங்களுக்கு 30 திட்டங்கள் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளன.

மாநில அரசின் பகுதி 2 திட்டத்தில் ரூ. 50 இலட்சத்திற்கு 8 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு தனியாக "சுற்றுலாக் காவலர்" திட்டம் தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. விமான நிலையம், இரயில் நிலையம் ஆகிய இடங்களில் இடைத்தரகர்கள் இல்லாமலிருக்கும் வகையில் செய்வதும் பாரம்பரியம் மிக்க இடங்களிலும் மற்றும் ஆலயங்களிலும் பிச்சைக் காரர்கள் தொல்லையில்லாமல் செய்வதும், தமிழ்நாட்டிற்கு வந்து செல்கின்ற சுற்றுலாப் பயணிகளின் மனதில் இன்ப நினைவுகள் நீங்கா இடம் பெற்றிருக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கங்களும் இத்திட்டத்தின் மூலம் நிறைவேறும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சரியான சுற்றுலாத் தகவல்களைச் சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களுக்குத் தெரிந்த மொழியில் அளிப்பது மிகவும் அவசியமானதாகும். சுற்றுலாப் பயணிகள் ஆலயங்களுக்குச் செல்லும்போதும், பண்பாட்டு மையங்களுக்கும், நுண்கலை மையங்களுக்கும் தொல்பொருள் நினைவிடங் களுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்குச் செல்லும் போதும் வழிகாட்டிகளின் உதவி தேவை . வழிகாட்டிகள் மிகச் சரளமாக பேசும் திறமை படைத்தவர்களாகவும், மொழி பெயர்த்துக் கூறும் திறமையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுற்றுலாப் பகுதிகளில் பயிற்சி பெற்ற வழி காட்டிகளின் அவசியத்தை உணர்ந்து தொடக்கத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய முக்கிய நான்கு இடங்களில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சியை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிறுவனம் மற்றும் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளியிலுள்ள பல்கலைக்கழகங்கள் மூலம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2001–2002ல் தற்போதுள்ள வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், புதிய வழிகாட்டிகளை உருவாக்கவும் பயிற்சிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரிச் சீரமைப்பு மற்றும் சுற்றுலாவில் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்துதல், மனித வள மேம்பாடு, உணவகத் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு திட்டங்களில் சீரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கு புதிதாக கீழ்க்கண்ட பல திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

### கடற்கரைப் பகுதி மேம்பாடு

1,000 கி.மீ. நீளமுள்ள கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது தமிழகம். இப்பகுதியை மேம்படுத்த இதுவரை, ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்படவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி கிழக்குக் கடற்கரைப் பகுதியை மேம்படுத்த திட்டங்கள் செயல்படுத்தப்படும். சென்னைக்கும் புதுவைக்கும் இடையேயுள்ள சிறப்புச் சுற்றுலாப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்த தனியார் திட்டங்கள் ஊக்குவிக்கப்படும்.

அரசு அளவில் பரிசீலிக்க "ஒற்றைச் சாளர முறை" (Single Window Clearance) ஒன்று வகுக்கப்படும். இதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டு அதில் சுற்றுலாத் துறை, வனத் துறை, ,மாசுக் கட்டுப்பாட்டுத் துறை, வருவாய்த் துறை மற்றும் நிதித் துறையில் உள்ள அலுவலர்கள் இடம் பெறுவார்கள்.

### ஊக்கத் தொகைகள் வழங்கி தனியார் முதலீட்டை ஈர்த்தல்

சுற்றுலாத் திட்டங்கள் மைய அரசு, மாநில அரசு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நிதி நிறுவனம்,

நகர்ப்புற திட்டத் துறை, மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய துறைகளிடமிருந்து நிதி பெற்று செயல்படுத்தப் படுகின்றன. சுற்றுலா மையங்கள் சுத்தமாகவும், மாசு படியாமலும் பாதுகாப்பது உள்ளாட்சி மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் கடமையாகும். நாம் அனைவரும் விழிப்புடன் இருந்து சுற்றுலாத் தலங்களின் தூய்மையைப் பாதுகாக்க



திட்டமிட்டு நடவடிக்கை எடுத்து ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அதனால் சுற்றுலா மையங்களுக்கு எதிராகக் கூறப்படும் புகார்களைத் தவிர்க்க இயலும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஒலி-ஒளிக் காட்சி

ஒலி–ஒளிக் காட்சி மாமல்லபுரம், காஞ்சிபுரம் மற்றும் தஞ்சை பெரிய கோவிலில் ஆரம்பிக்கப்படும். மதுரையில் திருமலை மன்னர் அரண்மனையில் நடைபெற்று வந்த ஒலி–ஒளிக் காட்சி விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

### கலை விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள்

தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை நன்கு உணர்ந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு காலங்களில் விழாக்கள் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகின்றன. 2001–2002 ல் விழாக்கள் பிரபலமடையாத சுற்றுலா மையங்களில் நடத்தப்பட்டு அந்த இடங்கள் பிரபலமாக்கப்படும்.

மேலும் ஆண்டு தோறும் நடத்தப்படும் விழாக்கள் குறித்த விவரங்கள் பல வண்ண விளம்பரங்கள் மூலம் உலகெங்கிலும் விளம்பரப் படுத்தப்படும். இதனால் சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத் திட்டத்தில் இவ்விழாக்களைச் சேர்த்துக் கொள்ள வாய்ப்பாகும்.

### ஹெலிகாப்டர் சுற்றுலா

அதிக அளவில்செலவு செய்யக் கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக "ஹெலி டாக்சி" சேவையை தனியார் மூலம் அறிமுகப் படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான உதவிகளை அரசு அவ்வப்போது செய்து கொடுக்கும்.

### புதிய படகுக் குழாம்

கீழ்க்காணும் இடங்களில் புதிய படகுக் குழாம் அமைக்கப்படும்.

1) சென்னை அடையாறு–கோட்டூர்புரம் அருகில்

2) பழவேற்காடு

3) ஆலம்பரக் கோட்டை

4) நயினார் குளம்

### சாகசச் சுற்றுலா

இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மத்திய அரசு நிதியுதவி மற்றும் வனத் துறையின் ஒத்துழைப்புடன் மலை ஏறுதல், மலைப்பாதையில் நடத்தல், பாறையில் ஏறுதல் போன்ற சாகச விளையாட்டுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.



### கிராமியச் சுற்றுலா

இது ஒரு புதிய சுற்றுலாத் திட்டம். நமது நாட்டின் உயர்ந்த கலாச்சாரம், கலை, வீர விளையாட்டுகள், கடவுள் வழிபாடு, கைவினைப் பொருட்கள், மூலிகை மருத்துவம் ஆகியவை கிராமங்களில்தான் பாதுகாத்து போற்றப்படுகின்றன. இதை ஊக்குவிக்கும் வகையில் பல புதிய கீழ்க்கண்ட கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த ஆண்டில் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

1) திருவாதவூர் (மதுரை மாவட்டம்)

2) சிறுங்குன்றம் (காஞ்சிபுரம் மாவட்டம்) .

3) புரிசை (திருவண்ணாமலை மாவட்டம்)

4) சுத்தமல்லி (திருநெல்வேலி மாவட்டம்)

இதுபோன்ற புதிய திட்டங்களான சுற்றுச் சூழல் போற்றும் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, வரலாற்றுச் சிறப்புமிக்க புராதனச் சின்னங்கள் சுற்றுலா போன்ற பல்வேறு புதிய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

### மாநாட்டு அரங்கம்

மாநாட்டுச் சுற்றுலாவைத் தமிழகம் இதுவரை ஈர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு முதல்வரின் ஆலோசனைக்கிணங்க சுமார் 500 ஏக்கர் பரப்பில் சென்னை–மாமல்லபுரம் இடையில், 1500 இருக்கைகள் கொண்ட பல்வேறு வசதிகள் அமையும் வகையில் ஒரு மாநாட்டுக் கூடம் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் தனியார் துறை மூலம் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்களில் வழங்கப்படும் உணவு வகைகளின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். ஓட்டல்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை நல்ல முறையில் உபசரிக்க பணியாளர்கள் ஊக்கு விக்கப்படுவார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாக்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பழைய பேருந்துகள் நீக்கப்பட்டு அதி நவீன சொகுசுப் பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும்.

மேலும், மாண்புமிகு முதல்வரின் ஆலோசனைக் கிணங்க நட்சத்திரத் தரம் உள்ள ஓட்டல்கள் திருவண்ணாமலை, வேளாங்கன்னி, நாகூர் மற்றும் பழனியில் விரைவில் கட்டப்பட உள்ளன. மற்ற இடங்களில் தேவைக்கேற்றாற்போல் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அறிவிப்புகள்

1. திருமுருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழனியம்பதியிலும் மற்றும் திருவண்ணாமலை, நாகூர் வேளாங்கண்ணி ஆகிய திருத்தலங்களிலும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் வகையில் உயர்தர ஸ்டார் ஓட்டல்கள் தனியார் மூலமாக கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. கோவை மாவட்டம் அழகிய ஆனைமலைச்சாரல் பகுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் சிறப்புச் சுற்றுலா மலை வாஸஸ்தலமாக அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அதன் தொடக்கமாக இந்த ஆண்டு ரூ.30 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக கட்டமைப்புப் பணிகள் தொடங்கவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சென்னைக்கு அருகில் உள்ள முட்டுக்காடு கடல்நீர் பகுதியில் ஏற்கெனவே உள்ள படகுத் துறை மேம்படுத்தப்பட்டு ''நீர் விளையாட்டு'' சுற்றுலா மையமாக இவ்வாண்டு அமைக்கப்படும்.

4. இராமேஸ்வரம் குருசடை தீவுகள் பகுதியில் கடல்வாழ் அழகிய தாவர வகைகள், மீன் வகைகள் மற்றும் இயற்கை வளங்களை சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழும்படியாக கண்ணாடி அடித்தளம் கொண்ட சிறப்புப் படகுகள் ரூ.19 இலட்சம் செலவில் இந்த ஆண்டிலேயே வாங்கி தமிழ்நாடு வனத்துறையில் அன்பான ஒத்துழைப்போடு செயல்படுத்தப்படும்.

5. கோடிக்கரை அழகிய வனப்பகுதியில் உள்ள தங்கும் விடுதி மேம்படுத்தப்பட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கும் "வனவிடுதியாக" மாற்றியமைக்கப்படும்.

நட்சத்திர தரம் கொண்ட தங்கும் விடுதி, கலைக்கூடம், மாநாட்டுக்கூடம், எழில்பூங்கா, படிப்பகம், நீச்சல் குளம், உணவகம் மற்றும் பல பொழுதுபோக்கு சிறப்பு அம்சங்களும் விளங்கும் வகையில் பெரிய அளவில் பாரம்பரியமிக்க தனியார் நிறுவனங்கள்/கூட்டமைப்புகள் மூலமாக "கன்வென்சன்" சென்டர் அமைக்கப்படும்.

8. "கங்கை கொண்ட சோழபுரம்" ஒரு சிறந்த சுற்றுலா மையமாக உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. டவுன் அண்டு கண்டரி பிளானிங் துறை மூலம் தங்கும் விடுதி, உணவு விடுதி மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

9. தெய்வீக முனிவர்களும், மாமன்னர்களும் தெய்வங்களுடன் ஒட்டி உறவாடி மகிழ்ந்த மிகச் சிறந்த தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் நிறைந்து விளங்கிய நகரங்களான காஞ்சிபுரம், மகாபலிபுரம், தஞ்சை பெரிய கோவில் ஆகிய திருத்தலங்களில் சிறப்பான முறையில் ஒளி—ஒலிக்காட்சிகள் புதியதாகத் துவங்கப்படும்.



6. சென்னைக்கு அருகில் பழவேற்காடு ஏரிப்பகுதி ரூ.60.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு சிறந்த ஒரு சுற்றுலா மையமாக உருவாக்கப்படும்.

7. முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ''கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலையில்'' முட்டுக்காடுக்கும் பாண்டிச்சேரிக்கும் இடைப்பட்ட பகுதியை சிறப்புச் சுற்றுலா பகுதியாக 1992 ஆண்டு அறிவித்துள்ளார்கள். ஆனால் முந்தைய அரசு இப்பகுதியில் சுற்றுலா வளர்ச்சிக்கு எந்த முயற்சியுமே மேற்கொள்ளவில்லை. தற்போது சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடைப்பகுதியில் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் ஐந்து

மதுரையில் கடந்த ஆட்சிக்காலத்தில் நின்றுபோன ஒளி—ஒலிக்காட்சி முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி மீண்டும் விரைவில் துவங்கப்படும்.

அனைத்துத் திட்டங்களுமே முதலமைச்சர் அவர்களே உருவாக்கிக் கொடுத்த திட்டங்களாகும். அவை அனைத்தையும் "கொள்கை விளக்கக் குறிப்பேட்டில்" அறிவித்துள்ளேன். திட்டங்கள் அனைத்துமே பல்வேறு துறைகளின் முழுமையான ஒத்துழைப்புடன் நடத்த வேண்டியது என்பதால் அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் ஒத்துழைப்பையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகிறனே். •

# கால்நடை பராமரிப்புத்துறை

சட்டப்பேரவையில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

**திரு.சி. சண்முகவேலு**

பகுதி – II திட்டத்தின்கீழ் ரூ.206.85 இலட்சம் செலவில் ஏழு புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

கிராம மக்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக இவ்வரசு இவ்வாண்டு புதியதாக 10 கால்நடை மருந்தகங்களைத் துவக்க ரூ.23 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

கிராம புறங்களில் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர) மக்கள் பயன்பெறும் வகையில் எந்தவித தீவன செலவுமின்றி புறக்கடையில் கோழி வளர்ப்பதற்காக ரூ.34.36 இலட்சம் இவ்வரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதே போன்று குறைந்து வருகிற எருமை மற்றும் மாட்டினங்களின் உற்பத்தித் திறனை ஊக்கப்படுத்தி உயர்த்த இவ்வாண்டு அரசு மான்ய விலையில் கிடேரி எருமைக் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்க ரூ.28 இலட்சம் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நிலமற்ற, சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி வருவாயை பெருக்கி மானிய விலையில் செம்மறியாடுகள் வழங்க ரூ.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தரமான வீரியமுள்ள உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்ய ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட 20 பொலி காளைகளுக்கு பதிலாக 20 முர்ரா பொலி காளைகள் ரூ.6 இலட்சம் செலவில் அபிஷேகப்பட்டி மாவட்டக் கால்நடைப்பண்ணைக்கு வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அபிஷேகப்பட்டி மற்றும் கொருக்கை கால்நடைப்பண்ணைகளிலுள்ள கால்நடைகளின் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்காக, பயன்படும் குளங்களைத் தூர்வாரி அவைகளை ஆழப்படுத்த ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

கால்நடை பராமரிப்பு, தீவன அபிவிருத்தி மற்றும் விரிவாக்க தொழில் நுட்பங்களில் தொடர்புப் பணியாளர்கள் தம்பதியினர் மூலம் விவசாயிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இத்திட்டம் டானிடா உதவியுடன் தமிழ்நாட்டில் செயல்படுகிறது. இதனை எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களில் ஐந்தாண்டு காலத்தில் ரூ.336 இலட்சத்தில் இவ்வாண்டு இவ்வரசால் செயல்படுத்தப்படவுள்ளது.

ஒன்பதாவது மற்றும் பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகியன ஒருங்கிணைந்து, வளமான எருமை மற்றும் பசு இன மேம்பாட்டிற்காக ரூ.100.20 கோடி மதிப்பீட்டில் மைய அரசின் 100 சதவிகித நிதியுதவியுடன் ஒரு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கருத்துரு மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்ட ஒப்புதல் பெற்றபின் மாநில அளவில் திட்ட அமலாக்கும் நிறுவனம் ஒன்றினை அமைத்து இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புத் துறைக்காக ரூ.62.05 கோடி மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்காக ரூ.5.92 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செய்யவியலும் என்பதனைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



# வனவளம்

வனங்கள் இயற்கை அன்னை மனித இனத்திற்கு அளித்த நன்கொடையாகும். தட்ப வெப்ப நிலையை சமநிலைப்படுத்தி பூமியை வெம்மையடையாமலும், வறண்டு போகாமலும் தடுத்து பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் அரிய தாவரங்கள் மற்றும் உயிரினங்களைக் காப்பதிலும், சுற்றுச்சூழலைக் காப்பதிலும் வனங்கள் ஆற்றும் பங்கு அளவிடற்கரியது.

தமிழ்நாட்டில் வனத்துறையின் கட்டுப்பாட்டில் 22,865 சதுர கிலோமீட்டர் வன நிலங்கள் உள்ளன. இது தேசிய வனக் கொள்கையின்படி இருக்க வேண்டிய மூன்றில் ஒரு பங்கு என்பதற்கு பதிலாக ஆறில் ஒரு பங்குதான் இருக்கிறது. எனவே நம் மாநிலத்தில் வனப் பகுதிகள் போதுமான அளவில் இல்லாததையும், காடுகள் அருகி வருவதையும் கருத்தில் கொண்டு இந்த அரசு அடுத்த ஐந்து ஆண்டுகளில் மிகப் பெரிய அளவில் காடு வளர்ப்புத் திட்டம் கொண்டுவர உத்தேசித்துள்ளது.

1988ஆம் வருடத்திய தேசிய வனக் கொள்கை திட்டத்தின் அடிப்படையில் நமது மாநிலத்திற்கென்று தனியாக தமிழ்நாடு மாநில வனக் கொள்கை ஒன்றை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது.

காடு வளர்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக பெருமளவு ஏற்றுமதி வாய்ப்புள்ள மூலிகைச் செடிகளை (Medicinal Plants) அரசு வனப்பகுதிகளிலும் தனியார் நிலங்களிலும் பயிரிடுவதற்கு அரசு பரிசீலித்து வருகிறது.

வனவளத்தினை மேலும் அழிவிலிருந்து தடுப்பதற்கு தற்போதுள்ள பாதுகாப்புப் பணியாளர்கள் போதுமானதல்ல என்பதை இந்த அரசு உணர்ந்து நடப்பு நிதி ஆண்டில் புதிதாக 50 வன பீட்டுகள் ஏற்படுத்துதல், 50 வனக் காவலர்கள் (Forest Guards) மற்றும் 50 வனக் காப்பாளர்கள் (Forest Watchers) பணியிடங்கள் ஏற்படுத்துவதற்கு ரூ.50.60 இலட்சம் செலவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (மொத்த வனப் பரப்பளவு 2284 பீட்டுகளாக பிரிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது 1,315 பீட்டுகள் நடைமுறையில் உள்ளன. மேலும் 969 பீட்டுகள் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கு 969 வனக் காவலர்கள் மற்றும் 969 வனக் காப்பாளர்கள் பணியிடங்கள் ஏற்படுத்த வேண்டும்).

மழை குறைவான பகுதிகளில் உள்ள நிறைந்த தரிசு நிலத்தின் சுற்றுச் சூழலைப் பேணவும் நிலத்தின் வளத்தை மேம்படுத்தவும் ஏற்ற மரங்கள் நடப்படும். விருதுநகர், கோவில்பட்டி (தூத்துக்குடி) மற்றும் திருநெல்வேலி உள்பட 20 மாவட்டங்களில் தலா 20 ஹெக்டேர் பரப்பில் ரூ.60 இலட்சம் செலவில் பசுமைக்காடுகள் வளர்க்கப்படும். விவசாயிகள் அவர்களது நிலங்களை மேம்படுத்த இப்பகுதிகள் முன் மாதிரியாக விளங்கும்.

1. திருவள்ளூர்
2. காஞ்சிபுரம்
3. வேலூர்
4. திருவண்ணாமலை
5. சேலம்
6. தருமபுரி
7. ஈரோடு
8. நாமக்கல்
9. கோயம்புத்தூர்
10. திருச்சிராப்பள்ளி
11. பெரம்பலூர்
12. புதுக்கோட்டை
13. திண்டுக்கல்
14. கரூர்
15. மதுரை
16. தூத்துக்குடி
17. இராமநாதபுரம்
18. சிவகங்கை
19. விருதுநகர்
20. திருநெல்வேலி

வனப்பாதுகாப்பினை பலப்படுத்த 5 மண்டலங்களுக்கு அதாவது சேலம், வேலூர், கோயம்புத்தூர், தருமபுரி மற்றும் ஈரோடு போன்ற 5 மண்டலங்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் வீதம் கம்பியில்லாத தொலைத் தொடர்பு சாதனங்கள் வாங்குவதற்கு ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

– சட்டப்பேரவையில் மாண்புமிகு செய்தி–விளம்பரம்,
வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
**திரு.எஸ்.எஸ். திருநாவுக்கரசு**

செங்கல்பட்டு கோட்டத்தில் செங்கல்பட்டில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிலும், தாம்பரத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும் 2 தடிமரம் சேமிப்பு கிடங்குகள் (Timber Depot) கட்டுவதற்கு ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர் கோட்டம் சைனமுண்டா தணிக்கைச் சாவடி, திருநெல்வேலி கண்ணுப்புளி தணிக்கைச் சாவடி (Forest Check Post) ஆகிய முக்கியமான இரண்டு வனத் தணிக்கைச் சாவடிகளுக்கு நிரந்தர கட்டடம் அமைத்து பலப்படுத்துவதற்கு ரூ.4.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் காலத்தில் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வரும் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்துவதற்காக ரூ.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர் கோட்டம் அமிர்தி உயிரியல் பூங்காவை மேம்படுத்துவதற்காக ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை வன உயிரினக் கோட்டம் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்கிட ஓய்வு அறைகள் (Dormitory) கட்டுதல் முதலிய பணிகளுக்கு ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருகிவரும் மக்களின் எரிபொருள் தேவையை சமாளிக்க தமிழ்நாடு வனத்துறை 1996ஆம் ஆண்டு வரை 2.70 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் குளக்கரை தோட்டங்களை உருவாக்கி உள்ளது. (Tank Bunds, Foreshore, etc.) 10 வருடங்களில் வருடந்தோறும் 25 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பளவில் முதிர்ந்த தோட்டங்கள் 2.70 இலட்சம் மெட்ரிக் டன் எரிமரம் வெட்டப்பட்டு பொது ஏலத்தில் விடப்படும். இதன் மூலம் ஆண்டுதோறும் ரூ.10 கோடி முதல் ரூ.13 கோடி வரை அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

முந்தைய அரசு எடுத்த முடிவின்படி பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சித்துறை பொறுப்பில் உள்ள குளங்களில் கருவேல் மரம் நட தடை விதிக்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் 39,209 பெரிய மற்றும் சிறிய குளங்கள் உள்ளன. இக்குளங்களின் மொத்த பரப்பளவு 2.88 இலட்சம் ஹெக்டேர் ஆகும். எனவே இந்த குளங்களில் பெரிய அளவில் மரங்கள் நட வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் சுற்றுச்சூழல் மேம்படுவது மட்டுமல்லாமல் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வருவாய் கிடைக்கும். எனவே இந்த அரசு பொதுப்பணி மற்றும் உள்ளாட்சித்துறை பராமரிப்பில் உள்ள தோட்டங்களில் கருவேல்மரம் நடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை ஆணையை நீக்க கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. எல்லா மாவட்டங்களிலும் முடிந்த அளவில் இந்தக் கருவேல் மரத் தோட்டங்களைக் குறைந்த காலத்தில் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்**
**(கூட்டு வன நிர்வாகம்)**

நமது அரசு ஜப்பான் சர்வதேச கூட்டு வங்கியின் (Japan Bank International Co-operation) நிதி உதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்னும் திட்டத்தினை ரூ.499.20 கோடி செலவில் 1994–95 ஆண்டு தயார் செய்து 1996–97ஆம் ஆண்டு முதல் 5 வருடங்களுக்குச் செயல்படுத்தும் வகையில் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 200 கிராமங்கள்



இத்திட்டத்தின் செயல்பாட்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டு வன நிர்வாக முறையில் தரமிழந்த காடுகளை ஒட்டியுள்ள கிராம மக்களின் ஒத்துழைப்புடன் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் 5ஆவது ஆண்டான நடப்பு நிதி ஆண்டில் ரூ.100 கோடி செலவில் 75,250 ஹெக்டேர் பரப்பளவில் மேலும் 200 கிராமங்களில் கிராம வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### திருப்பத்தூர் கூடுதல் சந்தன மரக்கிடங்கு தீ விபத்து

16.3.97 அன்று இத்தீ விபத்து ஏற்பட்டது.

03.4.97ல் நீதியரசர் திரு.இராமன் கமிஷன் நியமிக்கப்பட்டது.

### கமிஷனின் நோக்கங்கள்

1. தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலையை விசாரித்தல்.
2. தீயை உடனடியாக அணைப்பதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதா
3. தீ விபத்து ஏற்பட்டதைத் தவிர்த்திருக்கலாமா
4. இத்தீ விபத்து ஏற்பட்டது குறித்து விசாரித்து அதற்கு பொறுப்பானவர்கள் யார் என்று கண்டறிதல்
5. இத்தகைய தீ விபத்து வருங்காலத்தில் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

### கமிஷனின் பரிந்துரைகள்

1. நாசவேலை காரணமாக தீ விபத்து ஏற்பட்டது.
2. இது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட செயல் என்பதால் தீ விபத்தைத் தடுக்க இயலவில்லை
3. தீயைக் கட்டுப்படுத்த பயனுள்ள நடவடிக்கை உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படவில்லை.
4. இத் தீ விபத்திற்கு பணியாளர்கள்தான் காரணம் என்றும் ஆனால் அதற்குக் காரணமான நபர்களை ஆணையத்தால் அடையாளம் காண இயலவில்லை.

திரு.இராமன் கமிஷன் விசாரணை ஆணையத்தின் சிபாரிசின்படி இத்தீ விபத்திற்கு காரணமான குற்றவாளி யார் என்பதைக் கண்டுபிடித்து அரசுக்கு அறிக்கை அளிக்கும்படி C.B.(C.I.D) பணிக்கப்பட்டு, C.B.(C.I.D) விசாரித்து வருகிறது.

### தீயில் எரிந்த மரங்களின் மதிப்பு

முந்தைய அரசினால் மதிப்பீடு
செய்யப்பட்ட மதிப்பு : ரூ.68.45 கோடி

ஆனால் அது உண்மையல்ல. ஏறக்குறைய ரூ.193.97 கோடி அளவிற்கான சந்தன மரங்கள் அங்கு இருந்தன. மீதமுள்ள சுமார் ரூ.125.52 கோடி சந்தனமரங்கள் கடத்தப்பட்டு, இவையும் தீயில் எரிந்ததாக முந்தைய அரசினால் கணக்குக் காண்பிக்கப்பட்டுள்ளன.

### திருப்பத்தூர் சரகத்தில் 1-2-97ல் நடைபெற்ற சந்தனமரக் குற்ற வழக்கு

இவ்வழக்கில் முன்னாள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.சண்முகத்தின் தொடர்பு இருந்ததன்பேரில் அப்போதைய அரசு மாநில C.B(C.I.D) விசாரணைக்கு உத்தரவிட்டது. இதன்மீது டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மற்றும் ஜனதா தளத் தலைவர் திரு.வடிவேலு ஆகியோர் W.P. எண் 14051/97 என்ற வழக்கினை தொடுத்து இவ்வழக்கில் அரசியல்வாதிகள் தலையீடு இல்லாமல் பாரபட்சமின்றி நடைபெற ஏதுவாக C.B.I. விசாரணை வேண்டுமென்று கோரினர். இதன் பேரில் உயர்நீதிமன்றம் இவ்விசாரணையை C.B.I. யிடம் ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிட்டது. இந்த விசாரணையை C.B.I.க்கு மாற்றி பிறப்பித்த உத்தரவினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அப்போதைய அரசு 18.3.98ல் மேல்முறையீடு செய்தது. இதனால் C.B.I. கேட்ட மூல ஆவணங்களை வழங்கத் தேவையில்லை என்று அப்போதைய அரசு முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு அறிவுறுத்தியது. அதோடு நிற்காமல், சம்மந்தப்பட்ட மூல ஆவணங்கள் முன்னாள் முதலமைச்சர் அலுவலகத்தில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் முன்னாள் முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து திருப்பி ஒப்படைக்கப்படவில்லை என முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

### நில ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுதல்

கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்டங்கள் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் வன நிலங்கள் அதிகமாக ஆக்கிரமிப்பிலுள்ளன. இவைகளில் காப்பு நிலங்களும், காப்புக்காடுகளும் அடங்கியுள்ளன. இப்பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

### தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் - இரண்டாம் கட்டம்

அரசு ஜப்பான் நாட்டிடை கூட்டுறவு வங்கி அல்லது பிற அயல்நாட்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் இத்திட்டத்தினை 2002–2003 ஆம் ஆண்டு முதல் 2006–2007 வரை ஐந்தாண்டுகளில் செயல்படுத்த உள்ளது.

| | | |
|---|---|---|
| நிதி இலக்கு | – | ரூ.780 கோடி |
| ஆண்டிற்கு | – | 200 கிராமங்கள் வீதம் |
| 5 ஆண்டுகளுக்கு | – | 1000 கிராமங்கள் |
| மொத்தபரப்பு | – | 2,50,000 ஹெக்டேர் |

இத்திட்டத்தின் மூலம்,

1. நகர்புற மாசுக்கட்டுப்பாடு திட்டம்
2. மகளிர் மேம்பாட்டுப் பணிகள்
3. மலைவாழ் மக்களின் மேம்பாடு திட்டம்
4. வறுமை ஒழிப்பு



5. கிராம சமூக, பொருளாதார முன்னேற்றம்

6. நீர்பிடிப்பு மேம்பாட்டுப் பணிகள்

ஆகிய பயன்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

6 மாநகராட்சிகள் மற்றும் 94 நகராட்சிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு அங்கீகரித்து வெளிநாட்டு நிதியுதவி பெற மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

**புதிய திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவி**

மேலும் சில புதிய திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியுதவி பெற்றுதருவதன் பொருட்டு பணிக்குழு ஒன்று இந்த அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இரண்டு மாதங்களில் தனது பிரேரணைக் குறிப்புகளை அரசுக்கு சமர்ப்பிக்க உள்ளது.

**பெரிய அளவிலான மற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் **(Western Ghat Development Programme)**

இத்திட்டத்தினை 2001–2002ல் அரசு ரூ.327.87 இலட்சம் செலவில் 1,110 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. காடுகள் தரமிழந்து வருவதைத் தடுக்கவும் மற்றும் விலங்கினங்கள் மற்றும் தாவர இனத்தை அதிகப்படுத்தவும் இதன் மூலமாக திட்டமிடப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் **(Hill Area Development Programme)**

2001–2002ஆம் ஆண்டில் அரசு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.354.19 இலட்சம் செலவில் 115 ஹெக்டேர் பரப்பில் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி நீலகிரியில் உள்ள சுற்றுச்சூழலை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி, வன கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம்

இத்திட்டத்திற்காக அரசு ரூ.147.30 இலட்சம் செலவில் 2001–2002ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்கு அருகிலுள்ள கிராமங்களில் செயல்படுத்த தீர்மானித்துள்ளது.

அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்

இக்கழகம் வனத்துறையிலிருந்து 4279.78 ஹெக்டேர் நிலத்தினை குத்தகைக்கு எடுத்துள்ளது.

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | – ரூ.4 கோடி |
| செலுத்தப்பட்ட மூலதனம் | – ரூ. 2 கோடி |
| 2000–2001ஆம் ஆண்டில் நட்டம் | – ரூ.644.45 இலட்சம் |

**நட்டத்திற்கான காரணங்கள்**

முதல்வர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் இக்கழகம் தொடர்ந்து லாபத்தில் இயங்கி வந்தது.

முந்தைய அரசின் தவறான நிர்வாக முறையினால் கடந்த நான்கு ஆண்டுகளில் இக்கழகத்திற்கு ரூ.2130.85 இலட்சம் நட்டம் ஏற்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (TANTEA)

நோக்கம் : இலங்கையிலிருந்து திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக,

| | | |
|---|---|---|
| சாகுபடி பரப்பு | – | 4431.92 ஹெக்டேர் |
| 2000–2001ல் நட்டம் | – | 564 இலட்சம் |
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | – | 10 கோடி |
| செலுத்தப்பட்ட மூலதனம் | – | 596 இலட்சம் |
| நிரந்தரப் பணியாளர் | – | 7299 |
| தற்காலிகப் பணியாளர் | – | 5000 |

### தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் (TAFCORN)

| | | |
|---|---|---|
| தலைமையிடம் | – | திருச்சி |
| பங்கு மூலதனம் | – | ரூ.10 கோடி |
| செலுத்தப்பட்ட மூலதனம் | – | ரூ.3 கோடி |

71,013 ஹெக்டேர் காப்புக்காடுகள் வனத்துறையிலிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

#### குறிக்கோள்

கூழ்மரங்கள், முந்திரித்தோட்டங்கள் உற்பத்தி, விறகு மரங்கள் உற்பத்தி மற்றும் தொழிற்சாலைகளுக்கான வன மூலப் பொருள்கள் வழங்குதல்.

இக்கழகம் தற்போது இலாபத்தில் இயங்கி வருகிறது.

### சுற்றுச் சூழல்

சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தவும் நிலைத்த வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும், இந்த அரசு மாநிலத்தில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

சுற்றுச்சூழல் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் 560 சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கும் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே இயங்கி வரும் சுற்றுச்சூழல் மன்றங்களை வலுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுச்சூழல் மன்றங்கள் ரூ.15 இலட்சம் செலவில் சிறப்பாக செயல்படுத்தப்படும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்வதற்கும், சுற்றுச்சூழல் விழிப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றும் தன்னார்வ நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கவும், சுற்றுச்சூழல் குறித்த கருத்தரங்கங்கள் நடத்துவதற்கும், நடப்பு நிதி ஆண்டில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் துறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு தகவல்கள் அடங்கிய இணைய தளம் ஒன்றினை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டிற்கு உடனடி பயனளிக்கும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி பணிகளுக்கு மானியம் வழங்கவும் நடப்பு நிதி ஆண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆகமொத்தம் சுற்றுச்சூழல் துறை மூலமாக மட்டும் நடப்பு நிதியாண்டில் ரூ.30 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சுற்றுச்சூழலுக்கு குந்தகம் விளைவிக்காத வளர்ச்சியே நீடித்து நிற்கும் வளர்ச்சி ஆகும். எனவே சூழலுக்கு உகந்த வளர்ச்சியை மேற்கொள்ள "சுற்றுச்சூழல் தொலைநோக்கு கொள்கை 2005" (Enviro Vision 2005) வகுக்கப்பட்டு தமிழ்நாட்டை சுற்றுச்சூழல் மேம்பாட்டில் இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளைக் கண்காணிக்கும் பொருட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒரு சிறப்பு கண்காணிப்பு பிரிவினை ஏற்படுத்தி உள்ளது. இதன் மூலம் அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் 202 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு அவை தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்து இருக்கும் சிறிய முதலீட்டு தொழிற்சாலைகளில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Common Effluent Treatment Plant CETP) ஏற்படுத்துவதில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. இதுவரை 48 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டு இவற்றில் 32 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உள்ளது.

அபாயகரமான கழிவுகளை (Hazarduous Wastes) சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் திறம்பட கண்காணித்து வருகிறது. அபாயகரமான கழிவுகளை சுத்திகரித்து வெளியேற்றுவதற்காக மாசு கட்டுப்பாட்டு வாரியம் பின்வரும் 7 இடங்களை தெரிவு செய்துள்ளது.

1. காஞ்சிபுரம் மாவட்டம் – மேலக்கோட்டையூர்
2. திருவள்ளூர் மாவட்டம் – மணலூர்
3. கடலூர் மாவட்டம் – காணாதுகண்டான்
4. பெரம்பலூர் மாவட்டம் – கொலுக்கநத்தம்
5. வேலூர் மாவட்டம் – சேவூர்
6. தருமபுரி மாவட்டம் – துப்புகுன்ன கள்ளி
7. நாமக்கல் மாவட்டம் – தொட்டிப்பட்டி–பெரியபட்டி

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் வாயு கழிவுகளினாலும் மற்றும் பெருகி வரும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புற காற்று மாசுபட்டு வருகிறது. சுற்றுப்புற காற்று மாசுபடுவதை கண்காணிக்க வாரியம் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளில் இருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவு நீரினாலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சுத்திரிகரிக்கப்படாத கழிவு நீரினாலும் நதிகள் மாசுபடுகின்றன. இது குறித்து அவ்வப்போது நீர் மாதிரிகளைச் சேகரித்து மாசு கட்டுப்பாட்டு வாரியம் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக் கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும் நகரப் பகுதிகளில் விஞ்ஞான பூர்வமாக திடக் கழிவுகளைப் பிரித்து கையாண்டு வெளியேற்றுவது அவசரத் தேவையாகிறது. இது குறித்து தமிழகத்தில் சுற்றுலாத் தலங்களான ஊட்டி மற்றும் கொடைக்கானல் யாத்திரிகத் தலங்களான பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் ஆகிய பகுதிகளுக்கான ஒரு சாத்தியக் கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்கு ரூ.23.60 இலட்சம் வாரிய நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இது குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் தொடக்க அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளன. அவ்வறிக்கை உள்ளாட்சி அமைப்புகள் திடக் கழிவுகளை தீர்வு செய்யும் திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.

நகர திடக் கழிவுகளை உற்பத்தியாகும் இடத்திலேயே பிரிப்பதன் அவசியத்தையும், ஈரமான கழிவுகளை உரமாக்கவும், மறு சுழற்சி செய்யத்தக்க கழிவுகளை மறு சுழற்சி செய்யவும், மக்காத மற்றும் தீங்கான கழிவுப் பொருட்களைக் குறைக்கவும் சென்னை மாநகரத்தில் முன் மாதிரி திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மருத்துவ நுண்ணுயிர் (Bio-medical Waste) கழிவுகளை கையாளுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையை சார்ந்த அலுவலர்களுக்கும் மருத்துவ நிறுவனங்களுக்கும் பயிற்சி அளித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தற்போது தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட அலுவலகங்கள் 25 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதம் உள்ள மாவட்டங்களிலும் புதிய மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுற்றுச் சூழலை பாதுகாப்பதிலும் சுற்றுச் சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்துவதிலும் மாவட்டங்களில் மிகவும் திறம்பட செயல்படும் மாவட்ட ஆட்சியர்களுக்கு ஆண்டுதோறும் பசுமை விருதுகள் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்படி தேர்ந்தெடுக்கப்படும் மாவட்ட ஆட்சியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விருதினை வழங்குவார்கள்.

பிளாஸ்டிக் பொருட்களை தொடர்ந்து பயன்படுத்தி வருவதால் நமது சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் கேடுகளை அரசு உணர்ந்துள்ளது. அன்றாட வாழ்வில் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த வேண்டாமென்று மக்களுக்கு அறிவுறுத்த திட்டமிட்டுள்ளோம்.



வன வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்துதல், தரிசு நிலங்களை உரிய அளவுக்கு பயன்படுத்துதல், நீர்வரத்துப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற உயிரின வாழ்க்கைச் சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளிலும் ஓர் ஒருங்கிணைந்த அணுகு முறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி யுள்ளார்கள். சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாப்பதில் இந்த அரசு முழுமையான ஈடுபாடு காட்டும். •

# மீன்வளம்

சட்டப்பேரவையில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு.கே.பி. இராஜேந்திர பிரசாத்

2001–2002 நிதியாண்டில் ரூ.103.18 இலட்சத்தில் கீழ்காணும் புதிய திட்டங்களைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

- உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்குவதில் அக்கறைக் கொண்டுள்ள இவ்வரசு மீன்வளத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் வரும் நீர்நிலைகளுக்கு 75 மிதவைக் கூடுகள் வாங்க ரூ.4.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அதே போல் பாலார் – பொறந்தலாறில் தற்போதுள்ள மீன் பண்ணைகளின் நிலையை உயர்த்த ரூ.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கடல் மீனவர் நலனுக்காக நீண்ட நாள் கோரிக்கையான திருவள்ளூர் மாவட்டம் சுண்ணாம்புக்குளம், பெரியகுப்பம் ஆகிய இடங்களில் முதன்மை வாய்க்கால் மற்றும் படகு நிறுத்தும் வசதிகளை ஏற்படுத்த ரூ.5.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இரண்டு மீன் சினைப் பண்ணைகளை வலுப்படுத்தி உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தேனாம்பேட்டையில் உள்ள அலுவலர்கள் பணிபுரியும், மீன்வளத் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் அலுவலகத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கும் பொருட்டு ஆழ்துளை கிணறு அமைக்க ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கடல் மீனவர்கள் நலத் திட்டங்களை செம்மையாக செயல்படுத்த மீன்வளத்துறைக்குச் சொந்தமான படகுகளை பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தலுக்கு ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கடலில் மீன்பிடிக்க செல்பவர்களுக்கு மீன் ஆதாரம் குறித்த தகவல்களை அறிவிக்கும் நவீன முறையை வலுப்படுத்த ரூ.5.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கடலில் மீன்கூட்டம் இருக்கும் இடத்தை அறிந்து அதனை மீனவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க இயலும்.
- கடல் மீனவர் பாதுகாப்புக்காக 8,500 மீன்பிடி படகுகளில் வண்ணம் பூசுவதற்கு ரூ.42.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 41,770 பாரம்பரிய மீன்பிடிக் கலங்களில் சுமார் 25,000 மீன்பிடிக் கலங்களில் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அவற்றில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் எரிபொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர சுமார் 8,000 இயந்திரப் படகுகள்





• மிகவும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மண்ணெண்ணையை எரிபொருளாக உபயோகிக்கும் பாரம்பரிய மீன்பிடி கலன்களை பயன்படுத்தும் மீனவர்களுக்கு எந்த ஒரு மானியமும் அரசால் வழங்கப்படுவதில்லை. ஆகவே, மண்ணெண்ணையை எரிபொருளாக பயன்படுத்தும் மீனவர்களுக்கு ஆயத் தீர்வையில் ஒரு லிட்டருக்கு 50 காசுகள் மானியம் வழங்க ஆணை வேண்டுதல்.

• திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு கடல் பகுதியில் முகத்துவாரம் அடைப்பினை நீக்கி மீனவர் தொழில் மேம்பட போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ள ஆணை வேண்டுதல்.

மூன்று கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பிலுள்ள மீன்களை பிடிக்க பயன்படுத்தப் படுகின்றன. இவைகளை இயக்க டீசல் எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது.

டீசல் எரிபொருளாக பயன்படுத்தும் இயந்திரப் படகுகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்காக மைய அரசுடன் சேர்ந்து மாநில அரசு ஆயத்தீர்வையில் ஒரு பகுதியை மானியமாக வழங்கிவருகிறது. இதன்மூலம் லிட்டருக்கு 45 காசுகள் வீதம் ரூ.200 இலட்சம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் சென்ற ஆண்டு பல்வேறு காரணங்களால் இத்தொகை முழுவதும் பயன்படுத்தப்படாததால் செலவழிக்கப்படாத ரூ.78 இலட்சம் திருப்பி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது. இவ்வாண்டு இக்குறைபாடுகளை அகற்றி ஒதுக்கீடு முழுவதும் பயனாளிகளுக்கு போய் சேரும் வகையில் இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி பல திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இருப்பினும் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்திட கருணை உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின்படி பல புதிய திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவையாவன:

- வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மீனவ குடும்பங்களுக்கு சேமிப்பு மற்றும் நிவாரண திட்டத்தின் கீழ் வழங்கும் நிவாரணத் தொகையுடன் இவ்வாண்டு முதல் கடலில் மீன் பிடிக்கச் செல்ல இயலாத நான்கு மாதங்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி வீதம் 80 கிலோ அரிசி பொது விநியோக மையங்கள் மூலம் சலுகை விலையில் கூடுதலாக வழங்க ஆணை வேண்டுதல்.
- 300 மீனவ கிராமங்களில் பொதுக் கழிப்பிடம் ஊரக வளர்ச்சித் துறை மூலம் இந்தாண்டு கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஈமச்சடங்கிற்காக குடும்பத்தில் ஒருவருக்கு ரூ.500 வழங்கப்படும்.
- உள்நாட்டு மீனவர்கள் கணக்கெடுத்தல் நடத்தப்படும்.
- மீனவர்களின் குழந்தைகளுக்கு படகோட்டுதல் மற்றும் நீச்சல் பயிற்சி விளையாட்டுகளில் பங்குபெறும் வண்ணம் தமிழ்நாடு மாநில விளையாட்டுத் துறை மூலமாக மேற்கொள்ளப்படும்.
- மீனவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஊராட்சிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மீனவர் நல கருத்தரங்கு மாதம் ஒன்றுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் நடத்தப்படும்.
- வயது முதிர்ந்த மீனவர் மற்றும் குறைந்த வருமானமுள்ள மீனவர்களுக்கு முதியோருக்கான ஓய்வூதியத் திட்டம் விரிவு படுத்தத் தேவையான நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும்.
- மீனவ கிராமங்களுக்கு மருத்துவ வசதிகள் நடமாடும் ஊர்தி மூலம் செய்து தரப்படும்.
- மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ள மீனவர்களுக்கு தன்னாற்றல் பெறுவதற்கான விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்படும்.
- தூய்மையாக உள்ள 10 மீனவ கிராமங்களைத் தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கப்படும். •

# ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலன்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திரு. **வீ.சுப்பிரமணியன்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடப்பு நிதியாண்டில் ஆதிதிராவிட மாணவ மாணவியர் கல்வி மேம்பாட்டிற்காக பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்த சிறப்பு அனுமதி அளித்துள்ளார்கள்.

சென்னையில் முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் ஆதிதிராவிட மாணவியருக்கு எனத் தனியாக அரசு விடுதி இல்லாமல் இருந்தது. இந்தக் குறைப் போக்கிட ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் சென்னையில் ஆதிதிராவிட மாணவியருக்கென தனியாக ரூ.6.93 இலட்சம் செலவில் ஒரு விடுதி உடனடியாக திறக்கப்படும்.

15 ஆதிதிராவிட நல ஆரம்பப் பள்ளிகள் ரூ.14.06 இலட்சம் மதிப்பீட்டில் இடைநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

இரண்டு ஆதிதிராவிட நல இடைப்பள்ளிகள் ரூ. 47.04 இலட்சம் மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

அதேபோல், 2 ஆதிதிராவிட உயர்நிலைப் பள்ளிகள் ரூ.43.76 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

கல்லூரி விடுதியில் தங்கி படிக்கும் 500 மாணவர்களுக்கு ரூ.17.50 இலட்சம் செலவில் விடுதிகளில் கட்டில், மேசை, நாற்காலிகள் போன்ற வசதிகள் செய்து தரப்படும்.



50 ஆதிதிராவிட நல விடுதிகளுக்கு ரூ.25 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் தரப்படும்.

19 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.74.90 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர்கள் கட்டப்படும்.

ரூ.73.63 இலட்சம் செலவில் மாணவர் விடுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

ரூ.12.98 இலட்சம் செலவில் 4 ஆதிதிராவிட மேல்நிலைப்பள்ளிகளுக்காக சுற்றுச்சுவர் கட்டித் தரப்படும்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி அல்லாத பிற இடங்களில் 2 அரசு உண்டி உறைவிட துவக்கப்பள்ளிகள் ரூ.6.33 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததை தொடர்ந்து, இந்த நிதியாண்டில், 20,000 ஆதிதிராவிட மகளிருக்கு, ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் வகையில் மகளிர் கூட்டமைப்பு ஏற்படுத்தி, வேலைவாய்ப்புக்கான சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படும்.

அதேபோல், நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார நிலை பயிர்த்தொழில் மூலம் மேன்மையுறும் வகையில், முதலமைச்சர் அவர்கள் அறிவித்த வேளாண்துறையின் சிறப்புக்கூறுகள் திட்டத்தின்கீழ், கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, தினை, சாமை மற்றும் சில பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் 80,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்க நடப்பு நிதியாண்டில் ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதுநிலை பட்டப்படிப்பு வரை ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவசக் கல்வித்திட்டம். விடுதியில் தங்கி படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு அரசால் வழங்கப்படும் உணவுக் கட்டணம் மாதம் ரூ225–லிருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மாணவர்களும், மாணவிகளும் கடந்த ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகின்றேன்.

மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்வி, சட்டக் கல்வி மற்றும் உயர்கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு புத்தக வங்கியின் மூலம் இரண்டு மாணவர்களுக்கு ஒரு செட் புத்தகம் இலவசமாக அரசு வழங்கி வருகிறது. அவர்கள் படிக்கின்ற புத்தகங்களின் விலை ரூ.500 முதல் ரூ.1,000 வரை உள்ளதால் அப்புத்தகங்களை அவர்கள் சுலபமாக வாங்கிப்படிப்பதில் பெரும் பொருளாதார சிரமங்கள் உள்ள நிலையை உணர்ந்து, அரசு இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது.

கடந்த ஆட்சியில் இந்த திட்டத்திற்கு சென்ற ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய ரூ.64 இலட்சம் தொகையைச் செலவிடுவதற்கு அரசு உரிய ஆணையை போடாமல், அந்த தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு புத்தகமே வாங்கித்தராமல், அந்த 64 இலட்சம் ரூபாயை Surrender செய்யப் பட்டுள்ளது.



### ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள்

17.7.2001 அன்று முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் திட்ட ஆய்வுக் கூட்டத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்கும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு பகுதியினை ஆதி திராவிடர்கள் அடிப்படை வசதிகளுக்காக பிரித்தளிக்கலாம் என்ற ஆலோசனை மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மனைப்பகுதிகளில் போதிய அடிப்படை வசதிகள் உள்ளாட்சிகளால் செய்து தரப்படாமையால், அந்த இலவச வீட்டுமனைகள் பயனாளிகளால் பயன்படுத்திக்கொள்ள இயலாமல் நீண்ட காலமாக காலியாக உள்ளன. ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் அமையும் குடியிருப்புகளுக்கும் போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க இத்துறையில் தனியே நிதி ஒதுக்கீடு இல்லை. இக்குடியிருப்புகளுக்கு மின்சார வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி போன்றவைகளை அந்தந்த துறைகளே செய்கின்றன. இந்த வசதிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு சென்றடைய காலதாமதம் ஏற்படுகிறது. எனவே இலவச மனைப்பட்டா வழங்கி பட்டா பெற்ற பயனாளிகள் எண்ணிக்கையை அதிகமாக்கு வதைவிட இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நில கையகம் செய்ய இத்துறை ஒதுக்கும் நிதியிலிருந்து 50 சதவிகிதத்திற்கு குறையாமல் நிதியை ஏற்கெனவே மனைப்பட்டா வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகள் முழுமையாக செய்யப்படாமல் உள்ள இடங்கள் மற்றும் இனிமேல் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படவுள்ள இடங்கள் ஆகியவற்றில் அடிப்படை வசதிகள் செய்து தர பயன்படுத்திக்கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவிற்கு முதலமைச்சர் அவர்கள் தற்போது ஒப்புதல் அறிவித்துள்ளார்கள். மீதமுள்ள 50 சதவிகிதத் தொகை வீட்டுமனைப்பட்டா வழங்க தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

இத்துறையின் கீழ் இயங்கிவரும் 1,075 விடுதிகளில், 574 விடுதிகள் தனியார் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த 574 விடுதிகளுக்கும் அரசு கட்டடம் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கென நடப்பாண்டிற்கு ஆரம்பக்கட்ட நிதியாக ரூ.38.86 கோடியை முதல்வர் அவர்கள் ஒதுக்கி யுள்ளார்கள் என்ற செய்தியினை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளேன்.

முந்தைய அரசால் சில திட்டங்கள் சரிவர செயல் படுத்தப்படாமையால் ஒதுக்கப் பட்ட தொகை முழுமையாக பயன்படுத்தப்படாமல் கணிசமான அளவில் அரசு கணக்கிற்கு திருப்பப்பட்டுள்ளது. அதாவது Surrender செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கடந்த 2000–2001ம் ஆண்டில் Surrender செய்த தொகை விவரம் பின்வருமாறு:

உழவுமாடுகள் வழங்க ஒதுக்கப்பட்ட நிதியான ரூ.2.32 இலட்சத்தில் ரூ.2.02 இலட்சம் Surrender செய்யப்பட்டுள்ளது.

சீருடை தையற்கூலி போன்ற செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.727.46 இலட்சத்தில், ரூ.431.84 இலட்சம் Surrender செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட நலப்பள்ளியில் பயிலும் மாணவர் களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.300 இலட்சத்தில் ரூ.172.70 இலட்சம் Surrender செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் பொதுப்பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள்/நோட்டுப்புத்தகங்கள் வழங்க ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.940 இலட்சத்தில் ரூ.853.24 இலட்சம் Surrender செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் முந்தைய ஆட்சிக்காலத்தில் துவங்கப்பட்ட முப்பெரும் பொருளாதார முன்னேற்ற திட்டங்களான பின்னலாடை தொழிற்பேட்டைகள், பட்டு வளர்ப்புத் திட்டம், இறால் வளர்ப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு புத்துயிர் அளிக்கப்படும்.

• • •

# கிராமிய குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரம் தமிழகத்திலும் - உலகளவிலும்

□ லென்னாட் நில்சன்
டேனிடா முதன்மை ஆலோசகர்



குடிநீர் மற்றும் சுகாதாரம் என்பது நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அக்கறை மட்டுமின்றி உலகின் அனைத்து நாடுகளும் கவனம் செலுத்த வேண்டிய, ஒரு காரியமாகும்.

உலக மக்கட் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் சுத்தமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற முடியாமல் இருக்கின்றனர். முன்னேறிவரும் நாடுகளில் வாழும் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் போதுமான சுகாதார வசதி இல்லாமல் இருக்கின்றனர். ஆண்டுதோறும் உலகளவில் 30 இலட்சம் மக்கள் மாசுபட்ட குடிநீர் பருகுவதாலும், சுகாதார வசதிக் குறைவினாலும், தண்ணீர் மூலம் பரவக்கூடிய வியாதிகளினால் பாதிக்கப்பட்டு மரணமடைகிறார்கள். இந்த விவரங்கள் யாவும் நமக்கு கவலை அளிக்கக் கூடியவை தான். இருப்பினும் நிலைமைகளை சீரடையச் செய்வதற்கு நாம் ஏதாகிலும் செய்தாக வேண்டும். வேகமாக செயல்பட வேண்டும்.

நிறைய காரியங்கள் செயல்படுத்த முடியும். இந்தியாவிலும் பிற முன்னேறி வரும் நாடுகளிலும் குடிநீர் மற்றும் சுகாதார பிரச்சினைகளை மேற்கொள்ளுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றிகண்ட வளமான அனுபவங்கள் உண்டு. இந்த அனுபவங்களைப் பின்பற்றி நாம் தமிழ் நாட்டிலும், சீர் குலைந்து வரும் குடிநீர் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்தலாம்.

தமிழ்நாட்டில் டேனிடா உதவியுடன் செயல்படுத்தப் பட்டு வரும் குடிநீர் சுகாதார திட்டத்தைப்பற்றி, ஏற்கெனவே அடைந்துள்ள வெற்றியின் அனுபவங்களைப் பின்பற்றி, எவ்வாறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதைக் குறித்து எழுதப்போகிறேன்.

ஏற்கெனவே அடைந்த வெற்றியின் அனுபவங்கள் என்று சொன்னால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட மாதிரி திட்டங்களோ அல்லது வரைபடங்களோ உள்ளன என்று பொருள்படாது. துரதிஷ்டவசமாக அது அவ்வளவு எளிதானதும் அல்ல.

குடிநீர் சாதனங்களைப் பொருத்தமட்டில், தொழில்நுட்பம் எவ்வளவுக் கெவ்வளவு எளிமையானதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. எளிய தொழில் நுட்பங்கள் மூலம் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் சாதனங்கள் இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் சுலப மானவை. ஆகவே, அதி நுட்பமான சிக்கலான தொழில் நுட்பங்களை விட நாம் குறைந்த செலவினத்தையுடைய எளிய தொழில் நுட்பங்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படிப்பட்ட எளிய தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்ளுமுன் அப்படிப்பட்ட சாதனங்களை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்து முன்னேற்ற வேண்டும்.

மக்கள் பங்கேற்கும் முறை வெறும், கொள்கையளவில் மட்டும் இருந்த நிலையை மாற்றி, அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்ற அளவிற்கு முயற்சி செய்து வெற்றி கண்டவர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்.

குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளுக்கென கட்டடங்கள் கட்டுவது எந்த ஒரு பாரம்பரிய நிறுவனத்திற்கும் எளிது. அவற்றை அவர்களால் கட்டி முடிக்கக் கூடும். எனினும் இப்படி கட்டப்பட்ட வசதிகள், சரியான படி இயக்குதலும் பராமரிப்பும் இல்லா விட்டால் உபயோகிக்க ஆரம்பித்த சில தினங்களில் அவை கவனிப்பாரின்றி வீணாகி பழுதடைகின்றன.

வியாதிகளை குறைப்பதற்கென பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் உருவாக்குவது மட்டும் போதாது. அப்படிப்பட்ட அமைப்புகளை சுற்றியுள்ள இடங்களை சுத்தமாக வைத்திருப்பதும், தனியார் வீடுகளில் குடிநீர் புழங்கும் பொழுது சுகாதார முறைகளை சரிவர கையாளுவதும் முக்கியம்.

நல்ல சுகாதாரமும் சரியான முறையில் கழிவறைகளை பயன்படுத்துவதும் ஆகியவை உடல் நிலையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு சிறந்த வழிகளாகும்.

உலகம் முழுமையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் இன்னொரு உண்மை என்னவென்றால் தண்ணீர்

சமூகத்திற்கும் – பொருளாதாரத்திற்கும் தேவைப்படும் ஒரு முக்கிய பொருளாகக் கருத வேண்டும். அதன் மதிப்பை உணரும் வகையில், தண்ணீரை உபயோகிப்பவர் ஒவ்வொருவரும் அதற்குரிய கிரயத்தை செலுத்த வேண்டும். தண்ணீர் விரையமாவதை தடுத்து நிறுத்தி எல்லோரும் தண்ணீருக்கென செலுத்தும் பணத்திற்குரிய முழுபலனையும் பெறவேண்டும். "இலவசமான தண்ணீர்" என்னும் கோட்பாடு, பூகோள அமைப்பு, மழை பெய்யும் தன்மைகள் – குடியிருப்புகளின் அமைப்பு அல்லது கிராமங்களின் அமைப்புகள் – பாரம்பரிய பழக்க வழக்கங்கள் – பொருளாதார சூழ்நிலை – அரசு அமைப்பு – தொழில் நுட்ப அறிவு போன்ற பல காரியங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளில் இடத்துக்கு இடம் தீர்வு காண வேண்டிய வழிகளில் தடை ஏற்படுத்தக் கூடியவை. இருந்த போதிலும் கடந்த இருபது ஆண்டு காலத்தில் வளர்ந்து வரும் நாடுகளின் அனுபவங்கள் மூலமாக சர்வதேச ரீதியில் நாம் கற்றறிந்த பாடங்கள் அநேகம் உண்டு.

இந்த அனுபவங்களில் ஒன்று தான் மக்கள் பங்கேற்பு முறையில் நடைமுறைபடுத்தப்படும் திட்டம். இதற்கு ஆரம்ப கட்டம் முதல் அதாவது திட்டம் தீட்டுவதிலிருந்து, செயலாக்கம் முடியும் வரை மக்கள் பங்கேற்பு அவசியம். இவ்வாறாக மக்கள் ஈடுபாட்டுடன் திட்டம் செயல்படுத்தப் படாவிட்டால், ஏற்படுத்தப்படும் வசதிகள் (அல்லது) முடிக்கப்படும் திட்டங்கள் நமக்குச் சொந்தமானது என்று உரிமை பாராட்டி திட்டத்தை பராமரிக்கும் அளவிற்கு சமுதாயத்திற்கு பொறுப்புணர்ச்சியே இல்லாமல் போய் விடும்.

மற்றொரு படிப்பினை என்னவென்றால், தேவையான திட்டத்தை (அல்லது) வசதியை அனுபவிக்க விரும்பும் மக்கள், தாமாக முன்வந்து கேட்டு, அதன் அடிப்படையில் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். தங்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் வெளிப்படுத்தாத நிலையில், அவர்கள் கேட்காத ஒரு திட்டத்தை, நாமாகவே ஏற்று எவ்வளவு தொழில்நுட்ப நுணுக்கத்துடன் நிறைவேற்றினாலும், அந்த திட்டம் தோல்வி அடைந்துவிடும். மக்களின் அடிப்படை தேவைகளை மனதில் கொண்டு நல்ல எண்ணத்துடன் முந்தைய ஆண்டுகளில் அரசின் மூலம் செயல்படுத்தப்பட்ட பிரம்மாண்டமான இலவச திட்டங்கள், பல சமயங்களில் பராமரிக்க முடியாத அளவிற்கு நிதி நெருக்கடியை உண்டாக்கி அவை பெருத்த சுமையாகிவிட்டன.

குடிநீர் மற்றும் சுகாதார திட்டங்களைப் பொருத்தவரையில், நாம் கண்டறிந்த மற்றுமொரு காரியம் எல்லா நிலைகளிலும் பெண்களின் ஊக்கமான ஈடுபாடும் பங்கேற்பும் இருக்கும்பொழுது, செயலாக்கம் துரிதமாக முன்னேறுவது மட்டுமின்றி, முடிவுற்ற திட்டம் நீடித்தும் பயனளிக்கின்றது. இதில் அதிகமாக வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. பெண்களைத் தவிர குடிநீர் மற்றும் சுகாதாரத்தைக் குறித்து குடும்பங்களில் பொறுப்பேற்கக் கூடியவர்கள் யார்? குடிநீர் கை பம்பு பழுதடைந்தால் பெண்களையல்லாமல் அதிகமாக அவதியுறுகிறவர்கள் யார்? சாதாரணமாக வசதி படைத்தவர்களுக்கு மட்டும் அதிக அளவில் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பையும் ஏழைகளுக்குக் கொஞ்சம் அல்லது தண்ணீரே இல்லை என்ற நிலையையும் உருவாக்கும்.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் "டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டம்" மேற்கூறிய உலக படிப்பினைகளை கடைப்பிடித்து – திட்ட அலுவலர்கள் மூலம் செயலாக்கம் செய்ய முயற்சித்து வருகிறது.

ஒவ்வொரு ஊராட்சியிலும், அந்தந்த இடத்திற்கும், அங்கு நிலவும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு தீர்வுகள் காணப்படுகின்றன. இவ்விரு மாவட்டங்களிலும் வாழும் மக்களுக்கு, திட்டம் செயல்படுத்த சாதகமான சூழ்நிலைகள் உள்ளன, அவையாவன: நிலைத்த குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெறும் வகையில் எளிதில் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீர் மற்றும் குடிநீர் வசதிக்கான அமைப்புகள் – திறமையாக செயல்படும் மாவட்ட நிர்வாகம் மற்றும் ஊராட்சி மன்றங்கள்.



திட்டம் செயல்படுத்த முடியாத நிலைக்கு இடையூறாக இருக்கும் சில சூழ்நிலைகளும் உண்டு, அவையாவன: சுகாதாரம் மற்றும் உடல் நலத்தைப் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு மிகக் குறைவாகவுள்ளன. திட்டம் நிறைவேற்றும் பொழுது, பங்கேற்பதில் ஆர்வமின்மை, தாமாக முன் வராமல் மற்றவர்கள் முதலில் செய்யட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் அல்லது அரசாங்கமே முன்வந்து இலவசமாக செய்யட்டும் என்ற – மெத்தனப் போக்கு.

டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டம் இப்படிப்பட்ட இடையூறுகளால் ஏற்படும் சவால்களை பல்வேறு வழிகளில் சந்தித்து பல நிலைகளில் வெற்றி கண்டிருக்கின்றது.

★ ★ ★

# நீதி நிருவாகம்

சட்டமன்றப் பேரவையில் 28.8.2001 அன்று நீதி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின்போது, மாண்புமிகு நீதி மற்றும் சட்ட அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்களால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு கீழ்க்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

பல்லாண்டுகளாகத் தேங்கிக் கிடந்த அமர்வு நீதிமன்ற (Sessions Court) வழக்குகளை விரைவில் விசாரிக்கும்பொருட்டு, விசாரணையின்றி (Trial) சிறையில் வாடும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விரைந்து நீதி கிடைக்க வழிபிறக்கும் வகையிலும் உயர் நீதிமன்றத்தைக் கலந்து ஆலோசித்து உடனடியாக 30 Fast Track நீதிமன்றங்கள் அமைப்பதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் மேலும் 19 நீதிமன்றங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை அதிகாரிகளுக்கு (Judicial Officers) நடப்பிலுள்ள சட்டங்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள், வழக்குகளில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகள் போன்ற சமீபத்திய நிகழ்வுகள் குறித்த (Latest Information) விவரம் ஆகியவற்றை உள்ளடக்கிய பயிற்சி அவசியம் என்பதால் தமிழ்நாடு நீதித்துறை பயிற்சி மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணி ரூ.6.70 கோடி செலவில் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

★ நீதித்துறை அதிகாரிகளுக்காக ஒரு விருந்தினர் இல்லம் கட்டுவது என்பது நீதித்துறையின் நீண்டகால கோரிக்கையாகும். ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் சென்னை எழும்பூர் பெருநகர முதன்மை குற்றவியல் நடுவர் மாளிகை வளாகத்திற்குள், நீதித்துறை அதிகாரிகளுக்காக விருந்தினர் இல்லம் கட்டுவதற்குத் தேவையான நிதி இந்த அரசால் ஒதுக்கப்படும்.

★ குற்றவியல் வழக்கு தொடர்வுத் துறையில் வெளியிடப்படும் "தமிழ்நாடு குற்ற வழக்குரைஞர் இதழ்" (Tamil Nadu Prosecutors Journal) சமீப காலத் தீர்ப்புகள், துறை அறிஞர்களின் கட்டுரைகள் ஆகியவற்றுடன் புதிய மேம்பாட்டுடன் சிறப்பாக வெளியிட, உதவி இயக்குநர் தரத்தில் புதிய பணியிடமும், அவருக்கு உதவ கூடுதல் பணியிடங்களும் வழங்கி ஆணை பிறப்பிக்கப்படும்.

★ இவை தவிர, குற்றவியல் வழக்கு தொடர்வுத்துறையில் 11 துணை இயக்குநர்கள் பயன்படுத்த 11 ஜீப்புகளையும் வழங்கி ஆணை பிறப்பிக்கப்படும்.

★ நிலுவையிலுள்ள வழக்குகளைத் துரிதமாக தீர்வு செய்ய ஊக்குவிக்கும் வகையில் 19 மாவட்ட நீதிபதி பணியிடங்கள் சிறப்பு நிலை தரத்துக்கு உயர்த்தப்படும்.

❖ ❖ ❖

அவர்களில் 10,800 பேருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக மொத்தம் ரூ.4.08 கோடி இந்த ஆண்டு செலவிடப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடன் மற்றும் மானியத் திட்டத்தில் பயன் பெற பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விலக்களித்தல்**

வறுமைக்கோட்டிற்குச் சற்று அதிகமாக வருமானம் உள்ள குடும்பங்கள் பயனடைய கடன் மற்றும் மானியத் திட்டத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ரூ.40,000 வரை கடன் தொகை பெறலாம். ரூ.10,000 மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் மிகச் சுலபமாக கடன்பெறுவதற்காக பட்டா



பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைத் தாள் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்களித்து உத்தரவிட முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். நடப்பு நிதியாண்டில் ரூ.7.45 கோடி இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1828 வீடுகள் கட்டப்படும்.

**ஊரகப் பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல்**

பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.151.32 கோடி செலவில் 1446.49 கி.மீ. நீளத்தில் ஊரகப் பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைக்கப்படும். 1,572 வடிகால் வசதிகளும் ஏற்படுத்தப்படும். பிரதம மந்திரி கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1,446.49 கி.மீ. நீளத்தில் ஊரகச் சாலைகளை அமைப்பதற்கு ஏற்படும் திட்டமிடாச் செலவிற்கு குறிப்பாக ஒப்பந்தப்புள்ளி வெளியிட விளம்பரச் செலவு, மண் பரிசோதனை செய்தல், தரக்கட்டுப்பாடு, சிறு மேற்பார்வை போன்ற பணிகளுக்காக தமிழக அரசு ரூ.7.5 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

**சிறுபாசன குளங்கள் புனரமைத்தல்**

தமிழ்நாட்டில் 23,156 சிறுபாசன குளங்கள் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளன. இந்த சிறுபாசன குளங்களில் தூர்வாரப்படாததாலும், ஆக்கிரமிப்பாலும், நகர்ப்புறங்களாக மாற்றப்படுதலாலும், புதிய தொழிற்சாலை உருவாக்கப்பட்டிருப்பதாலும் இந்த குளங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. இத்தகைய சீர்குலைவினால் நிலத்தடி நீர் குறைந்தது மட்டுமின்றி, பாசனத்திற்கும், வீட்டுத் தேவைக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த அரசு சிறுபாசன குளங்கள் புனரமைப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, ''ஒரே தடவையில் சீரமைக்கும் முயற்சியின் கீழ்'', கிராம மக்களைக் கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், குளங்களை ஆழப்படுத்துதல், குளங்களின் கரைகளை வலுப்படுத்துதல், தூர்வாருதல், மதகுகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 23,156 சிறுபாசன குளங்களை மேம்படுத்துவதற்கு ரூ.1157.80 கோடி செலவில் புதிய திட்டம் ஒன்று நிறைவேற்றப்படும்.

**உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி**

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடந்து முடிந்த பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா பிரதிநிதிகளுக்கும் ஊராட்சி சட்டம் முறையாக புரிந்துகொள்ளும் அளவிலும், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் பற்றியும், அவரவர்கள் பதவியின் தன்மை பற்றியும், அதிகார வரையறை பற்றியும் மற்றும் அதிகார வரம்பு மீறப்பட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் ஒரு முழுமையான பயிற்சியினை தர அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக, நடைமுறை குறித்தும், நிர்வாகத்தை திறமையாகவும், துரிதமாகவும் நடத்துவதற்கு தேவையான பயிற்சி மறைமலை நகரில் அமைந்துள்ள மாநில ஊரக பயிற்சி நிறுவனத்திலும் மற்றும் ஐந்து ஊரக விரிவாக்க பயிற்சி மையங்களிலும் அளிக்கப்படும். •

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை — தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை—600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906
இ—மெயில் : tamilarasu@tn.nic.in

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.

கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி * ரூ. 6 | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டாபிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.


தமிழரசு
R.N.I.No. 21446/70
Licence No.G/TN/CPMG/190,WPP-130